தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

இனியேனும் ஒன்றிணைவீர்!

கதைபேசி, இலக்கியங்கள் சலிக்கப் பேசிக்
கற்பனையாம் பொய், புளுகில்-கலைகள், தம்மில்
புதைபட்டீர்; காலமெல்லாம் போக்கி விட்டீர்!
புரைபட்டீர்; கறைபட்டீர்; பார்ப்பான் காலில்
உதைபட்டீர்; வதைபட்டீர்; அடிமைப் பட்டீர்!
ஓடோடித் துயர்ப்பட்டீர்! உருப்பட் டீரா?
சிதைபட்டீர், தமிழர்களே! இனிமே லேனும்
சேர்ந்திணைந்து செயல்பட்டே இனங்காப் பீரே!

(தொடர்ச்சி 1-ஆம் பக்கம்)

சுவடி: 10
ஓலை: 10

நமக்கு வந்த மடல்கள்.

0: 359: மேடைப்பேச்சு "மறவர்"கள் மலிந்துபோன தமிழ் நாட்டில் தங்களைப் போலும் செயல் மறவர்கள் சிலர் உண்டென்பதை அறிந்து மகிழ்ந்தோம். உ. த. க. பற்றியும் தனித் தமிழ்நாடு கோரிக்கை பற்றியும் கேள்வியுற்ற நாங்கள் தமிழர்களுக்கு ஒளிமிக்க எதிர்காலம் உண்டென்பதில் நம்பிக்கை கொள்கின்றோம். தனித்தமிழ்நாடு பிரிவினைக்கு எங்களால் ஆன முழு உதவி ஒத்துழைப்புகளைத்தர அணியமாக உள்ளோம்.

—முரு. குழ. வீரசிங்கம்.—இலண்டன். இ. கஉ.

0: 360: தங்களின் ஆசிரிய உரையினைப் பன்முறை திரும்பத் திரும்பப் படித்தேன். இப்படியொரு தொகுப்பைத்தான் பல மாதங்களாய் எதிர்பார்த்திருந்தேன். அதில் உள்ள குறிப்புகளை நண்பர்களிடம் எடுத்துரைத்து வருகிறேன். இன்னும் நான்கு இதழ்கள் ஆனாலும் பக்கங்கள் பெருகினாலும் தாழ்வில்லை. விரிவாக எழுதுங்கள். தாங்களெழுதும் இத்தொடர் முழுவதும் பயன் தரத்தக்கன. தமிழர்களின் மூளை மழுங்கிவிட்டது. அவர்கள் அடிமை நிலையில் அழுங்கிக் கிடக்கிறார்கள். அவர்களுக்குத் தாங்கள் அடிமைகள் என்பதே தெரிய வழியில்லை. இந்நிலையைத் தங்களால்தாம் நீக்கவியலும்.

இரா. திலகவரசன்—சேலம்.

0: 361: "ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்" என்ற தங்களது ஆசிரியவுரைகள் இரண்டினையும் படித்தேன். பார்ப்பன நச்சுப் பாம்புகள் நம்மை எவ்வாறெல்லாம் துன்புறுத்தி வருகின்றன என்பதையும், நாமே அந்தப் பாம்புகளுக்குப் பால் வார்த்துக் கொண்டிருக்கும் கழிவிரக்கக் காட்சியினையும் கண்டு துயருற்றேன். தாங்கள் தெள்ளத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்ற உண்மைகளை மறுப்பதற்கு ஆளில்லை; அந்த வீர உரைகளைப் படித்தவுடனேயே எனது உடலில் புதிய வலிவு உண்டாகின்றது. அரசியலிலே இன்று தாங்கள் செல்லுகின்ற—காட்டுகின்ற பாதை மிகச் சரியானதே! நமக்கு நாமே எதிரிகளாக இருந்து நம்மை நாமே அழித்துக் கொள்கிறோம். தங்களது தமிழ்ப்பணியும் குமுகாயப்பணியும் தலைவணங்கிப் போற்றத்தக்கவை! தளராமல் உழையுங்கள்! —மு. இளஞ்சேரன்–பெருவளப்பூர்–திருச்சி.

0: 362: "ஒரு தமிழன் தமிழர்க்கே உயிர் வாழ்கின்றான் உயிர் வாழ்வோன் தமிழர்க்கே தனை ஈகின்றான்!–" என்னும் பாவேந்தரின் பாடலுக்கு இலக்கியமாய்த் திகழ்ந்திடும் பைந்தமிழ்ப் பாவலரே! நீடு வாழிய நீவிர்! தமிழக வரலாற்றினை ஆய்ந்து தெளிந்த தாங்கள் "தமிழன் அல்லாதவன் தமிழ் நிலத்தில் வலிவு பெறுதல் தமிழர்க்கு நல்லதன்று"–என்று அண்மையில் எடுத்த முடிவு, உண்மைத் தமிழன் ஒவ்வொருவனும் உயிராக ஏற்றுச் செயல்பட வேண்டிய செம்மையான முடிவு.

தங்களின் "அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க" 'கலைஞரின் கைகளை வலுப்படுத்துக"–ஆகிய சொல்லோவியங்கள் தாய்த்திரு நாட்டிற்குக் காலத்தாற் செய்த பேருதவியாய்ப் பெருமை பெற்றுப் பொலிவன! தமிழ் இனத்தைக் கரையேற்றத் தாங்கள்

[தொடர்ச்சி 3–ஆம் அட்டைப்பக்கம்]

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

மண்சுமந்தீர்; கல்சுமந்தீர்; வானை முட்டும்
மாளிகைகள், கோபுரங்கள், கட்டி வைத்தீர்!
விண்சுமந்த முகில்தடவும் காட்டை யெல்லாம்
வெட்டி நல்ல நகராக்கி, வெளிநா டேகிக்
கண்சுமந்த நீர்சுமந்து, கையற் றேங்கிக்
கால் நடையாய்த் துயர்சுமந்து, நெஞ்ச மெல்லாம்
புண்சுமந்தீர் தமிழர்களே! உருப்பட் டீரா?
பொறைசுமந்தே இனியேனும் இனங்காப் பீரே!

புகழ்படைத்த வரலாற்றைப் பொய்யாய்த் தள்ளிப்
புளுகுக்குப் 'புராணங்கள்' எனும்பே ரிட்டுத்
திகழ்கின்ற பெருமையுடன் அவற்றை யெல்லாம்
தெருத்தெருவாய்ப் போய்ச்சொல்லிப், பெருமை யோடு
நிகழ்கின்ற விழாக்களிலே ஆரி யத்தை
நிலை நிறுத்தி, அதற்குக்கீழ் நீங்கள் நின்றே
இகழ்தேடும் தமிழர்களே! உருப்பட் டீரா?
இனியேனும் ஒன்றிணைந்தே இனங்காப் பீரே!

கட்டிவைத்த கோயிலுக்குள்-கருவ றைக்குள்-
கல்லைவைத்துக் கடவுளெனும் பெரும்பேர் சொல்லி
எட்டிநின்று கும்பிடென்பான்! இளித்த வாயோ
டிலைவிரித்துப் படைத்திட்டு, விழுந்து, முன்னால்
முட்டிதேய் கின்றவரை கும்பிட் டீர்கள்!
மூடர்களே, தமிழர்களே! உருப்பட் டீரா?
அட்டியிலை அவனுயர்ந்தான்! இனிமே லேனும்
அனைவீரும் ஒருங்கிணைந்தே இனங்காப் பீரே!

உடன்பிறப்பை மேல்கீழென் றொதுக்கி விட்டீர்!
ஒன்றவந்த ஆரியனைத் தேவன் என்றீர்!
கடன் பெற்ற வடமொழிக்குக் காவல் செய்தீர்!
கருத்துயர்ந்த தாய்மொழியை எள்ளல் செய்வீர்!
மடன்பெற்ற மூங்கையவன் குருட்டுப் பெண்ணை
மணங்கொண்டு முடமொன்றைப் பெற்றவாறாய்,
இடனின்றி உரிமையின்றி அடிமைப் பட்டீர்!
இனியேனும் மனம் ஒன்றி இனங்காப் பீரே!

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 10: ஓலை: 10

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

கும்பம் தி. பி. ௨00௪ (பெப்-மார்ச்சு–1973)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1 தமிழகம்.

ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்!-3

நூல்கள் எழுதி வெளியிடுகின்ற வகையில் ஆரியப் பார்ப்பனர்கள் ஐந்து வகையான தந்திரங்களைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர். அவை:

ஒன்று, தங்கள் புராண இதிகாசக் கருத்துகளைக் காலத்துக்கும் இடத்திற்கும் தக்கவாறு, வேறு வேறு வடிவங்களுடனும், முறைகளுடனும் மாற்றி எழுதி, அல்லது எழுதுவித்து வெளியிட்டுக் கொண்டேயிருப்பது.

இக்கால், அண்மையில் இறந்து போன இராசாசி கூட பழைய இராமாயண, மகாபாரதக் கதைகளை ஒரு புதிய வகையில் படிப்பதற்கு

விருப்புடனும், சுருக்கமாகவும், ஆரியர்க்குச் சார்பான இடங்களை மேலும் சிறிது கவர்ச்சியுடனும், விளக்கத்துடனும் – எழுதி வெளி யிட்டதும், அவற்றைக் கல்கி யினத்தவர்கள் உலக முழுதும்–பொது வுடைமை நாடான உருசியாவிலும்கூட – பரப்பி, இலக்கக் கணக்கான படிகளை விற்று வருவதும் இக்கருத்தை மெய்ப்பிக்கப் போதுமான சான்றாகும். இது தவிர இலிப்கோ எனும் நூல் வெளி யீட்டுக் குழுமமும் பலவகைகளில் இராமாயண மகாபாரதங்களையும், புராணப் புளுகுகளையும் அவ்வப்போது வெளியிட்டு வருவதும் கவனிக்கத் தக்கது.

வெளிநாடுகளில் வழக்கறிஞர் பணிக்குப் படித்த ஒருவன், இராசாசி போல் இராமாயண மகாபாரதங்களையா பிழைப்புக் கெட்டுப் போய் உட்கார்ந்து எழுதிக் கொண்டு கிடப்பான்? பிழைப்புக் கெட்டவன் கழுதையைப் பிடித்துச் சிரைத்தது போல, வழக்கறிஞர் தொழிலுக்குப் படித்துச் சட்டநுணுக்கமும் அரசியலறிவும் ஆட்சியியல் பட்டறிவும் கட்சித் தலைமையும் உள்ள ஒருவர், அத்துறைகளில் நூல்கள் எழுதி நாட்டின் ஆளுமையறிவை வளர்க்க முயலாமல், மாம்பலத்து மகாலிங்க அய்யர் போல் இராமாயண பாகவதங்களையா மக்களுக்குச் சொல்லிக் கொண்டு கிடப்பது? ஆனால், அவ்வாறு அவர் எழுதுகிறார் என்றால், அதில் ஒரு வரலாறே அடங்கியிருக்கின்றது. பார்ப்பானுக்கு நாட்டு நடப்புகளைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ இருக்கும் கவலையெல்லாம், தங்களுக்கு வழி வழியாக உள்ள சாய்காலைத் தூர்த்துவிடக் கூடாதே என்பதும், மேலும் மேலும் அவர்களுக்கு அவ்வகையில் எவ்வாறு வலிவு சேர்த்துக் கொள்வது என்பதுதான்!

இனி, அவர்களின் தந்திர முறைகளில் இரண்டாவது; தமிழில் இதுவரை வெளிவராத பழைய நூல்களை ஓலைச்சுவடிகளினின்று சமசுக்கிருதத்தில் பெயர்த் தெழுதிக்கொண்டு, தமிழ் மூலங்களை அழித்து விட்டுப், பின்னர், அவற்றையே மூலநூல்களாகக் காட்டிக் கொள்வது.

இக்கருத்தை நாம் சொல்வதில் கூட அவர்களுக்கும் அவர்தம் அடிமைகளுக்கும் எரிச்சல் இருக்கலாம். அவர்கள் இனத்த வரும், அவர்களின் தன்மைகளையெல்லாம் ஒருவாறு அறிந்து கொண்டவருமான வி. கோ. சூரியநாராயணசாத்திரியார் என்ற பரிதிமாற்கலைஞரே அவரின் 'தமிழ் மொழியின் வரலாறு' எனும் நூலில் இக்கருத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றார். அவர் எழுதுகின்ற சில பகுதிகளைப் பாருங்கள்.

"வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை உணர்ந்து, அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்மநூற் பயிற்சி மிக்குடையராயும், கலையுணர்ச்சி சான்றவராயு மிருந்தமைபற்றித் தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர், தமிழர்களிடத் தில்லாதிருந்த அந்தணர் (பிராமணர்), அரசர் (க்ஷத்திரியர்), வணிகர் (வைசியர்), வேளாளர் (சூத்திரர்) என்ற நால்வகைச் சாதி முறையை மெல்ல மெல்ல நாட்டி விட்டனர்.........இன்னும் அவர்தம் புத்திநலங் காட்டித் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர்"—(பக்கம்33)

"தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியு முன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்." —(பக்கம் 33)

இனி, இவ்வாறு தமிழர்க்குச்சார்பாகவும் வெளிப்படையாகவும் பார்ப்பனரின் ஏமாற்றுத்தனங்களை அவிழ்த்துக் காட்டிய இவரே, தமிழர்களுக்கு மாறாகவும் பல நச்சான கருத்துகளை அந்நூல் முழுவதும் தெளித்து விட்டிருக்கின்றார். அதுவும் ஆரியர்தம் திருவிளையாடல்களில் ஒன்று. தமிழர்களுக்குச் சார்பாகவும் நடுநிலையாளர் போலும் சில வரலாற்றுக் கருத்துகளை ஒருபக்கம் எழுதுவது; மறுபக்கம் அவர்களுக்குக் கேடானதும் முற்றும் ஆரியர்களுக்கே ஏற்றந் தருவதுமான பல கருத்துகளை அதே நூலில் சொல்லிவிடுவது. இவ்வாறு அவர்கள் எழுதுவது ஏனெனில், படிப்பவர்கள் தங்களை நடுநிலையாளர்களாகவும் உண்மையாளர்களாகவும் கருதிக் கொள்ளட்டும் என்பதே! மேலும், திரு. வி. கோ. சூ. அவர்கள் தமிழ் மொழிக்கு ஏற்றந்தருமாறு, வடமொழிக் கலப்பைத் தவிர்த்தவர். தனித்தமிழ்க் கொள்கையை வலியுறுத்தியவர்; அவ்வாறு தாம் செய்வதை உண்மையென்று பிறர் நம்புமாறு, தம் பெயரையே தூய தமிழ் மொழி பெயர்ப்பாக பரிதிமாற் கலைஞர் என்று வைத்துக் கொண்டவர். அதற்காகத் தமிழ் மக்கள் என்றென்றும் அவர்க்கு நன்றி பாராட்டக் கடமைப் பட்டவர்கள்தாம்! ஆனாலும் அவர் கொட்டிய பிற நச்சுக் கருத்துகளை நாம் நினைவு கூறும் பொழுது; அவர் ஒருவேளை அக்கருத்துகளை மறைமுகமாகச் சொல்வதற்குத் தானோ அவ்வாறு நடுநிலையாளர் என்று பிறர் கருதுமாறு நடந்து கொண்டார், என்றும் கருதவேண்டியுள்ளது. அவ்வாறு அவர் அவரினத்துக்குச் சார்பாகவும் ஏற்றந்தரும் வகையிலும் அதே நூலில்

கூறிய கருத்துக்களையும் தெரிந்து வைத்துக் கொள்வது நலம். அவற்றையும் கீழே காணுங்கள்:

"பல்லாயிர வாண்டுகளுக்கு முன்னர் இந்தியா காடடர்ந்து விரிந்ததோர் நிலமாயிருந்தது.........அக்காடுகளில் தீய விலங்குகள் திரிந்து கொண்டிருந்தன.........இங்குமங்கும் காட்டு மனிதர் சிலர் கரடிகளெனக் குகைகளில் வசித்தனர்.......அவர்கள் குறுகிக் கறுத்த விகாரவுருவினர், ஆடையற்றவர், அழுக்கேறியவுடலினர்...... அவர்கள் 'கற்கால மனிதர்' என்னப்படுவர்...கொஞ்சங்காலஞ் சென்ற பின்னர் வடக்கே இமயமலைக் கப்பாலிருந்து சில சாதியார் இந்தியாவினுட் புகுந்தனர். அவர்கள் வந்து சமவெளிகளிற் கண்ட இக்காட்டு மனிதர்களைத் துரத்தினர். துரத்தவே இவர்கள் மலைப்பக்கங் களில் ஓடி அங்கே அநேக காலம் வசித்து வந்தனர். இவர்களில் ஒரு சாதியார் "நாகர்கள்' என்னப்படுவோர். இவர்களில் சிலர் நீலகிரி யின் உச்சியில் இப்பொழுதும் வசிக்கின்றனர். இனி, மேற்கூறிய புராதன இந்தியரைத் துரத்தியவர்கள் தமிழராவர். இவர்கள் இமய மலைக்கு வடக்கேயுள்ள மத்திய ஆசியாவில் வசித்திருந்தவர்கள்...... தங்கள் ஆடுமாடுகளுக்காகப் புல்லைத் தேடிக்கொண்டு ஊரூராய்த் திரிந்தவர்கள்." (ஷெ நூல்.—பக்கம் 21-23)

"வடமொழி தமிழ் மொழியோடு கலக்கப்புகு முன்னரே, முன்னது பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டிலிருக்கும் நிலை மைக்கு வந்து விட்டது. ஏட்டு வழக் கொன்றுமேயுள்ள பாஷையோடு இருவகை வழக்குமுள்ள பாஷையொன்று கூடியியங்கப் புகுமாயின் முன்னதன்(வடமொழிச்)சொற்களே பின்னதன்(தமிழின்)கண் சென்று சேருமே யன்றிப், பின்னதன் (தமிழின்) சொற்கள் முனனதன்[வடமொழியின்)கண் சென்று சேரா......இதுவே வழக்காற்று முறை. இம்முறைபற்றியே வடசொற்கள் பல தமிழின் கண் புகுந்தன. தமிழ்ச் சொற்களில் சிலதாமும் வடமொழியின்கண் ஏருமற்போயின." [ஷெ நூல்-பக் 35]

"தமிழ்மக்கள் ஆங்கிலரோடு நாடொறும் ஊடாடுபராயினர். ஆங்கிலர் ஆள்வோரும் தமிழர் ஆளப்படுவோருமா யிருக்கின்றனர். [நூல் 1903-இல் எழுதப்பெற்றது]. இவ்வாறு இருவரும் ஒத்தியங்கு மிடத்துத் தமிழ்ச்சொற்கள் ஆங்கில பாஷையிற் புகுதலும், ஆங்கிலச் சொற்கள் தமிழ்ப் பாஷையிற் புகுதலும் இயற்கையே! இதனைத் தடுக்க முடியாது; தடுக்கப் புகுதலும் தக்கதன்ரும்; அவ்வாறு தடுக்கப்புகினும் அது வீண் முயற்சியாய் முடியுமேயன்றி வேறில்லை........பேச்சுத் தமிழில் அளவிறந்த ஆங்கிலச் சொற்களை மேற்கொண்டும், ஏட்டுத்

தமிழ் அவற்றை ஏற்றுக் கொள்ளப் பின்னிடுகின்றது. எனினும் 'சுதேசமித்திரன்' போன்ற பத்திரிகைகள் ஆங்கிலச் சொற்கள் சிலவற்றைத் தமிழின் கண் ஏற்றப் புகுந்தன. மதுரைப் புதுத்தமிழ்ச் சங்கத்தாரும் சிற்சில ஆங்கிலச் சொற்களை மேற்கோடல் இன்றியமையாதெனக் கண்டனர்; காண்டலும் மேற்கொண்டனர். அவர் செயல் மிகவும் நேரிதே......இவ்வாறு மொழி பெயர்ப்பு வகையால் ஆங்கிலக் கருத்துகள் தமிழின்கண் எவ்வளவு புகினும் நலமே!......" —[மேற்படி நூல்–பக் 136–137]

—எப்படி, தனித்தமிழ் இயக்கத்திற்கு வித்திட்டவராகக் கருதப் படுபவரின் உள்நோக்கம்? இந்நூலில் இவர் ஒரோவோர் இடங்களில் தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியென்றும், சிறந்த மொழி யென்றும் கூறியிருப்பதை மறுக்க முடியாது. ஆனால் அஃது அவருடைய கருத்தாக நாம் கொண்டு பெருமைப்பட முடியாது. ஏனெனில் தமிழ்மொழிக்கு இயல்பாகவே உள்ள இத்தன்மைகளை இவர்போலும் உள்ள பிராமண நூலாசிரியர்கள் பலர் மாற்றியும், மறைத்தும், குறைத்துமே மதிப்பிட்டுப் போந்தனர். அவ்வாறின்றி இவர் தமிழ்மொழி பற்றிய உண்மையான கருத்துகளைச் சொன்னது பாராட்டுக்குரியதே! ஆனாலும், அவர் அவற்றைச் சொல்லுமுகத்தான் தம் உள்நோக்கத்தை மறைத்துவிட முடியவில்லை என்பதற்காகவே இதனை இங்கெடுத்துக் காட்ட வேண்டுவதாயிற்று. இவ்வகையில் இவ்வினத்தவரும் இவரடித் தமிழ்க் கோடரிக் காம்புகள் சிலரும் ஆங்காங்குப் புகுத்திய நச்சுத்தனமான கருத்துகளையெல்லாம் எடுத் தெழுதின் அவை ஒரு நூலாகவே விரியும். எனவே இதை இவ் வளவில் நிறுத்திக் கொண்டு அவர்களின் மூன்றுவது தந்திர முறையினைப் பார்ப்போம்.

அது, வடமொழி ஏற்றத்துக்கும், ஆரியர்தம் பெருமைக்கும் துணை நின்று நூலெழுதும் தமிழ்ப் புலவர்களைத் தாங்கிப் போற்றிப் பாராட்டுதலும், உதவிகள் முதலியன செய்தலும், அவ்வாறல்லாத பிறரை அந்தத் தமிழ்ப் புலவர்களைக்கொண்டே தாக்கித் தூற்றி எழுதுவதும், மறைமுகமாக இடர் விளை விப்பதும் ஆகும்.

இத்தந்திரத்திற் காட்பட்டு இவர்களின் பாராட்டுக்கும், உதவிக்கும் அங்காந்துதான், வையாபுரி, தெ. பொ. மீ., சேது முதலிய பெரும் புலவர்கள்கூட தம் புலமையை அவர்களுக்குச் சார்பாக விலை பேசியும் விற்றும், பேரும், புகழும், பெரும்பணமும் பெற்று வந்திருக் கின்றனர். இவ்வழியில் அவர்களைத் தொடர்ந்து போகாதவர்கள்

போல் வெளிக்குக் காட்டி, அவர்களின் கருத்துகளை எதிர்த்துப் போகாமல் தம்மை நல்ல பிள்ளைகளாக ஆரியத்துக்குக் காட்டிக் கொள்ளும்பேராசிரியர்கள் சிலர் உளர். அவர்கள் தமிழர்களுக்கும் சிலநேரங்களில் நல்லபிள்ளைகளாக நடந்து கொள்வதும், அதனால் தமிழராட்சி உள்ள இக்காலத்தில் பல்கலைக் கழகத் துணைக் கண்காணகர் போலும் பெருமையும், பெரும் பொருள் வருவாயும் உள்ள பதவிகளில் அமர்த்தம் பெறுவதும் உண்டு. அத்தகையார் எழுதும் நூல்களில், ஆரியர் குறும்புகளை அவை எத்துணைதாம் அளவிறந்து காணப்படினும் அவற்றைச் சுட்டிச் சொல்லவே அஞ்சுவதையும், தமிழர்களின் அல்லது தமிழின் உண்மையான வரலாற்றுக் கருத்துகளை—அவை எத்துணை தாம் உயர்வாகவும் உண்மை சான்றனவாகவும் இருப்பினும் அவற்றை வெளிப்படையாகச் சொல்லத் தயங்குவதையும், ஆனால் மறைத்துவிட முடியாமல் மேலோட்டமாகவே எழுதி, அவற்றின் வலிவைக் குறைத்து விடுவதையும் தெளிவாகக் காணலாம். இதனால் அவர்கள் இருபுறத்தாராலும் பாராட்டப்பெற வேண்டுமென்பதும், இவர்கள் நூல் நன்கு பரவ வேண்டும் என்பதும் இவர்களின் உள் நோக்கமாக விருக்கலாம்.

அவ்வகையில் வெளிவந்ததாக, அண்மையில் பண்டாரகர். மு. வரதராசனார் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' எனும் நூலைக் குறிப்பிடலாம். இந்நூலில் திரவிடர்களின் வரலாறே துரானியர்களின் வரவிலிருந்துதான் தொடங்குகின்றது. அவர்கள் வருகையைப் பற்றிய காலக் குறிப்பீடும் இல்லை. தொல்காப்பியர் காலத்தைக் கி. மு. மூன்றாம் நூற்றாண்டென்று பலவிடங்களில் திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கின்றார். தமிழ் எழுத்துத் தோற்றத்தை ஏனோ தானோ என்று மேலோட்ட மாகவே குறித்திருக்கின்றார்.

'தமிழ் நூல்களையும் வடமொழி அறிஞர்கள் தக்க மதிப்புத் தந்து போற்றவில்லை. தமிழ்நாட்டில் பிறந்து தமிழே வீட்டில் பேசித் தமிழராகவே வாழ்ந்த வடமொழி யறிஞர்கள் தேவாரம், திருவாசகம் முதலான தமிழ் நூல்களையும் படிக்காமல் புறக்கணித்தார்கள்'-என்று, அடிவாங்கி அழுது கொண்டு வீட்டுக்கு வரும் சோணிப்பிள்ளைபோல் முணகித் தொலைத்திருக்கின்றார். தெ. பொ. மீ. அமர்ந்த இடத்தில் தாம் அமர்த்தி வைக்கப் பெற்றதன் பின் [1972-இல்] வெளிவந்த நூல் இதுவாகையால், அவர் சாயலில் ஆரியத்தை முட்டுக் கொடுத்துத்தாங்கீ வலிக்காமல் குட்டியிருக்கின்றார். இவர்தம் கைகள் வலிக்கும் என்று கருதினாரோ, அல்லது அவர்களின் மண்டை வலிக்கும் என்று கருதினாரோ தெரியவில்லை;

கழகக் காலத்தைப்பற்றி இவர் எழுதியுள்ள பகுதி இவரை வெறும் ஓர் இலக்கியப் பேராசிரியர் என்னும் அளவில்தான் கொண்டு போய் நிறுத்தியுள்ளது. இதற்குப் போய் 'வரலாறு' எழுதுவானேன். கழகப் பாடல்களில் உள்ள கருத்துரைகளை யெல்லாம் பலதலைப்பு களில் திரட்டிப் பல்சுவைத் திரட்டுகளை எழுதித் தள்ளிக் கொண்டிருக்க லாமே! வரலாறு என்பதை எப்படி எழுதுதல் வேண்டும் என்பதை மொழி மூதறிஞர் பாவாணரின், ஒப்பியன் மொழிநூல், தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, தமிழர் மதம் முதலிய நூல்களைப் பார்த்தேனும் மு. வ உணர்ந்து கொள்ளுதல், அவர்க்கும் நல்லது; அவர் எதிர்காலத்துக்கும் நல்லது என்பதைத் தாழ்மையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். ஆரியத்தைத் தழுவிக் கொள்வதும், அதன் அடிப்படுப்பதும், இத்தகைய வரலாற்று நூல்கள் சாகித்திய அகாடமி வழியாக வருவதற்கும், வீடுகளும், தெருக்களும், மலைத்தோட்டங்களுமாகவே வாங்கித் தள்ளுவதற்கும் ஒருவேளை பயன்படலாம். அல்லது மு. வ.வின் வையாபுரித் தனத்தை எதிர் காலத் தமிழ்மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காகவும் பயன் படலாம். ஆனால் இத் தொடை நடுங்கித் தனமெல்லாம் தமிழுக்கும் தமிழினத்துக்கும் இன்னும் எவ்வளவோ நடைபோட வேண்டிய தமிழ்க்குமுகாய அடிமை நீக்கத்திற்கும் துளியும் பயன்படாது.

மேலும், தனித்தமிழ் இயக்கத்தைபற்றி இவர் எழுதியுள்ள கருத்துகள் இவர் மனக் கசண்டை நன்றாக எடுத்துக் காட்டியுள்ளது. இவர் போலும் வெறும் கதைகள் கட்டுரைகளாக வன்றி, தமிழையே கட்டிக் காத்துத் தமிழ்ப் பேரினத்தின் தாழ்ந்த தலையை நிமிர்த்துகின்ற தனிச்செந்தமிழ் ஆராய்ச்சி நூல்களாகப் பலவற்றை இந்நூற்றாண்டில் எழுதிக் காட்டிய மொழிநூல் மூதறிஞர், தனித்தமிழ் ஞாயிறு பாவாணரைப்பற்றி இப்பகுதியிலோ, நூலிலோ ஓரிடத்திலும் பெயரளவிலாகிலும் இந்நூலில் குறிக்கப்பெறவே யில்லை. நேற்றுப் பிறந்த மொட்டைப் பயல்களை யெல்லாம் இலக்கிய வாசிரியர் களாகக் காட்டியிருக்கும் இவர், இவருக்கு 1959-இலிருந்தே தொடர்ந்து பலவாண்டுகள் தென்மொழி இலவயமாக அனுப்பப் பெற்றிருந்தும், அதன் செம்மாப்பான இலக்கிய வெளியீடுகளையும், மொழித் தொண்டையும், இனப்போராட்ட எழுத்தாண்மையையும் இவர் தெளிவாக அறிந்திருந்தும், அவற்றைப்பற்றி ஒரு சொல்தானும் இவரின் பரந்த [!] உள்ளம் இசைந்து எழுதிவிடவில்லை. மறைமலையடி களைப்பற்றி ஒருபக்கமும், திரு. வி. க.வைப்பற்றி இருபக்கங்களும், பாரதிதாசனைப் பற்றி ஐந்தரைப் பக்கங்களும், பாரதியாரைப் பற்றிப் பதின்மூன்றரைப் பக்கங்களும் தம் மனம் போனவாறு,

விருப்புக்கும் வெறுப்புக்கும் ஆட்பட்டுச் சொல்மிடையல் செய்துள் ளார், பர். மு, வ. அவர்கள். கண்ணதாசன் முதல் சி. சு. செல்லப்பா, ந. பிச்சமூர்த்தி ஈருக அனைத்துப் புலமைக் குஞ்சுகளையும் அடி முடியறக் காட்டிய பண்டாரகர்க்குத் தனித்தமிழ் இயக்க எழுத்தாளர் களைக் கண்டு கண்கள் கூசிற்ருே என்னவோ? பாவாணரையும், அவர் வழியைப் பின்பற்றுபவர்களையும் தம் பகைவர்களாகவே மு. வ. நினைத்துப் புறக்கணித்து விட்டாரோ? அல்லது இவர்களால் தமக்கு ஒருபயனும் விளையப்போவதில்லை என்று கருதி ஒருக்கணித்துப் படுத்துக் கொண்டாரோ என்னவோ, அவருக்குத்தான் வெளிச்சம்! கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, அதுவும் தேய்ந்து சிற்றெறும் பாகி, அதுவும் இல்லாமற் போன கதையாக, மு. வ. தேய்ந்து தெ. பொ. மீ.யாகி, அப்புறமும் தேய்ந்து வையாபுரியாக மாறி வருகிருரோ, தெரியவில்லை; பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இனி, நூல் எழுதுகின்ற வகையிலும், அதன் வெளியீட்டு வகை யிலும் ஆரியரும், அவரடிமைகளும் கடைப் பிடிக்கின்ற நான்காவது தந்திரமுறை இது:

கூடியவரை இலக்கியத் துறையையும், செய்தித்தாள் துறையையும் என்னபடியான வாணிகத் தந்திரங்களைக் கைக் கொண்டேனும் கைப்பற்றிக் கொள்வதும், பற்றிக் கொண்டது கைநெகிழ்ந்து விடாமல் கவனமாக நடந்து நிலைநிறுத்திக் கொள்வதுமாகும்.

இத் துறையில் ஆரியப் பார்ப்பனரை அடித்துக் கீழே தள்ள— அஃதாவது விஞ்ச — தமிழரில் ஆளே யில்லை. பெரியார் எத்துணை பேசினுலும், கரடியாய்க் கத்தினுலும் இந்த ஒரு தந்திரத்தை அவர் சரியாக விளங்கிக் கொள்ளாத கரணியத்தால், அவர் கொள்கை களுக்கு நேர்ந்த–நேருகின்ற இழப்புகள் பல. என்ன கரணியத்தாலோ அவர் மூளைக்கு இஃது எட்டவே இல்லை. தினமணி போலவோ, மெயில், எக்சுபிரசு போலவோ ஒரு செய்தித்தாளை அவர் தொடங்கி யிருந்தால் அவர் வீணான நடைகளில் பெரும்பகுதி மிச்சப்பட்டிருக்கும்; அவர் சுற்றுச்செலவு வண்டியும் தேயாது. நடத்திஞல் தமிழனுக்குத் 'தினத்தந்தி' போலும் ஒரு கழிசடைத் தாளைத்தான் நடத்தத் தெரியும்; அன்றல் அச்சிட்டுப் பெரும்பகுதி விற்பனையாகாமல் திரும்பி வரும் 'விடுதலை' போலத்தான் நடத்தத் தெரியும்–என்று வரலாறே உருவாகும் படியானதற்குப் பெரியாரும் ஒரு கரணியம் என்று சொல் வதில் பிழையிருப்பதாகத் தெரியவில்லை. அவரிடம் உள்ள ஏந்து

களுக்கு விடுதலை என்பது சுற்றறிக்கை! அப்படியே, ஆதித்தனாரிடம் இருந்த தமிழ்ப்பற்றுக்குத் தினத்தந்தி என்பது ஒரு குப்பைத் தொட்டி. இவையிரண்டாலும் தமிழனுக்குச் சில அரசியல் பொறுக்குகளும், சில மேலோட்டமான பயன்களும் கிடைக்கலாமே தவிர, அவர்கள் விரும்புகின்ற அடிப்படையான நன்மைகள் கிடைத்துவிடும் என்பதில் நமக்கு நம்பிக்கையில்லை. இன்னுஞ் சொன்னால் விடுதலையால் பெரியார் எங்கிருக்கிறார் என்பதையும், தினத்தந்தியால் ஆதித்தனார் எப்படி மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கிறார் என்பதையுந்தாம் நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது. மற்றபடி அவை வங்காள வீரர்களைப் போல் ஓர் ஆயிரம் பேர்களைக் கூட உருவாக்கிவிட முடியாது. மற்றபடி வழிப்போக்குக்காகப் போட்டுக் கொள்ளப் பெறும் துணிக் கூடாரங்களைப் போன்றவை அவை. நிலையாகத் தங்கிக் கொள்ளும் வீடுகளாக அவை பயன்பட முடியாது.

இனி, ஐந்தாவது ஆரியத் தந்திரம், ஏற்கனவே உள்ள பழந்தமிழ் நூல்களைப் பதிக்கையில் அவற்றில் உள்ள சொற்களுக்கும், கருத்துகளுக்கும் எவ்வாறாகிலும் ஆரிய வடிவம் கற்பித்து, அவர்தம் மரபோடு உரைகள், விளக்கங்கள், அடிக்குறிப்புகள் முதலியவற்றை எழுதி வெளியிடுவது ஆகும்.

இவ்வகையில் பழைய ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்துப் பதித்த அரிய தொண்டுகளைச் செய்தவர் பர். உ. வே. சாமிநாதர் என்ற ஆரியப் பார்ப்பனர் என்பதை நாம் நன்றியுடன் நினைக்கின்ற அதே பொழுதில், அவர் அவ்வாறு பதிப்பிக்கையில், அவர் இனத்தின் மேம்பாட்டுக்கென்று, திட்டமிட்டுச் செய்த சில செயல்களை மறந்து விடவும் கூடாது. உ. வே. சா. அவர்களின் தொண்டு அளப்பரிய தொண்டு. அதை எவரும் மறுக்க வில்லை; நாமும் அதை நன்றியுடனும் மதிப்புடனும் போற்றவே செய்கின்றோம். அதன்பொருட்டுத் தென்மொழி தொடக்கத்திலேயே அவர் வரலாற்றையும் நடு நிலையினின் றெழுதித் தன் நன்றியை அவர்க்குத் தலைதாழ்த்தித் தெரிவித்துக் கொண்டது. இன்னும் அத்தென்கலைக்குரிசில் தமிழ்மேல் காட்டிய அன்பை நினைந்து நினைந்து வியப்புறுகின்றது தென்மொழி. அவரின் அரிய முயற்சியாகிய குறுந்தொகை உரைப்பதிப்பின் முன்னுரையில் அவர் மனங்கசிந்து,

"பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் உரையெழுதிய இந் நூலுக்கு உரையெழுதும் தகுதி என்பாற்சிறிதுமில்லை யென்பதையும், என் முதுமையாலும் பலவேறுவகையான முட்டுப் பாடுகளாலும் எனக் குண்டாகியுள்ள தளர்ச்சியையும் நன்குணர்ந்திருப்பினும், இளமை

தொடங்கி, இவ்வுலகில் யாதினும் சிறந்ததாக எண்ணி வாழ்ந்து வருதற்குக் காரணமாகிய தமிழிடத்துள்ள அன்பும், எங்ஙன மேனும் இறைவன் இம்முயற்சியை நிறைவேற்றி யருளுவானென்ற துணிவும் இப்பதிப்பில் என்னை ஈடுபடச் செய்தன.''

—என்றெழுதியுள்ள பகுதி அவர் தமிழ்மேல் கொண்ட அன்பைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றது. இருப்பினும், அவரின் சமசுக்கிருதப் பற்றும், ஆரிய மேலாண்மை உணர்வும், அவருடைய இக் கூற்றை மெய்ப்பிக்கவில்லை.

இவர் நூல்களில் எங்கும் தமிழ்ப் பாஷை என்றெழுதுவாரே தவிர தமிழ்மொழி என்று எழுதவே மாட்டார். நூல்களைப் புஸ்தகங்கள் என்றெழுதுவதே இவர் வழக்கம். தமிழில் வடமொழிச் சொற்களை விழிப்பாகவும், அவற்றை உயர்த்தவேண்டும் என்ற நோக்கத்துடனும், அவையின்றித் தமிழே இயங்காது என்பதை உண்மைபோல் மற்றவர்களுக்குப் புலப்படுத்த வேண்டும் என்ற கருத்துடனும், இவர் எழுதும் உரைநடைகளிலெல்லாம், அளவிறந்து கலந்து எழுதியது இவரின் வடமொழி உயர்வு மயக்கத்தைத் தெளிவாகக் காட்டும். ஒருகால் ஒரன்பர் இவரிடத்து 'வணக்கம்' என்று சொல்லி வணங்கியும், அதனை ஏற்றுக் கொள்ளாது. நமஸ்காரம் என்று கூறச்சொல்லி, அதனையேற்று நிறைவடைந்த நிகழ்ச்சியை அறிந்தால், உ. வே. சா. அவர்களின் வடமொழியுயர்த்தமும், ஆரிய இன மேம்பாட்டு நினைவும் அவரை விட்டு அகலவே இல்லை என்று தெளிந்து கொள்ளலாம்.

கழக நூல்களை அவர் வெளியிடும்பொழுதெல்லாம், 'அந்தணர்' என்று வரும் இடங்களிலெல்லாம் அவர் ஆரியப் பார்ப்பனர் என்றே சிறப்புரையெழுதி மக்களை மயங்கச் செய்து வந்ததுடன், அவர்களின் நடையுடை பழக்கங்களை மிகவுயர்ந்தனவாகக் காட்ட, எப்படியெப்படி இட்டுக் கட்டிச் சொல்ல முடியுமோ, அப்படியப்படியெல்லாம் தவறாமல் சொல்லியிருக்கின்றார். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டைப் பார்ப்போம்.

புறநானூற்றில் "ஆன்முலையறுத்த "—என்று தொடரும் 34-ஆம் பாட்டில் உள்ள அடிகளில் உள்ள ஒரு சொல், யாழ்ப் பாணத்துப் பழைய வெளியீடு ஒன்றில் 'அறவோர்' என்று வந்துள்ளது என்று, உரையாசிரியர் சிலர் குறித்துள்ளனர். உ.வே.சா. பதிப்பில் அச்சொல் ''பார்ப்பார்'' என்று குறிக்கப் பெற்றுள்ளது. பாட வேறுபாடாகக் கூட அச்சொல் இவர் வெளியீட்டில் காட்டப் பெறவில்லை. 'அறவோர்க்குக் கொடுமை செய்தல் கூடா'தெனும் அறங் கூறும் அவ்வடி, 'பார்ப்பார்க்குக் கொடுமை செய்தல் கூடா' தென்பதாக, இவர் பதிப்பில் காட்டப் பெற்றதும், அதற்குக் 'கொலை

களில் கொடுமைசான்ற பார்ப்பனக் கொலை' எனும் காஞ்சிப் புராண அடியை மேற்கோள் காட்டியிருப்பதும், இவ்வாறு பிறஆரிய உரையாசிரியர்களால் காட்டப் பெற்ற கருத்து மேலும் மேலும் வலிவுறவேண்டும் என்னும் உள்நோக்கம் இவருக் கிருப்பதை நன்கு புலப்படுத்தும்.

மேலும் அதில் உள்ள 305-ஆம் பாட்டில் உள்ள 'தன்மை' என்னும் ஒரு சொற்கு "அவரவர் சாதியியல்பு" —என்று விளக்கம் எழுதியுள்ளார்.

இனி, இவர் உரையுடன் வெளியிட்ட குறுந்தொகை 'முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்' எனும் 167-ஆம் பாட்டின் உரை விளக்கத்தில் நச்சினர்க்கினியரின் [அவரும் ஒரு பார்ப்பனர்] தொல் காப்பிய உரையைச் சுட்டிக்காட்டி, 'இப்பாட்டிற் கூறப்படும் உணவு வகையினுல், நச்சினர்க்கினியர், பார்ப்பானையும் பார்ப்பனியையும் தலைவராகக் கூறியது—எனக் கொண்டனர் போலும்; பெரும் பாணாற்றுப் படையில் அந்தணர் மனையிற் பாணர் பெறும் உணவைப் பற்றிக் கூறியிருக்கும் பகுதி இங்கே ஆராய்தற்குரியது' என்றும்,

'அறிவுடையீரே!' என்று தொடங்கும் குறுந்தொகை 206-ஆம் பாட்டினடியில், "பார்ப்பனப் பாங்கனைப் பன்மையாற் கூறுவது மரபென்று தெரிகின்றது" — என்றும்,

'ஆசில் தெருவில்' என்று தொடங்கும் 277-ஆம் பாட்டின் சிறப் புரையில், "ஆசில் [குற்றமற்ற] தெருவென்றும். நாயில் [நாய் இல்லாத] வியன்கடையென்றும் சிறப்பித்தமையால். இங்கே கூறியது அந்தணர் தெருவென்று தோற்றுகின்றது" என்றும் எழுதி, 'பார்ப்பாரிற் கோழியும் நாயும் புகலின்ன' எனும் [இன்ன. 3] அடியையும், 'அந்தணர் அமுதவுண்டி' [கம்பர்] எனும் பாட்டடியை யும் மேற்கோளாகக் காட்டியுள்ளார். இவர் இவ்வாறு காட்டுவதன் நோக்கம், கழகத் தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே ஆரியக் கருத்துகளை வலியுறுத்திக் காட்ட வேண்டுமெனும் உட்கோள் பற்றியேயாகும். [தொடரும்]

பெருஞ்சித்திரன்.

தனித்தமிழ் அணியில் மேலும் ஓர் இதழ்!

மேழம் முதல் வெளிவர விருக்கிறது.

வ ல் ல மை

ஆசிரியர்: பாவலர். மு. மகிழரசன்

தனியிதழ்: 40 காசு. ஆண்டொப்பம்: 5 உருபா

விளக்கங்கட்கு: வல்லமை, 50/4, ஆர்க்காடுசாலை, சென்னை-24.

உலகத் தமிழ்க் கழகம் நடத்திய

தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கு

(செய்திச் சுருக்கம்-பிற்பகல் நிகழ்ச்சி)

0 மாநாட்டின் இறுதியில் கூடியிருந்த அறிஞர் பெருமக்களும், தமிழன்பர்களும் ஒரே குரலில், "தமிழன் பிறந்தகம் குமரிக்கண்டமே" என முழங்கி முடிவு செய்தனர்.

0 வரலாறு காணாத நிகழ்ச்சி, தமிழக வரலாற்றையே உறுதிப் படுத்தியது.

0 உலகத் தமிழ்க் கழகம் 31-12-72-இல் தஞ்சையில் நடத்திய 'தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக்கருத்தரங்கின்' பிற்பகல் நிகழ்ச்சி!

0 செய்திச் சுருக்கம்- சென்ற இதழ்த் தொடர்ச்சி!

வரவேற்புக் குழுத் தலைவர் திரு. ச. தமிழனார் அவர்களின் வரவேற்புரைக்குப்பின், தலைவர் முதுபெரும் புலவர். நீ. கந்தசாமியார் அவர்கள், முன்னுரையாக மாநாட்டின் நோக்கம் பற்றிச் சுருக்கமாகத் தெரிவித்து விட்டு, தம்மின் ஒன்று திரண்ட கருத்தைப் பிற்பகலில் மாநாட்டின் இறுதியில் கூற விருப்பதாகவும், அதுவே இக் கருத்தரங்கின் தீர்ப்புரையாக இருக்குமென்றும் கூறி, சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திரு. கோ. நிலவழகனாரைத் தம் கருத்தை எடுத்துரைக்குமாறு பணித்தார். பேராசிரியர் அவர்கள் பற்பல அகப்புறச் சான்றுகளையும் மேனாட்டு ஆராய்ச்சியாளர்தம் அரிய ஆராய்ச்சி முடிபுகளையும் காட்டி, தமிழன் பிறந்தகம் குமரிக் கண்டமே என்றும், அதில் ஐயத்திற்கே இடமில்லை என்றும் மிக விரிவாகவும் விளக்கமாகவும் சுவைபடவும், ஆராய்ச்சி யடிப்படையிலும் மிகத்தெளிவானதொரு கருத்துரை வழங்கினார்கள். (அம் முழுப் பேச்சும் சென்ற இதழில் வெளி வந்துள்ளது) அவர்கள் உரையின் எடுப்பும் உரப்பும் காலை நிகழ்ச்சியின் சிறப்புக்கும், பிற்பகல் கருத்தரங்கில் எடுக்கவிருந்த முடிபுக்கும் கட்டியங்கூறி நின்றன.

அதன்பின், மதுரை, இறையியற் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. வி. ப. கா. சொல்லழகனுர் அவர்கள், தம் கருத்துரையைத் தெரிவிக்குமாறு தலைவரால் அழைக்கப் பெற்ருர்கள். அவர்கள் பேசுகையில், குமரிக் கண்ட வரலாறு தமிழனின் வரலாறே என்றும், ஒருவரும் இதை நம் எதிரில் வந்து துணிந்து மறுத்துரைக்க முடியாதென்றும் நம் பின்னுல் நின்று வஞ்சகத்தால் -தான் நம்மை அழிக்கப் பார்ப்பார்கள் என்றும், சுவையுடனும் விளக்கமாகவும் தம் கருத்தை எடுத்துரைத்தார்கள். (அவர்களின் பேச்சும் சென்ற இதழில் வெளிவந்துள்ளது.)

அடுத்து, தனித்தமிழ் இயக்கத் தலைவரும், ஈடிணையில்லா திரவிடமொழி ஆராய்ச்சிப் பேரறிஞரும் ஆகிய மொழிஞாயிறு, உயர்திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் தம் ஆய்வுரையைக் கருத்தரங்கில் எடுத்துக் கூறினுர்கள். அவர்கள் பேசுகையில், இக்கருத்தரங்கு, ஆரியர்தம் பொய்க் கூற்றையும் நம் வையாபுரிகளின் புரட்டுகளையும் அம்பலப்படுத்தவே கூட்டப் பெற்றதென்றும், எதிர்க் கருத்துக் கொண்டவர்கள் நேரிடையாகத் தம் கருத்துகளை வெளிப்படுத்த அஞ்சுகிருர்களென்ருலும் மறைமுகமாகப் பல கேடுகளைத் தமிழுக்கும் தமிழ் வரலாற்றுக்கும் செய்து வருகிருர்களென்றும், வேண்டுமானுல் இக் கருத்தரங்கால் நிறைவுருதவர்கள் தாமே ஒரு கருத்தரங்கைக் கூட்டலாம் என்றும், அதற்கு இந்தியாவின் உயர்நெறி மன்ற நடுவர்களையோ, குடியரசுத் தலைவரையோ கூட நடுவர்களாக அமைக்கட்டும் என்றும், தாம் ஒருவரே தமிழ் தொன்மை வாய்ந்தது என்றும், தமிழனின் பிறந்தகம் குமரிக் கண்டமே என்றும் நிறுவுவதாகவும் தம் கருத்துக்கு எதிர்க்கருத்தை எவரும் எடுத்துக் கூறலாம் என்றும், அதன்பின் தீர்ப்புக் கூறட்டும் என்றும், அதன்பின் எவரும் இக்கருத்து பற்றி வாய்திறக்கக் கூடாது என்றும் சூளுரைத்துப் பேசினுர்கள். (அவர்களின் வீறுரை அடுத்த இதழில் வரும்) பாவாணரவர்களின் பேச்சுடன் முற்பகல் நிகழ்ச்சி முடிந்தது.

பிற்பகல் நிகழ்ச்சி அன்று மாலை மூன்று மணியளவில் மீண்டும் தொடங்கியது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் திருக்குறள் பெருமாள் அவர்கள் பாவேந்தரின் தமிழுணர்வுப் பாடல்கள் சிலவற்றைப் பாடினுர். முற்பகலில் வந்திருந்த கூட்டத்தைப் பார்க்கிலும் பிற்பகல் கூட்டம் செறிந்திருந்தது. பெரும்பாலும் வெளியூர்களிலின்று புறப்பட்டுப் பற்பல இடையூறுகளால் கருத்தரங்கின் காலை நிகழ்ச்சிக்கு வராதிருந்தவர்கள் பலரும் மாலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். செய்தியாளர்கள் சிலரும் மாலையில் வந்திருந்தனர். மாலையில் பேசவேண்டியவர்களுள் ஒருவரும் அண்ணுமலைப் பல்கலைக் கழக இந்திய மொழிப்புலக் கண்காணிப்பாளரும் ஆகிய பேராசிரியர், பண்டாரகர் வ. சுப. மாணிக்கனுர்

அவர்கள் காலை நிகழ்ச்சியின் பிற்பகுதியிலேயே வந்து மேடையில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடன், காலை வந்திருந்த அறிஞர்களும் பிற்பகல் நிகழ்ச்சியின் பொழுது மேடையில் அமர்ந்திருந்தார்கள்.

திருக்குறள் பெருமாளின் பாவேந்தர் பாடல்களுக்குப் பின், பேராசிரியர் பர். வ. சுப. மாணிக்கனார் அவர்களைக் கருத்தரங்குப் பற்றிய கருத்துரைகளை எடுத்துக் கூறுமாறு தலைவரவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பேராசிரியரவர்கள் எழுந்து, தமக்கேயுரிய மிடுக்குடன் எடுப்பான குரலில் இரண்டு மணி நேரம் அரியதொரு கருத்துமாரி பொழிந்தார்கள். (அவர்கள் கருத்துரை இவ்விதழில் வெளியாகியுள்ளது). இடையிடையே அவர்கள் தம் குரலை யுயர்த்தி, தமிழனின் பிறந்தகம் குமரிக்கண்டமே எனும் தம் கருத்துக்கான சான்றுகளை மிக வலிவோடும் பொலிவோடும் ஆணித்தரமாகவும் எடுத்துக் கூறு கையிலெல்லாம், கூட்டம் மகிழ்ச்சியால் கையொலி செய்து ஆரவாரித்துத் தன் ஒப்புதலைத் தெரிவித்தது. பெருமைசான்ற பழந்தமிழ் வரலாற்றுக்குப் பேராசிரியர் அவர்களின் செம்மாந்த உரைப்பொழிவு ஒளியூட்டியது என்றே சொல்லலாம். பேராசிரியப் பொறுப் பேற்றவுடன் தன்மானத்தை அறவே துறப்பதும், பண்டாரகர்ப் பட்டம் பெற்றவுடன் ஆரியத்துக்கே முழு அடிமையாகி விடுவதுமே இக்கால் உள்ள தமிழறிஞர்களின் நடைமுறையாயிருக்க, பேராசிரியர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள், தமிழ் நாட்டிலேயே சிறப்பு மிக்க அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இந்திய மொழிப்புலக் கண்காணிப்பாளராக இருந்து கொண்டு, தமக்குச் சரியென்று தோன்றிய கருத்தை இத்துணைத் துணிவோடும், வலிவோடும் கருத்தரங்கில் நிலைநாட்டியதை, நேரில் கண்டவர்களுக்கு, அவர்களின் மெய்த் தமிழன்பும், உரஞ்சான்ற உள்ளமும், கருத்து வலிவுமிக்க அறிவாற்றலும் நன்கு விளங்கியிருக்கும். பாவாணரவர்களுக்கு இவ்வகையில் உற்ற துணையாயிருக்கும் பெற்றி நிறைந்த அப் பேராசிரியரால் தமிழ் இன்னும் ஆக்கமும் ஊக்கமும் பெறும் என்பதிலும், தமிழ் வரலாற்றுக்கு இன்னும் அவரால் வலிவும் பொலிவும் மிகும் என்பதிலும் எள்ளளவும் ஐயமே இல்லை என்னும் நம்பிக்கையை அன்றைய அவரின் சொற்பொழிவு நமக்கு ஊட்டியது என்றால், அது மிகையில்லை.

பேராசிரியர் அவர்களின் சொற்பொழிவுக்குப் பின், புதுப் புனைவாளர் கோ. துரைசாமி (G. D. Naidu) அவர்கள், உலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழி தமிழ்மொழியே என்றும், இம் மொழியைப் பேசிய தமிழனே உலக முதல்வன் என்றும், இக் கருத்தைத் தாம் இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே வெளி நாடுகளில் சொல்லி வந்ததாகவும் கூறி மிகவும் நகைச்சுவை

யுடனும் பல சான்றுகளுடனும் பேசி முடித்தார்கள். கோ. து. அவர்களின் சொற்பொழிவு நெடிய நேரத்தை எடுத்துக் கொண்டதெனினும், சிறப்பாக விருந்தது. தம் முதுமையின் காரணியமாக மிகவும் மெதுவாகவே, அவ்வறிவியலறிஞர் உரையாற்றினர். அவர்களையடுத்து, தென்மொழியாசிரியர், பாவலர் பெருஞ்சித்திரனுர் அவர்கள், தாம் பேசுவதற்காக அங்கு வரவில்லையாணுலும, பாவாணர் அவர்களின் கட்டளைக் கிணங்க சிறிது நேரம் பேசுவதாகக் கூறி, உரையாற்றத் தொடங்கினர். அவர், இத்தகைய மாநாடுகளாலும் கருத்தரங்குகளாலும் கொஞ்சமும் பயன்விளையப் போவதில்லை யென்றும், ஆரியப் பார்ப்பனரின் கேடுகளைத் தடுக்க வேறு முறைகளைக் கையாள வேண்டுமென்றும், அவ் வடிப்படையில் விரைவில் ஒரு புரட்சியைத் தோற்றுவிப்பதே பயனுடையதாகு மென்றும், திரு. கோ. து. போன்றவர்கள் அதற்குத் துணைநிற்க வேண்டுமென்றும் உரத்த குரலில் எடுத்துச் சொன்னுர்கள்.

பாவலர் பெருஞ்சித்திரனுர் பேசி முடிந்தவுடன், தவத்திரு. காஞ்சி உணர்வொளியடிகள் (ஞானப்பிரகாச அடிகள்) அவர்கள் ஒரு கட்டுரை வடிவமாக எழுதி விடுத்திருந்த கருத்தையும், பர். தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் அறைகூவலுக்கு மறுமொழியாக விடுத்த ஒரு முடங்கலையும், உ. த. க. பொதுச் செயலாளர் புலவர். திரு. இறைக்குருவனுர் மக்களுக்குப் படித்துக் காட்டினர். அதன்பின் மாநாட்டுத் தலைவர் பெரும்புலவர். நீ. கந்தசாமி அவர்கள், தமிழன் பிறந்தகம் குமரிநாடே என்னும் உண்மையை உறுதி செய்து நிலைநாட்டிக் கருத்தரங்கை முடித்து வைத்தார்கள். தலைவரின் முடிவுரையை யடுத்துத் தமிழன் பிறந்தகம் குமரிநாடே என அவையோர் அனைவரும் ஒருமுகமான குரலெழுப்பிய பின், மாநாட்டுச் செயலாளர் புலவர். திரு. சா. அடலெழினுர் அவர்கள் நன்றி நவில மாநாடு இனிதே நிறைவுற்றது.

இக் கருத்தரங்க மாநாடு மிகக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தும், இத்துணைச் சிறப்பாக நடைபெற்றதற்கு, தம் உடல் கடுமையான நோயால் மிக நலிவுற்று இருந்தும் இராப்பகலாய்க் கண்விழித்து ஒரு சிறு வினைப்பாட்டிற்கும் பிறரை எதிர்பாராது தாமே ஓடியாடி அரும் பணியாற்றிய மாநாட்டுச் செயலாளர் புலவர் திரு. அடலெழிலனுர் அவர்களும், அவருக்கு உற்ற துணையாயிருந்து கருத்துரைகள்கூறி வழிப்படுத்திய மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் புலவர், திரு. த. ச. தமிழனுர் அவர்களும், திரு. சி. இராசாங்கம் அவர்களும் பிற செயற்குழு உறுப்பினர் களுமே காரணியமாவர். அவர்களின் அரிய தொண்டுணர்வை எவ்வளவு பாராட்டினுலும் தகும். O

தமிழன் இந்நாட்டைச் சேர்ந்த வனே என்பதற்கு அசைக்க முடியாத சான்றுகள் உண்டு.

ஒரு காலத்தில் தமிழன் குமரி முதல் இமையம் வரை பரவி யிருந்தான்!

ஒலிக் கலப்பினுல் நாம் இழந்த நிலப் பகுதிகள் மிகுதி! ஆந்திரம், கேரளம் அவ்வாறு இழந்தவையே!

பொய்யா நா, சிறுசெந்நா என்றும், கம்பரால் சான்ருேர் என்றும் புகழப் பெற்ற கழகப் புலவர்கள் சொல்வது பொய், இன்றுள்ள புலவர்கள் கூற்று மெய்யா?

கழகக் கால உண்மைகளை இல்லையென்று சொல்லும் கடிப்பு மிகுந்து வருவதாகப் பாவாணர் சொல்வது பொய்யில்லை.

தமிழன் வாழ்ந்து இழந்துபோன பகுதிகளைக் குறிப்பிடும் முதல் வரலாற்று ஆசிரியர் இளங்கோவே! அவர் கருத்தைப் போலி ஆராய்ச்சியாளர் எவரும் மதித்ததாகத் தெரியவில்லை!

கழக இலக்கியங்களே வரலாற்று நூல்கள்தாம். வரலாற்றுக் குறிப்புகள் ஒவ்வொரு பாடலிலும் உண்டு. நேற்று முளைத்த கல் வெட்டுக்கு மதிப்பளிப்பவர்கள், இறவாமல் என்றும் இருந்து கொண்டிருக்கிற இலக்கியத்துக்கு ஏன் மதிப்பளிக்கக் கூடாது?

தொல்காப்பியர் காலத்தில் குமரியாறு, குமரிக்கோடு, பஃறுளியாறு இவையெல்லாம் இருந்தன. அப் பொழுது அவை அழியவில்லை.

தொல்காப்பியம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதாக இருத்தல் வேண்டும்.

நாம் இன்று பிறந்து வாழ்வதும் இந்தத் தமிழ் நாடுதான். நம் முன்னேர்கள் அன்று பிறந்து வாழ்ந்ததும் இந்தத் தமிழ் நாடு தான்.

இதைக் கற்பனை என்று சொல்பவரைப் பற்றிக் கவலை வேண்டா.

திருவள்ளுவர் 'தென்புலத்தார்' என்று குறிப்பது நம் குமரிக் கண்ட முன்னோரையே!

தஞ்சைக் கருத்தரங்கில்
பேராசியர், பண்டாரகர்வ. சுப. மாணிக்கனார் பேச்சு!

தஞ்சையில் கடந்த திலே கள (31—12—72) அன்று நடந்த தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கில், பெரும்புலவர் நீ. கந்தசாமியார் அவர்களின் தலைமையில். அண்ணாமலைப் பல்கலைக்கழக, இந்திய மொழிப்புலக் கண்காணிப்பாளர், பேராசிரியர். பர். வ. சுப. மாணிக்கனார் க, மு. அவர்கள் ஆற்றிய கருத்துப் பொழிவு வருமாறு:

தலைவர் அவர்களே! பாவாணர் அவர்களே! அன்பர்களே! முதலாவது, இந்த உலகத் தமிழ் அரங்கு என்னை இந்தக் கருத்தரங்குக் கூட்டத்தில் அழைத்துப் பேசச் சொல்லியதற்கு மிக்க நன்றியுடையேன். முதலாவதாக, நான் இந்தக் கழகத்தில் உறுப்பினன் இல்லை என்பதையும் உங்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆதலால் கழகத்தில் தொடர்பல்லாத ஓர் ஆசிரியன் என்ற முறையில், அவர்கள் இன்று என்ன கருத்தெடுத்துக்கொள்ள நினைக்கிறார்களோ, அந்தக் கருத்தைப்பற்றிப் பேசுகின்ற முறையில்தான் நான் உங்கள் முன் நிற்கிறேன். ஆனால், பாவாணர் அவர்கள் என்னிடத்துத் தனி மதிப்பு உடையவர்கள். அதனைவிட அவர்களிடத்து நான் தனி மதிப்பு உடையவன். பல்லாண்டுகளாக நாங்கள் நெருங்கிய அன்பர்கள். அவருடைய மாசற்ற தமிழன்பிற்கும், தமிழ்ப்பற்றுக்கும் நிகராக யாரையும் நாம் சொல்லவே முடியாது. வாழ்நாள் முழுதும் சாதி, மதங் கடந்த ஒரு நாயனாராக, சைவத் தொடரால் சொல்லவேண்டுமென்றால் தமிழ் நாயனாராக வைணவத் தொடரால் சொல்ல வேண்டுமென்றால் தமிழ் ஆழ்வாராக அவர்கள் விளங்குகிறார்கள். அஃது ஒன்றுதான் தமிழ் இனத்துக்கும் அவர்களுக்கும் உரிய பிணைப்பு. ஏறக்குறைய இருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்கு முன் நானும் அவரும் திருச்சிராப்பள்ளியில் பி. ஓ. எல். எழுதுவதற்குச் சென்ற போது ஏற்பட்ட தொடர்பு எங்கள் இருவருடைய கருத்து ஒற்றுமையினாலும் அன்பினாலும் மேன் மேலும் வளர்ந்து வருகின்றது. அவர்களுடைய தனியன்பிற்கு ஒரு வகை நன்றி செலுத்துவதே, அவர்கள் கூட்டத்திற்கு 'வா' என்றழைக்கும் போது வந்து கலந்து கொள்வது. அந்த நன்றிக்கு அறிகுறியாக நான் நிற்கிறேன். வரமுடியாத ஒரு சூழ்நிலையிருந்தும்

கூட, ''நீங்கள் வரவில்லையென்றால் அது தமிழுக்குக் கேடும் இழப்பு மாகும்'' என்று உண்மையான அன்புத் தொடரால் எழுதியிருந் தார்கள். அது நமக்கே ஒரு கேடும் இழப்புந்தானே? அவர்களைப் பார்ப்பதற்குரிய ஒரு வாய்ப்பு. எவ்வளவு பெரியவர்கள் வந்திருக் கிறார்கள். நம்முடைய கோயம்புத்தூர் பெரியார், நாயுடு அவர்கள் தொழிற்சாலைத் தொழிலதிபர் அவர்கள் இப்பொழுது தமிழ் அதிபராக இங்கு வந்திருக்கிறார். தள்ளாத அகவையிலும் அவர்கள் இங்குவந்து கலந்து கொண்டிருப்பதே தமிழகத்தின் ஒரு சார்பு என்று நாம் சொல்லலாம். கலந்து கொண்ட நாம் எல்லாரும் சேர்ந்து ஒரு தட்டு; இன்னொரு தட்டு அவர்கள் தட்டு என்று வைத்துக் கொள்ளவேண்டும். ஆகவே எண்ணிக்கையைப் பொறுத்து யாரும் முடிவு செய்யக் கூடாது. ஆராய்ச்சி உலகில் எவ்வளவு பேர் கை தூக்குகிறார்கள், எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள் என்று பார்த்து முடிவு கட்டுவது ஆராயச்சியன்று. கருத்து எத்தனை? கருத்திலே ஒன்று வலிவுள்ளதாக இருந்தாலும் போதும். நூறு கருத்து இருக்கலாம். யாரும் தகர்க்க முடியாத ஒரு கருத்து இருந்தால் கூட போதும். அதுதான் வலுவுடையது. ''நான் நூறு கருத்தைச் சொன்னேன். நீ ஒரு கருத்தைத்தானே சொன்னாய். ஆதலால் தொண்ணூற்றொன்பது கருத்து கூடுதலாயிருக்கின்றதே'' என்றால், அஃது அறிவு நிலைக்கு ஒத்து வராது. கருத்து ஒன்றாக இருந்தாலும், அது பன்றி பல ஈன்று மென்ன? யானை ஒரு குட்டிபோல இருந்ததென்றால், அந்தக் கருத்து -தான் வலுவுடையது. முதற்கண்ணும் நான் சொன்னேன். ஏன் மீண்டும் சொல்லுகிறேன் என்றால், இந்த உலகத்தமிழ்க் கழகத்தில் எனக்கு அன்பில்லை என்று பொருளில்லை. அந்தக் கழகத்தின் சார்பாக, நான் இங்குப் பேசவில்லை. அப்படி அவர்கள் கூப்பிடாமல் கூட இருக்கலாம். யார் யார் சார்புடையவர் என்று பார்த்துக் கூப்பிட்டுக் கொள்ளலாம். கழக உறுப்பினர்களாகப் பேசிக் கொள்ளலாம். இது கழகக் கூட்டமென்று அவர்கள் வைத்துக் கொள்ளவில்லை. இது கருத்தரங்கின் கூட்டம் என்று வைத்திருக் கிறார்கள். நான் ஆராய்ந்து பார்த்தேன். அப்படி முடிவு கட்டவேண்டிய செய்தியா இது? அவன் (தமிழன்) எங்கே பிறந்திருந்தாலென்ன? எந்த விளையிலே (இடத்திலே) பிறந் திருந்தாலென்ன? தமிழன் பிறந்த இடத்தை முடிவுகட்ட வேண்டிய அவ்வளவு இன்றியமையாமை உண்டா? சுருக்கமாகச் சொல்லி விடலாம். தமிழன் ஒவ்வொருவனும் அவனவன் தாய் வயிற்றில்

பிறந்தான். முடிந்து போய்விட்டதே! 'புலிசேர்ந்து போகிய கல்லளை போல, ஈன்ற வயிறோ இதுவே, தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே' என்று அவனவனும் தாய் வயிற்றில் பிறந்தான். முடிந்து போய்விட்டதே! பிறந்த இடம் என்று சொல்ல வேண்டுமா?

பாவாணர் அவர்கள் இதனை அவர்கள் முடிவுகட்ட வேண்டுமென்று அதற்கொரு கருத்தரங்கு வைப்பானேன்? இன்னும் என்னென்ன கருத்தரங்கு வைக்கப் போகிறார்களோ? இருந்தாலும் இப்படியொரு கருத்தரங்கு வைப்பானேன்? இஃது ஒன்றை நிறுவினால் ஏராளமான கருத்துகள் நிறுவப் பட்டதற்கு இஃது ஒரு முன் அறிகுறியாகும் என்று கருதி வைத்திருக்கிறார்களென்று நான் நினைக்கிறேன். 'தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி நன்றி பயப்பதாம் தூது' என்பதுபோல, சுருக்கமாக இதை ஒத்துக்கொண்டானென்றால், இதிலிருந்து ஏராளமாக, அவர்கள் ஒத்துக்கொள்ளக் கூடிய பிற கருத்துகளும் வந்துவிடும் என்று ஒருவனுடைய நெஞ்சைப் பிடிப்பதைப் போல—குடுமியைப் பிடிப்பது போல என்று பண்டையில் சொல்வார்கள்—இந்தக்காலத்திலே அப்படிச்சொல்ல முடியாது; ஏனென்றால் குடுமியைப் பிடிக்கிறது போல இல்லை அது. ஒருவனுடைய கழுத்தைப் பிடிக்கிறது போல, நெஞ்சைப் பிடிக்கிறது போல, இன்னுஞ் சொன்னால் வயிற்றைப் பிடிக்கிறது போல--பிறந்தகம் இது என்று தமிழனுக்கு நிறுவி விட்டால், உண்மை நிறுவப்படும்; வன்மை நிறுவப்படும்; எதிர்காலத்தில் தமிழின் பெருமை நிறுவப்படும்; இந்தத் தமிழர்களுக்கு, 'நாமமது தமிழர் எனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?' என்ற கேள்வி யில்லாமல், 'நாமமது தமிழர் எனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்று' என்ற ஒரு தன்னம்பிக்கை ஏற்படும்; என்று இவ்வளவெல்லாம் நினைத்து, இந்தக் கருத்தரங்கைத் தொடங்கி யிருக்கிறார்கள், என்று கருதி நான் வந்திருக்கிறேன்; நீங்களும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

இந்தக் கருத்தரங்கின் சார்பாக ஏராளமாக ஆராய்ந்திருக்கிறார்கள். புதிதான ஆராய்ச்சி இல்லை. இரண்டே கருத்துத்தான். சுருக்கமாகச் சொன்னால் ஆணென்றும் பெண்ணென்றும் இருபாற்படுத்துவது போல, இரண்டே கருத்துத்தான். ஒன்று, தமிழன் இந்த மண்ணிற்குரியவனா? அல்லது புற மண்ணிற்குரியவனா? இந்தமண்

அவனுக்கு அகமா? அல்லது புறமா? அகத்ததோ, புறத்ததோ என்று வில்லிபுத்தூரார் சொல்வது போல அவன் வந்தவனா இருந்தவனா அல்லது இனிப் போகப் போகிறவனா? என்று இப்படிக்கேட்கிறார்கள். இதற்கு முடிவு கட்டுவதினாலே ஊதியம் என்பதில்லை. உண்மை தெரியவேண்டும் என்பதொரு கருத்து. உண்மையிலிருந்து சில வன்மைகள் வேண்டும் என்பதும் ஒரு கருத்து!

எங்கெங்கேயோ இருந்து வந்ததாக எல்லாரும் சொல்லித்தான் பார்க்கிறார்கள். நான் ஒன்றை—சில முறைகளை உடன்படுவதில்லை. கொள்கையை விடுவதில்லை. ஆனால் என்னுடைய முறை வேறு. கருத்து வேற்றுமை எவ்வளவோ இருக்கிறது. வேண்டுமென்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். அறியாமையினால் சொல்லக் கூடியவர்களும் பலர் இருக்கிறார்கள். கருத்து வேற்றுமைப் படுகின்றவர்களை நாம் இருசாராராக வைத்துக் கொள்ளலாம். கால்டுவெல்லைப் போல் பெரிய தமிழன்பர் ஒருவரை நாம் பார்க்க முடியுமா? அவர் வெளிநாட்டவர் என்பதற்காக அவரைத் தமிழ்ப் பகைவர் என்று சொல்ல முடியுமா? அதுபோல எவ்வளவோ மேனாட்டவர்கள் தமிழுக்கு உலகமுழுதும் ஆற்றலைக் கொடுத்தவர்கள் இருக்கிறார்கள். சிறப்பாக, கால்டுவெல் தமிழ்மொழிக்குப் பெரிய தொண்டு செய்தவர். ஓர் ஊழியையே மாற்றியவர். ஆனால் அவருக்குத் தொல்காப்பியம் தெரியாது. என்ன செய்வது? ஆனால் அவர் (தமிழ்மேல்) அன்பு உடையவர். அதே சமையத்தில் தமிழைப்பற்றி அறியாமையும் உடையவர் என்று வைத்துக்கொள்ள வேண்டும். கால்டுவெல் அவர்கள், "திராவிடம் என்று சொல்ல வேண்டியதில்லை. தமிழென்றே சொல்லலாம். திராவிடமொழி இனத்துக்குத் திராவிட இனமொழி என்று சொல்லத் தேவையில்லை. தமிழ் இனமொழி என்றே சொல்லலாம். இருந்தாலும் அது குழப்பமாக இருக்கும். பொதுச் சொல்லும் ஒரு மொழிக்குரிய தனிப்பெயரும் குழப்பம் வரும் என்பதற்காக, பொதுச் சொல் வேண்டும் என்றால் திராவிடம் என்று சொல்லலாம்" என்று சொல்லியிருக்கின்றார். திராவிட இனத்துக்கே தமிழினம் என்று சொல்லலாம் என்று சொன்ன அவ்வளவு பெரிய தமிழன்பர் அவர். "வடமொழியிலிருந்து-தான் தமிழ்மொழிக்கு வரும் என்பதில்லை. தமிழ்மொழியிலிருந்து ஏராளமான சொற்கள் வடமொழிக்குப் போயிருக்கின்றன" என்று பறைசாற்றிய பேரன்பர். இன்னும் "தமிழிலிருந்து வடமொழி மேற்

கொண்டவை எவ்வளவோ" என்றும், "வடமொழியின்றியே தமிழ் தனித்து இயங்க முடியும்; நினைத்தால் தமிழ்தானே இயங்க முடியும்; தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய ஏனைத் திராவிட மொழிகளைவிட தமிழ் தனித்து இயங்க முடியும்; அவ்வாறு இயங்கும் மொழியை நகரங்களில் பார்க்காதே; சிற்றூர்ப் புறங்களில் பார்"— என்றும் சொல்லி வைத்தவர். இருந்தாலும் அவர் வெளிநாட்டவர். எனவே அவரைப் பகைவர் என்று சொல்வதா? அறியாமை உடையவர் என்று சொல்வதா? தமிழ் இனத்தார் உள்நாட்டவர் என்றும் சிலர் அறியாமையினால் சொல்கிறார்கள். வெளிநாட்டவர் என்று சொல்வதிலும் சிலர் அறியாமை உடையவராகச் சொல்கிறார்கள். எனவே இந்தக் கருத்துக்கு மாறானவர்களெல்லாரும், தமிழுக்குப் பகைவர்கள் என்று ஒரு சார்பாக நாம் தள்ளமுடியாது. பகைவர் என்று சொல்வதைக் காட்டிலும்—அவர்களெல்லாம் அறியாதவர்கள் என்று சொல்ல முடியாது—அஃது ஆணவம் போலத் தெரிகிறது- அவ்வளவு பேரும் அறியாதவர்கள் என்று சொல்வதில் என்ன தெரிகிறது—நாம் நிரம்ப அறிந்தவர்கள் என்னும் ஒரு முனைப்பு வருகின்றது பாருங்கள். அதனால் கருத்து வளர்ச்சி ஏற்படுகிறது. ஆனால் சொல்லட்டுமே! ஒரு கருத்து தெளிவாகத் தெரிகிறது. ஆரியர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களில்லை என்று எவரும் சொல்லவில்லை. ஆனால் அப்படியில்லை திராவிட இனத்தவர்கள். தமிழர் வெளி நாட்டிலிருந்து வந்தவர்களா, உள்நாட்டிலேயே யிருந்தவர்களா என்று இரண்டு கட்சிகளிருக்கின்றனவே தவிர, ஆரியரைப்போல, முழுதும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்று ஒரேயடியாகச் சொல்லத் துணியவில்லை. ஆனால் சிறிய வரலாற்றுப் பொத்தகத்தில் படித்தாலும் ஆரியர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்தாம் என்று படிக்கவேண்டும்.

இன்னும் 5000 ஆண்டு 10000 ஆண்டு 20000 ஆண்டுக் கப்புறம் ஆங்கிலேயர் கூட உள்நாட்டவரா வெளிநாட்டவரா என்று ஆராய்ச்சி வரத்தான் செய்யும். காலம் போகப் போக இப்படி ஆராய்வார்கள். ஏனென்றால் நம்மவர்களிலேயே பலர் ஆங்கிலேயர் போல் இருக்கிறார்கள் பாருங்கள்! கால்டுவெல் — அவரைக் கூடத் தமிழர் என்று சொல்வார்கள். போப்ஐயர் என்று பெயர் இருக்கின்றது. அப்போது பெயரைப் பார்க்கிறவன் என்ன நினைப்பான். போப்ஐயர் கால்டுவெல் ஐயர் என்றிருக்கின்றதே, இவர்களெல்லாரும் தமிழர்கள் வழி வந்தவர்களாகத்தாம் இருப்பார்கள் என்று பதினாயிரம் இருபதி

ணுயிரத்திற்குப்பின் முடிவு கட்டுவார்கள். யார் கண்டது? வீரமா முனிவருடைய படத்தைப் பார்த்தால் தமிழருடையது போல் இருக்கின்றது. அதைச் சான்று காட்டமாட்டானு? தோற்றத்தைப் பாருங்கள்; தமிழர் தாம் இவர் என்றுகூடச் சான்று காட்டுவார்கள். காலம் கடக்கக் கடக்கச் சான்றுகள் குறையும்; கருத்து வேறுபாடுகள் மிகவும் பெருகத்தான் செய்யும்.

அதுபோல, என்ன? எளிமையான ஓர் ஆண்டுக்காலமா? எத்தனை ஊழி ஆகிவிட்டது. தமிழன் இந்நாட்டவனு பிறநாட்டவனு என்றுல், இந்த வீட்டிலிருந்தவனு, அந்த வீட்டில் இருந்தவனு என்று நேற்றைக்கு இன்று தெரியாத காலத்தில், கிட்டத்தட்ட இரண்டு இலக்கம் ஆண்டு மூன்று இலக்கம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழன் இந்த நாட்டிலிருந்தவனு என்பதை எப்படி முடிவு பண்ணமுடியும்? முடிவு பண்ணிவிட்டாலும், அதைப் பின்னுல் மறுப்பதற்கில்லை என்று யார் சொல்ல முடியும்? இன்று, இங்கு எல்லாரும் இக்கருத்தை ஒத்துக்கொள்ளக் கூடியவர்கள்தாம் வந்திருக்கிறீர்கள். ஒத்துக்கொள்ளாதவர்கள், பெரும்பாலும் வரமாட்டார்கள். அப்படி நாமே முடிவு கட்டிவிடுவதாக வைத்துக்கொள்ளுங்கள். பிற்காலத்தில் நாம் காட்டுவதைவிட ஒரு பெரிய சான்று கிடைத்து, பனிமலை தாழ்ந்து, குமரிக்கோடு மறுபடியும் எழுந்து, இப்படி ஏதாவது புதுச் சான்றுகள் கிடைத்தன என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது மறுபடியும் இச்சிக்கல் ஆராய்வதற்குரியதாகத்தான் இருக்கும். இருந்தாலும், இன்றுள்ள நிலையில் நாம் என்ன முடிவு பண்ணலாம்? இன்று நமக்குக் கிடைத்த ஆராய்ச்சி நிலையில், ஆராய்ந்தவர்கள் கூறும் கருத்துப் படியும், தமிழ் இலக்கியம் தரும் சான்றின்படியும், இன்றுள்ள நிலையில் ஒரு முடிவு பண்ணவேண்டும். அப்படித்தானே செய்ய முடியும்! நாளை நடப்பதை யாரறிவார்? அதைப் பற்றி நமக்குப் பேச்சில்லை.

காந்தியடிகளின் 'சுயசரிதை' என்னும் தன்வரலாற்றின் முன்னுரையில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவரிடம் ஒருவர் கூறினுராம், "நீ தன்வரலாறு எழுதக்கூடாது; நாளைக்கு உன்னுடைய கருத்து மாறுபடலாம். அப்படி மாறுபடும் பொழுது உன்னைப் பின்பற்றியவர்கள் என்ன ஆவார்கள்? ஆதலால் மேனுட்டவர்போலத் தன்வரலாறு எழுதக்கூடாது" என்று மறுப்புக் கூறினுராம். அதற்கு அவர் என்ன கூறினுராம், "நான் இதை இன்று,

என்னளவில் உண்மையென்று நம்பி எழுதுகின்றேன். இதை நான் ஒரு வஞ்சகமாக எழுதவில்லை.'' என்று தம் முகவுரையில் எழுதியுள்ளார். அதுபோல் இன்றுள்ள ஆராய்ச்சி முடிவின்படியும், பல கருத்துகளைக் கூறுகின்ற கோட்பாடுகளைத் தொகுத்துப் பார்க்கின்ற முறையிலும், சிறப்பாக நம் தொன்மை இலக்கியம் கூறுகின்ற சான்றின்படியும் பார்த்தால், என்ன முடிவு தெரிகிறதோ, அந்த முடிவை நாம் வைத்துக்கொள்வோம் என்றே நான் நினைக்கின்றேன். எனவே, நான் பேசும் பொழுது இதை மறுப்பாரை, கருத்து மறுப்பாராக நான் கருதுகின்றேனே தவிர, அவர்கள் தமிழுக்கே முற்றும் முரணானவர்கள் என்றோ, ஒரு பகைவர் என்றோ சொல்ல நான் விரும்பவில்லை. அப்படிச் சொல்வது அறியாமையின்பாற்பட்டது.

பொதுவாக இந்தக் கோட்பாட்டில் சாதி, மதம் என்பது இல்லை. சிலர், இதில் பார்ப்பனர்களைச் சுட்டுகிறார்கள், என்றும் நினைக்கலாம். அப்படி நான் எடுத்துக்கொள்ளவில்லை. பாவாணர் ஐபாவுக்கும் அப்படி எண்ணமில்லை. காலையில் பேசியபொழுது இராமச்சந்திர தீட்சிதர், பி. தி. சீனிவாச ஐயங்கார் எழுதியவற்றையெல்லாம் போற்றியதைப் பார்த்திருக்கிறோம். இவர்கள் அப்படிச் சொல்லவில்லை. தெ. பொ. மீ. நல்ல தமிழர். அவர் அப்படித்தான் சொல்லுகிறார். வி. ஐ. சுப்பிரமணியம் மொழிநூலில் தேர்ந்தவர். அவர் வெளிநாட்டுக்குப் போய் வந்த முறையிலே, நம் ஆட்களும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்தாம் போல் இருக்கிறது என்று அவர் கருதுகிறார். இப்படிக் கருத்து மாறுபாட்டிற்காக இவன் தமிழன், இவன் தமிழனில்லை என்று சொல்லுகின்ற முறை என்னைச் சார்ந்ததில்லை, என்று இந்த உலகத்தமிழ்க் கழகம் கூட்டிய இந்தக் கருத்தரங்கில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன், கருத்து மாறுபாட்டை மறுப்பேன், அல்லது உடன்பட மாட்டேன், என்பதைத் தவிர, அதனால் ஒருவன் தமிழனா தமிழனில்லையா என்று —நான் கூறுகின்ற ஒரு கருத்தை அவன் ஏற்றுக் கொள்வதனாலோ, கொள்ளாமையினாலோ—என்னுடைய படிக்கல்லை வைத்து, அவன் தமிழன் தமிழனில்லை என்று முடிவுகட்டுகின்ற அந்த துலை (தராசு) முறை என்னிடத்தில் இல்லை. அதனால்தான் துணிவாக இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுகின்றேன். கருத்து வேறுபாட்டிற்காக ஆட்களை ஒதுக்கும் முறை என்பால் இல்லை. ஆனால் அந்தக்கருத்து முறை ஏற்றதா என்று கருத்தால் கண்டிக்கக் கூடிய போக்

குடையவன் என்பதால்தான், இந்தக் கருத்தரங்கிற்குத் தவருமல் வரவேண்டும் என்று என்னை அழைத்திருக்கிருர்கள். அவர்களுக்குள் நான் ஒருவனுக இருந்தால் என்னைக் கூப்பிட்டிருக்கமாட்டார்கள். இப்படிப் பொதுவாக நம்மையும் சொல்லி, தன்னையும் சொல்லக் கூடிய ஒருவர் வேண்டும் என்பதற்காகத்தான், கண்டிப்பாக நீங்கள் வரவேண்டும் என்று கூறியிருக்கிருர்கள். எனவே இதில் பிராமணர்களுக்குச் சார்பானவர்களும் இருக்கிருர்கள்; அவர்களை மறுக்கிறவர்களும் இருக்கிருர்கள். நீங்கள் நினைக்கும்படி பிராமணரல்லாதவர்களுக்கும் சார்பானவர்கள் இருக்கிருர்கள்; அவர்களை மறுக்கிறவர்களும் இருக்கிருர்கள். இதற்கு – இக்கருத்தரங்கில் ஆயப்படும் கருத்துக்குச் சாதி, மதம், கட்சி என்பவையெல்லாம் இல்லை அவரவர்கள் கருத்துக்கு என்னென்ன புலப்படுகின்றதோ, அந்தக் கருத்தை இங்குச் சொல்லலாம்.

ஆனுலும், ஆராய்ச்சி உலகில் உங்கட்கு ஒன்று சொல்லுகின்றேன். அன்பில்லாத ஆராய்ச்சி எங்கேயோ கொண்டுபோய் விடும். எப்பொழுதுமே அதற்கு ஓர் அன்பு வேண்டும். பலருடைய ஆராய்ச்சியைப் பார்க்கும் பொழுது எனக்கு என்ன படுகிறது? அன்பற்ற ஆராய்ச்சியாகப் படுகின்றது. அன்புஇருக்கவும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். ஆனுல் கொஞ்சம் வெறுப்போடு அந்த ஆராய்ச்சி தொடங்குவதுபோல் இருக்கிறது. சிலர் எழுதியிருக்கிற சொற்களில் அது தெரிகிறது. தமிழன் இந்த நாட்டவன் இல்லை என்று சொல்லும் பொழுது, அதற்கு எழுதுகின்ற நடையிலே அந்தக் குத்தல் தெரிகிறது. ஆதலால்தான் அன்பில்லை என்று நான் சொல்ல விரும்புகின்றேன். நாம் எத்தனையோ மறுக்கிருேம். தொல்காப்பியரை மறுக்கக்கூடாது என்று இருக்கிறதா? வள்ளுவரை மறுக்கக்கூடாது என்று இருக்கிறதா? இருந்தாலும் அந்தப் பெருமைச் சொற்கள் அங்கு இல்லை. ஆதலால், கொஞ்சம் வெறுப்பு இருக்கிறதோ கசப்பு இருக்கிறதோ என்று காணுகின்ற ஒரு கூர்மை நமக்கு வருகிறது. எப்பொழுதுமே அன்பு வேண்டும்; நாட்டுப்பற்று வேண்டும். இல்லையா? நாட்டுப்பற்று வேண்டுவது போலவே மொழிப்பற்றும் வேண்டும். பிள்ளையிடத்தில் பற்று வேண்டும்; மனைவியிடத்தில் பற்று வேண்டும் கணவனிடத்தில் பற்று வேண்டும். இப்படி எத்தனையோ பற்று நமக்குத் தேவையாக இருக்கிறது, அப்புறம் ‘பற்றுக பற்றற்ருன்’ என்னும் அந்தப் பற்றும் நமக்குத் தேவையாக இருக்கிறது ஆதலால்,

நான் கண்ட பல ஆராய்ச்சிக் குறிப்புகளில் உள்ள ஒரு குறை அன்பற்ற ஆராய்ச்சியாக இருக்கிறது என்பதுதான். அதோடு, அன்பற்று இருப்பதுடன், வெறி என்று சொல்லுகின்ற இன்னொரு போக்கும் வேறு கூடவே வளருகிறது. 'தமிழ் வாழ்க' என்றால், அப்பொழுது ஏனையவை ஒழிகவா? என்று அப்படி ஒரு குதர்க்கமான ஒரு நடையும் தமிழ் நாட்டில் பெருகியிருக்கின்றது. '**மன்னும் இமயமலை எங்கள் மலையே! மாநில மீது அதுபோற் பிறிதில்லையே**' என்றால், இதில் என்ன இருக்கிறது; மன்னும் இமயமலை எங்கள் மலை என்றால், இந்த மாநிலத்தில் உள்ள மலையெல்லாம் எங்கள் மலை இல்லையா — என்று குதர்க்கமாக—வீம்பாகவா பொருள் எடுத்துக் கொள்ளுகிறது? 'மாநில மீததுபோற் பிறிதில்லையே' என்று சொன்னாலும், 'என் குழந்தைபோல் வேறு குழந்தையில்லை' என்று சொல்வதும், நம்முடைய அன்பை வளர்ப்பதற்குரிய நீரே தவிர, அது வெந்நீர் இல்லை. அது தண்ணீர் என்று நினைக்க வேண்டுமே தவிர — நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப் பற்று, குழந்தைப் பற்று, குடும்பப் பற்று இவை யெல்லாம் தண்ணீர் என்று நினைக்க வேண்டுமே தவிர, வேறு எதையோ அழிப்பதற்குரிய வெந்நீர் என்று நீங்கள் நினைக்கவே கூடாது. அவையெல்லாம் தண்ணீர். தண்ணீர் ஊற்றுவிட்டால் நம்முடைய செடி வளராது. '**பாருக்குள்ளே நல்ல நாடு**' — என்றால் மற்ற நாடெல்லாம் என்ன நாடாம் என்று இப்படியா எடுத்துக் கொள்ளுகிறது? இப்படிக் குதர்க்கமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

தமிழைப்பற்றிப் பேசும்பொழுது பல பேருக்கு அப்படிக் குதர்க்க உணர்ச்சி வருகிறது; இகல் உணர்ச்சி வருகிறது; வீம்பான உணர்ச்சி வருகிறது. தமிழன், தமிழ் மிகத் தொன்மையுடையது என்று சொன்னால், அப்பொழுது உலகத்தில் மற்றமொழியெல்லாம் என்ன'ங்க?' என்று கேட்கிறார்கள். தமிழ்மொழி தொன்மையுடையதா இல்லையா? தமிழன் மிகத் தொன்மையுடையவனா அல்லனா? தமிழ் வளர வேண்டுமா இல்லையா? அந்த அளவுக்குத்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, வேற்றுமொழி வளர வேண்டுமா இல்லையா? என்று குதர்க்கமாகத் திருப்பிக் கேட்கக் கூடாது. தமிழைப் பேசினாலே உடனே, பலபேர்கள் அவன் எதற்கோ குழி தோண்டுகிறான் என்று நினைக்கிறார்கள். பேசும் பொழுது இவனே (தமிழனே) குழி தோண்டிக் கொண்டுதான் இருக்கிறான், இவன்

தனக்கே குழி தோண்டிக் கொண்டிருக்கும் பொழுது—யாருக்கோ இவன் குழி தோண்டுகின்றான் என்று கூறுகின்ற ஓர் அன்பற்ற ஆராய்ச்சி-அன்பற்ற அறிவு—இதைத்தான் பலருடைய முடிவாக நான் பார்க்கின்றேன். கருத்திலேகூட அதை நான் பார்க்கவில்லை. அந்த மொழி நடையில் இருக்கின்ற சொற்கள், தொடர்கள் அவை குத்தலாகக் காணப்படுகின்றன. ஆதலால் ஆராய்ச்சிக்கு ஒருவகை அன்பும் வேண்டும். அன்பில்லாமல் செய்கின்ற ஆராய்ச்சி ஒருவகை வீம்பாகத்தான் முடியும். இவ்வகை ஆராய்ச்சிகள் இடைக்காலத்தில் எப்படியோ பல கரணியங்களால், ஆயிரம் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளாக அன்பில்லாத ஆராய்ச்சியாகவே போய்விட்டது. இத் தன்மை இன்று நேற்று வந்ததில்லை "அன்பும் அறனும் உடைத் தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்று சொல்லுகிறார் பாருங்கள். அத்தகைய அன்பு ஆராய்ச்சியிலும் இருக்க வேண்டும். இப்பொழுது இந்தக் கைக்கடிகாரம் இருக்கிறது. இதை ஆராய்ந்து செய்கிறோம். கட்டிக் கொள்ள வேண்டும் என்ற அன்பினால்தானே இதைச் செய்கிறோம். வெறும் ஆராய்ச்சிக்காகவா இதைச் செய்கிறோம்? இதைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஓர் அன்பிருந்தால் — ஒரு பற்றிருந்தால், அப்பொழுதுதான் இந்தக் கடிகாரத்தைப் போற்றுவோம். அதுபோல எந்த ஆராய்ச்சிக்கும் அன்பு அடிப்படைத் தேவை. அறம் மட்டும் போதாது. அன்பும் வேண்டும். அறம் அன்பாகாது. 'அன்பும் அறனும்' என்று சொல்வதால் அன்பு வேறு, அறம் வேறு என்று ஆகிறது. அறத் திற்குள் அன்பு அடங்கவில்லை என்று தெரிகிறது. எனவே அன்பு அடிப்படையிலேயே ஆராய்ச்சி செய்யப் பெறுதல் வேண்டும்.

கருத்துகள் நிறைய இருந்தும், படித்திருந்தும், அஃது ஒருவகை நலம்பயக்க வேண்டும் என்னும் அன்பில்லாத கரணியத்தால், அவர் களுடைய தொடர்களும் முடிவுகளும் எங்கோ அவர்களுடைய தொடர்பைக் காட்டிக் கொடுத்து விடுகின்றன என்று சிலர்பால் நாம் நினைக்கவே வேண்டியிருக்கின்றது. இந்த முறையில் எதிர்காலத்தில் எவ்வளவு பெரிய அறிஞர்களானாலும் கூட அவர் களுக்கு அன்போடு கூடிய ஆராய்ச்சிப் பார்வை வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். எவ்வளவு படித்தவராக இருந்தாலும், மொழியாராய்ச்சி வல்லுநராக இருந்தாலும் ஆராய்ச்சிப் போக்கில் அந்த அன்பு வேண்டும். அன்பில்லாவிட்டால் என்னாகும்?

பேரா. வையாபுரிப் பிள்ளை அவர்கள் செய்தது போல, தொல் காப்பியத்தில் ஒரு கருத்து இருக்கிறது, வடமொழியில் அஃதாவது பாணினியத்தில் ஒரு கருத்து இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், உடனே அவர் என்ன செய்வார், (வேறு ஒன்றும் அவர் ஆராய்ச்சியில் தவறு இல்லை) வடமொழியில் இருக்கிற கருத்தை முந்தி என்பார்; அவ்வளவுதான்! தமிழிலிலும் இருந்தது; வடமொழியில் உள்ள நூலிலும் அதே கருத்து இருந்ததானால், எங்கே இருந்து எங்கே போனது என்றெல்லாம் பார்க்க மாட்டார். வடமொழியில் இருந்ததுதான் முதலாக இருக்கும் என்று அப்படியே முடிவு பண்ணி விடுவார். அவர் ஆராய்ச்சியில் இருக்கிற அவ்வளவு குற்றமும் இந்த ஒன்றுதான். மற்றப்படி கருத்துகள் நிறைய இருக்கும். இருந்தாலும் தண்டியிலே உண்டு; இது பாணினியத்திலே உண்டு; இது ஐந்திரத்திலே உண்டு என்று சொன்னால், தமிழில் எப்பொழுதும் பிந்தித்தான் வந்திருக்க வேண்டும்; வடமொழியில்தான் முந்தியிருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற ஓர் அன்பற்ற குறைபாட்டை நாம் பார்க்கின்றோம். கால்டுவெல் அப்படிப் பார்க்கவில்லை. வடமொழியி லிருந்து வந்ததுபோல தமிழிலிருந்தும் போயிருக்கக் கூடும் என்று கூறும் ஒரு முறை மாற்றத்தை நாம் அவரிடம் பார்க்கிறோம். ஆதலின் இன்று எடுத்துக் கொண்ட கருத்தைப் பொறுத்தவரையில் பலருடைய ஆராய்ச்சியில் ஓர் அன்புக் குறைவை நாம் பார்க்கிறோம். அது சரிப் பட்டால் இந்த ஆராய்ச்சி முடிவுகள் கூட சரிப்படும் என்பது என்னுடைய கருத்து.

அன்பர்களே! நான் இனிமேற்றான், எடுத்துக் கொண்ட தலைப் புக்குள் சில கருத்துகளைச் சொல்லப் போகிறேன். இதுவரையில் நான் சொல்லியது, அஃதாவது நான் முகவுரையாகச் சொல்லியது, உலகத் தமிழ்க் கழகத்தில் நான் உறுப்பினன் அல்லன். ஆகவே நான் சொல்லக் கூடிய கருத்துகளை, இந்தக் கழகத்தினரின் தூண்டுதலாலோ அவர்களுக்கு இன்பம் பயக்க வேண்டும் என்பதற்காகவோ சொல்லக் கூடிய நிலை எனக்கில்லை. நான் கண்ட அளவில், நான் கண்டது என்னவோ அதை உங்கட்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். முன்பும் சொன்னேன்; இதற்குமேல் வலிவான கருத்துகள் பின்னே வந்தால்— நாம் நிலாமண்டிலத்திலிருந்துதான் வந்தவர்கள் என்று சொல்லி விட்டால்தான் நமக்கென்ன? இங்கு உள்ள வரையில் நமக்குக் கிடைத்த முடிவு என்ன என்று நாம் முடிவு பண்ண வேண்டும்

என்பதுதான் இந்தக் கருத்தரங்கின் பயன். இன்னுமொன்று கூறினேன். கருத்து ஒத்துச் சொல்கின்றவர்கள் பெரிய நண்பர்கள் என்றோ, கருத்துக்கு மாறுகச் சொல்லுகிறவர்கள் பெரும் பகைவர்கள் என்றோ, எண்ணுகின்ற அந்த நெஞ்ச வேறுபாடு எனக்கில்லை என்பதனை உங்கட்குப் பணிவுடன் சொல்லிக் கொள்ளுகின்றேன். அதைப்போல இந்தக் கருத்தை இன்ன சாதி ஒத்துக் கொள்ளும்; இன்னமதம் ஒத்துக்கொள்ளும்; இன்ன 'சாதி' ஒத்துக்கொள்ளாது' இன்னமதம் ஒத்துக் கொள்ளாது என்ற அந்தப் பாகுபாடும் எனக்கில்லை. கருத்து அடிப்படையில்தான் இங்குப் பேச்சே தவிர, சாதி சமய அடிப்படையில் எனக்குப் பேச்சில்லை, என்பதையும் இந்தப் பெருங் கூட்டத்திற்கு இடையே நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஏன் இவ்வளவும் சொல்லிக் கொள்ள விரும்பு கின்றேன் என்றால், சொல்லும் முடிவுக்கு இந்த முன்னுரைகள் ஒரு பெருந்துணை செய்யும்; உங்கள் நெஞ்சையும் ஓர் ஒழுங்கு படுத்திக் கொள்ளும் என்பதற்காகத்தான். ஏனென்றால் இங்குச் சொல்வதனால் இவர் இன்ன சாதியைச் சொல்லுகிறாரோ என்று சாதியை நினைக்க வேண்டாம். கருத்தை மட்டும் நினையுங்கள்.

இன்று இதுவரை ஆராய்ந்தவர்கள், தமிழர்கள் உள்நாட்டவர் என்பார்களானால், இதில் இரண்டு கருத்துகள் உண்டு. அஃதாவது இப்பொழுது இருக்கின்ற இடத்திலேயே இருந்தவர்களா? அல்லது இன்னும் தென்னாட்டிலிருந்து வந்தவர்களா? என்பது ஒருவகை ஆராய்ச்சி. அவர்கள் வெளிநாட்டவர் என்றால் நான்கு திசையும் வெளிநாடு தான்; எந்தத் திசையிலிருந்து வந்தவர்கள் என்பது ஒருவகை ஆராய்ச்சி. 1910-ஆம் ஆண்டிலேயே ஆங்கிலத்தில் பெருநூல் எழுதிய **கனகசபைப் பிள்ளை யவர்கள்**, நம்மை ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் வேறொரு திசையிலிருந்து அஃதாவது வங்காளம் முதலிய நாடுகளிலிருந்து வந்த மங்கோலியர்கள்—என்று சொல்லுகிறார். மீனவர், மறவர் என்ற சில ஒலிக்குறியீடுகளைப் பார்த்து, நம்மை மங்கோலிய நாட்டிலிருந்து வந்தவர்கள், திபேத்திலிருந்து வந்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். அப்புறம் ஒருசாரார் நாம் நடு ஆசியாவிலிருந்து வந்தவர்கள, வடமேற்குக் கணவாய் வழியாய் வந்தவர்கள்—என்றெல்லாம் கூடச் சொல்லுகிறார்கள். இன்னொருசாரார் இன்னொன்று சொல்லுவார்கள். —எனக்கு அஃது உடன்பாடில்லை—இங்கிருந்து போனார்கள் என்றும்

சொல்லலாம்; அங்கிருந்து வந்தார்கள் என்றும் சொல்லலாம். சான்று என்னவோபொதுவாக இருக்கிறது. தமிழிலே இருந்துதான் திராவிடம் வந்தது என்பார் ஒருவர். இன்னொருவர் திராவிடந்தான் தமிழாயிற்று என்பார். இதுவும் ஒருபெரிய சண்டை. திராவிடம் என்கிற சொல்லே—திரமிளம் என்கிறது—அப்புறம் தமிழம் என்கிறது—அப்புறம் தமிழ் என்கிறது. தமிழ் என்கிறதும் அப்படியே போகும். தமிழ் - தமிழம்—திரமிளம்—அப்புறம் திராவிடம் என்கிறது; இப்படியே போகும். உள்ளே எப்படிப் போனானோ அப்படி வெளியே வருவான்; வெளியே எப்படி வந்தானோ அப்படி உள்ளே போவான். அதனாலே அதையெல்லாம் ஒரு பெரிய சான்றாக நாம் கொள்ள முடியாது. இங்கிருந்துதான் முதலிலே வெளியிலே போனான் என்பதற்கு அசைக்க முடியாத சான்று வேண்டும். அல்லது வெளியிலேயிருந்துதான் இங்கே வந்தான் என்பதற்கும் அசைக்க முடியாத சான்று வேண்டும். நீங்கள் என்ன சொல்லுகிறீர்களோ, அதையே திருப்பி நானும் சொல்லலாம். அங்கிருந்து வந்தான் என்பதற்கு என்ன சான்று சொல்லுகிறீர்களோ, அதே சான்றைத் திருப்பி இங்கிருந்து அங்குப் போனான் என்பதற்கும் சொல்லலாம். இவற்றுக்கெல்லாம் ஒருவனும் மறுக்க முடியாதபடி – அசைக்க முடியாதபடி எந்தச் சான்றும் சொன்னதில்லை. ஒரு சான்று சொல்லுகிறார்கள் பலுச்சித்தானில் பிராகூயீ என்னும் ஒரு திராவிடமொழி இருக்கிறது. திராவிட மொழியில் இன்றியமையாத சொற்கள் அங்கும் இருக்கின்றன. கால்டுவெல் எழுதிய ஒப்பிலக்கணத்தின் இறுதிப் பகுதியில் பிராகூயீ என்னும் திருந்தாத் திராவிட மொழியிலும் தமிழ்மொழியிலும பொதுவாக விருக்கின்ற சொற்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். இதை வைத்துக்கொண்டு ஒரு சாரார் சொல்லுகின்றார்கள், திராவிட இனம் வெளியே எங்கேயோவிருந்து வரும் பொழுது, பலுச்சித்தான் எல்லையில் ஒருகுடி அங்கேயே உட்கார்ந்தது; அப்புறம் உள்ளே நுழைந்தது 'என்று. சிலர் என்ன சொல்லுகிறார்கள், இங்கேயிருந்து அந்த மக்கள் வெளிநாடுகளுக்குப் போனார்கள், போகும் பொழுது அங்கும் கொஞ்சம் நிலைத்துப் போனார்கள் என்று. இப்படியே இருதிறத்தும் சொல்லலாம், ஆனால் கால்டுவெல் எழுதின சான்று வலுவடைந்து வருகின்றது இப்பொழுது. கால்டுவெல் திருந்தாத திராவிட மொழிகள் ஆறு என்றார். இப்பொழுது அம் மொழிகள் இருபத்திரண்டு. இன்று வடநாடு முழுதும் திட்டுத் திட்டாகத் திராவிடக் கூறுகள் அமைந்திருக்கின்றன. திருந்தாத

திராவிட மொழிகளின் எண்ணிக்கை வரவர நாம் பெருகப் பார்க்கிறோம். கால்டுவெல் ஆறாக இருந்தவற்றைப் பின்பு பன்னிரண்டு என்றனர். இன்று இருபத்திரண்டு, இருபத்தைந்து என்ற அளவில் கூறுகின்றனர். ஒருகால் குமரிக்கண்டத்தில் மட்டுமன்றி, இமையமலை வரை ஒருகாலத்தில் ஓரினம் இருந்தது என்று முடிவு பண்ண வேண்டியிருக்கின்றது. அந்த இனத்திற்குத் தமிழினம் என்று நம்முடைய பெயர் இருந்தாலும் சரி! வேறு என்ன பெயர் இருந்தாலும் சரி. மேலும், நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்கள் அனைத்திலும் இமையம் என்னும் மலையின் பெயர் சொல்லப்பட்டு இருக்கின்றது. ஆதலால் தமிழன் வெளிநாட்டிலிருந்து வந்தான் என்பதற்குச் சரியான சான்று சொல்லப்படவே இல்லை.

அடுத்தது, அவன் (தமிழன்) உள்நாட்டவனா என்று பார்க்க வேண்டும். என்னுடைய முடிவு உள்நாட்டவனே என்பது தான். அவன் வெளிநாட்டிலிருந்து வந்தவனில்லை. இதற்கு இரண்டொரு சான்றுகள் – அசைக்க முடியாத சான்றுகள் சொல்லுகிறேன். நம்முடைய தமிழ் இலக்கியங்களில் உள்ள பல கருத்துகள் வெளிநாட்டவருக்குத் தெரிவதில்லை. அப்படித் தெரியாவிட்டாலும் நம்முடைய ஆட்கள் அதற்கு வேறொரு விளக்கம் காட்டித்தான் தெரிவிக்கிறார்கள். அதனால் வரும் இடையூறுகளே மிகுதி. இதைப் பற்றியே (தமிழன் பிறப்பிடம் பற்றியே) முதற்கண் ஆராய்ந்தவர் இளங்கோவடிகள் என்று நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும். தமிழன் எங்கிருந்து வந்தான், தமிழ்நாடு என்பது எவ்வளவினது என்று நாம் இன்று எடுத்துக் கொண்ட கருத்தை முதன் முதல் ஆராய்ந்து, தெளிவாக, சேரநாட்டு மாடல மறையோன் என்பான் வாயிலாக எடுத்துச் சொன்னவர் இளங்கோ என்ற சேரநாட்டு மன்னர்—மன்னவர் வழியில் வந்தவர். அது (அக்கருத்து) இன்று தமிழன் உள்நாட்டவனா வெளிநாட்டவனா என்று ஆராயப் பெறுகின்ற வேற்று நாட்டுக் கட்டுரைகளில், இடம் பெற வில்லை. வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர்தாம் அவர் காலத்தில் சிலப்பதிகாரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அப்புறம்தான் இந்தக் கருத்து கொஞ்சம் பரவிற்று. இவ்வாறு இளங்கோ சொல்லிய இக் கருத்தை இக் கூட்டத்திற்கு வந்தவர்கள் கொஞ்சம் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். யாராவது மறுப்புச் சொன்னால் அப்புறம் பார்க்கலாம்.

சேரநாட்டு மாடல மறையோன் பாண்டி நாட்டுக்கு வந்தான். ஒரு சோலையிலே உட்கார்ந்தான். உட்கார்ந்தவுடன் அந்தப் பாண்டியனைப் புகழ்கின்ருன். புகழும் பொழுது,

> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள,
> வடதிசைக் கங்கையும் இமையமும் கொண்டு
> தென்திசை யாண்ட தென்னவன் வாழி!

என்பதாகப் புகழ்கின்ருன். சிலப்பதிகாரத்தில் நமக்கு வேண்டிய இடம் இந்த நான்கு வரிகள்தாம். "பாண்டியனே! உன்னுடைய பெருநாடு கடல் கொள்ளப்பட்டுவிட்டது. அதற்கு ஈடாக இன்னெரு பெருநாட்டை நீ கைப்பற்றிஞய்" என்பது. சிலப்பதிகாரம்-நாம் நினைக்கின்றபடி-ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முந்தியது. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முந்திய எந்தக் கல்வெட்டும் இல்லை. வேறு எந்தச் சான்றும் நமக்கு இல்லை. ஓர் இலக்கியம்; உரையோடு உள்ள ஓர் இலக்கியம்; பாடவேறுபாடுகளும் இல்லை. அப்படிச் சிலர் செய்திருக்கலாம் பாருங்கள், காலத்திற்கேற்ப. பஃறுளி யாற்றுடன், பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள,-வருத்தப்படுகின்ருன். "உன்னுடைய நாடு எவ்வளவு பெரியநாடு போய்விட்டது. இந்தச் சிறியநாட்டை நீ ஆண்டு கொண்டிருக்கிருய்'. பஃறுளியாறு என்று ஓர் ஆறு இருந்தது. எவ்வளவு அழகான பெயர். அந்தப் பெயரைப் பார்த்தாலே இந்தத் தமிழ் பிறந்தது இந்த நாடு என்று புலப்படவில்லையா?

இன்றைக்கும் ஆய்தம் என்று ஓர் ஆய்தம் போடுகிருர்கள், நீங்களும் பார்த்திருக்கலாம். வஞ்சகம் என்று ஒருவனைக் கற்பிக்கும் நெஞ்சமில்லாத எனக்குக் கூட, சிலபேர் வஞ்சகமாகச் செய்கிருர்களோ என்னுந் துடிப்பு சில நேரங்களில் வந்து விடுகிறது. தமிழ்ச்சொல் வரவேண்டும் என்ருல் தமிழ்ச் சொல்லை ஆக்கலாம். TROOP என்று இருக்கிறது. அதை இன்றைக்குத் துருப்பு என்று எழுதி விடுகிருர்கள். நாமும் தமிழ்ச் சொல்லென்றே நினைக்கிறேம். ஏன்? பருப்பு, கருப்பு, மருப்பு, செருப்பு என்று வருகின்றன பாருங்கள். அவைபோலவே துருப்பு என்ற அந்தச் சொல் தமிழாக ஆக்கப் பட்டது. அப்படித் தமிழாக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் ஆக்கஞ் செய்ய வேண்டும். Nature என்பதைக்கூட சிலர்

காசர், தேசர் என்பன போல் நேசர் என்றும் கூறிவிடுகிறார்கள். போகட்டும் நேசர் என்றாவது இருக்கட்டும்.

நீங்கள் இன்னுஞ் சிலவற்றைப் பார்த்திருக்கலாம். File என்பதை ஃபைல் என்றெழுதுவதைப் பார்த்திருக்கலாம். சைபர்—சைஃபர் என்றும் எழுதுகிறார்கள். இப்படி ஏராளமான சொற்கள் வந்துவிட்டன இதற்குக் கணக்கு வழக்கே இல்லை. நாம் என்னவோ "Non-violence" என்று நினைக்கிறோம். தமிழில் இத்தனை ஆய்தங்கள் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் இவற்றாலேயா மொழி கெட்டு விட்டது என்று நினைக்கலாம். ஆமாம்; ஒலிக்கலப்பினால் மொழி கெட்டிருக்கின்ற அளவு, கருத்துக் கலப்பினால் கெடவில்லை. வட வேங்கடம் ஏன் போயிற்று? இளங்கோ பிறந்த சேர நாடும், பதிற்றுப் பத்து தந்த சேர நாடும் எதனால் போயிற்று? சேர நாட்டை ஏன் இழந்தோம்? சிலப்பதிகாரம் பிறந்த சேர நாட்டை ஏன் இழந்தோம்? ஆழ்வார்கள் பாடிய வடவேங்கடத்தை ஏன் இழந்தோம்? கண்ணப்பரை ஏன் இழந்தோம்? என்ன இழந்தோம்? சாதி வேற்றுமை உண்டா? மத வேற்றுமை உண்டா? ஒலிக்கலப்பு ஒன்றினால் இழந்தோம் என்பதைத் தமிழினம் மறக்கக் கூடாது. எப்பொழுது எப்பொழுது ஒலிக்கலப்பு ஏற்பட்டதோ அப்பொழுது அப்பொழுது எல்லாம் நம் நாட்டின் ஒருபகுதியை இழந்து கொண்டு வந்திருக்கின்றோம். நாட்டின் ஒருபகுதியைக் கடல் கொள்ளுகிறது; ஒரு பகுதியை ஒலிக்கலப்பு கொள்ளுகிறது. கடல்கோள் என்பது ஒரு பகுதி. அந்நிலையிலாவது கடல் கொண்டு விடுகிறது. இங்கு நிலம் இருக்கவே பறி போகிறது. எப்படிப் பறிபோகிறது என்றால் ஒலிக்கலப்பினால் போகிறது. மூன்று நாட்டில் முடியுடை மூவேந்தர் என்றிருந்த ஒரே நாடு வேறு என்ன காரணத்தால் குறைந்து போனது? எப்படிப் போனது? அடித்துக் கொன்று கொண்டு போனார்களா? வஞ்சித்துக் கொன்றார்களா? அல்லது உழிஞை வஞ்சி என்று படையெடுத்துக் கொண்டுபோனார்களா? சிலப்பதிகாரம் முதற்பாவியம் பிறந்த அந்தச் சேர நாடு—வரலாற்றிலேயே பதிற்றுப் பத்து பிறந்த அந்தச் சேரநாடு எதனால்போயிற்று என்று ஒரு கணம் நினைத்துப் பார்த்தால், கருத்து வேற்றுமையினால் போகவில்லை; ஒலிக்கலப்பினால், ஒலிக்கலப்புக் கேற்ப எழுத்துக் கலப்பினால் போய் விட்டதே!

ஒலி கூட இப்பொழுது கலந்து பேசுகிறோம். தேசம் என்கிறோம்; பா(BA)ரதியார் என்கிறோம், பா(PA)ரதியார் என்று எப்பொழுது நாம் சொல்லவில்லையோ, பா(PA)ரத தேசம் என்று எப்பொழுது நாம் சொல்ல வில்லையோ, அப்பொழுதெல்லாம் தமிழை நெஞ்சில் தாக்குகிறோம். பா(BA)ரதியார், பா(BA)ரததேசம் என்றல்லவா சொல்லுகிறோம்' இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் தமிழைக்கூட

த(DHA)மிள் என்பான்! நீ யார்? என்று கேட்டால், நான் ஒரு த(DHA)மிளன் என்பான். அப்படிச் சொல்லப் போகிறானா இல்லையா என்று பாருங்களேன். ஆதலால், ஒலிக்கலப்பு நேரக் கூடாது என்பதற்காக இவ்வளவும் சொன்னேன்.

இனி, ப∴றுளி என்ற ஆற்றின் பெயரை எடுத்துக் கொள்ளுங்கள்; அருமையான தமிழ் வடிவம் இது. இப்பொழுது நம்மைப் பிரிக்கச் சொன்னால் பல்துளி என்று பிரிப்போம். பல்துளி என்பது ஓர் ஆற்றின் பெயர். அ∴றிணை என்ற சொல் எவ்வளவு நல்ல தமிழ் அமைப்புடைய சொல். உயர்திணை, அல்திணை என்பது அது. எப்பொழுது அந்த ஆய்தப் புணர்ச்சி வந்ததோ, அப்பொழுது அந்தச் சொல் மிக இன்றியமையாத ஒரு தமிழ்ச் சொல் எனவும், மிகப்பழைய தமிழ்ச் சொல் எனவும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இனி, ஆய்தம் இருக்கும் தமிழ்ச் சொற்களைக் கூட பிறர் எடுத்து எறிந்திருப் பார்கள். ஆனால் ஒரேயிடத்தில் மிகவும் மாட்டிக்கொண்டு கிடக் கின்றது; அதுதான் எ∴கு. Steel என்பதற்கு எ∴கு என்று இன்று சொல் கிறோமே, அந்த இடத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறது அந்தச் சொல், எ∴காலை என்று ஓர் ஆலைக்குப் பெயர். அதனால் ஆய்தம் எப்படியோ, முன்னும் பின்னும் இருந்து,

குறியதன் முன்னர், ஆய்தப் புள்ளி,
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே—என்று

தொல்காப்பியம் சொன்ன இலக்கணப்படி, எ∴கு என்னும் ஒரு சொல்லில், இது தன்னைக் காத்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஆய்தம் இந்தப் ப∴றுளி என்ற ஆற்றில் இருக்கிறது. அ∴றிணை என்ற சொல்லில் இருக்கிறது. ப∴றொடைவெண்பா என்ற அந்தச் சொல்லிலும் இருக்கிறது. இதுபோல் புணர்ச்சியுடைய சொற்க ளெல்லாம் இந்த நாட்டிற்குரிய சொற்கள் என்று நாம் மொழிநூல் முறைப்படி தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி அந்த ஆற்றுக்கு என்ன பெயர் இருந்ததாம், ப∴றுளி என்ற பெயர் இருந்ததாம்.

ப∴றுளி என்ற ஓர் ஆறு இருந்தது. குமரிக்கோடு என்ற ஒரு மலையிருந்தது. இமையமலை போல் – அந்த அளவுக்குப் பெரிய மலையாக அ∴து இருந்தது. உரையெல்லாம் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. இளங்கோ சொன்ன கருத்துப்படி பார்த் தால், பாண்டியன் இழந்தது என்ன என்றால், ஒரு பெரிய ஆறு. ப∴றுளி என்ற அவ்வாறு வடக்கே இருந்தது. குமரி என்ற ஒருமலை தெற்கே இருந்தது. அந்த மலையில் குமரி என்ற ஓர் ஆறு ஓடியது. அந்த இரண்டு ஆறுகளும் போயின; ஒரு பெரிய மலையும் போனது.

அந்த ஆறு எப்படி? பெரிய ஆறு? அந்த மலை பெரிய மலையா? என்று நமக்கு எப்படித் தெரிகிறது. இழந்ததற்கு ஈடாக, வடதிசைக் கங்கையும் இமையமும் கொண்டு — அ∴தாவது வடதிசையின்கண்

இருந்த கங்கையையும் இமையமலையையும் வென்ருன் என்பதிலிருந்து இழந்த ஆற்றின் பெருமையும், இழந்த மலையினுடைய நீளமும் அகலமும் நமக்குத் தெரிய வருகின்றது. பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கம் என்ருர். பன்மலை யடுக்கத்து — அதனுல்தான் தாங்கவில்லை போலிருக்கின்றது அந்த நிலம். பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் — என்ன? அந்த அன்பைப் பார்த்தீர்களா? கொடுங்கடல் என்று சொல்லுகிருர். இஃதன்ருே அன்புக்கு அறிகுறி! கடல்கொள்ள என்று மட்டும் சொல்லவில்லை — இளங்கோவுக்கு இருக்கிற துடிப்பைப் பாருங்கள். நமக்கா? 'போனுல் போய்விட்டுப் போகிறதே! நாம் வேறு தேசத்திற்குப் போகலாமே'' என்று நினைப்போம். அதைச் சொல்லுகின்ற இளங்கோவுக்கு இருக்கிற பற்று, அந்தக் கடலைச் சொல்லுகின்ற ஒரு சிறு அடையில் தெரிகிறது. பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கடல் கொண்டதுதான்; இவருடைய நெஞ்சக் குமுறலைப் பாருங்கள், கடலா அது? குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள என்கிருர். அதற்காகப் பாண்டியன், போயிற்றே எனச் சோர்ந்து இருந்தானு? 'வடதிசைக் கங்கையும் இமையமும் கொண்டு' வடநாட்டு மன்னவனுக இருக்க விரும்பவில்லையாம், 'தென்திசை யாண்ட தென்னவன்' என்று சொல்லுகிருர். சிலபேர் வடநாட்டுப் பக்கம் போனவுடன், தம் உடை, நடை, பெயர் முதலியவற்றை யெல்லாம் கூட மாற்றிக்கொண்டு வந்து விடுகின்றனர் பாருங்கள்! அவ்வாறில்லையாம். தென்னவன் என்று குறிப்பிடுகிருர் இளங்கோவுக்கு எவ்வளவு பற்று இருக்கிறது! பாவியம் பாடினுல் போதுமா? ஆராய்ச்சி செய்தால் போதுமா? பற்று இருக்க வேண்டாமா? குழந்தையை அடிக்கிருேம்-பற்ருேடு அடிக்கிருேம்: அப்பொழுது அதற்கொன்றும் பேச்சில்லை பாருங்கள். தோழர் இருவரும் அடித்துச் சண்டை போட்டுக் கொள்வதுபோல் சில நேரங்களில் நாம் பார்க்கிருேம். நாம் நெருங்கிக் கிட்டே போனவுடன், நம்மைப் பார்த்து இருவரும் சிரிப்பார்கள். நாம் அடித்துக் கொண்டார்கள் போல்தான் நினைத்தோம். அவனை இவன் விரட்டுவான்; இவன் அவனை விரட்டுவான். நாம் கேட்டவுடன் நாங்கள் சும்மா, விளையாட்டுக்குச் சண்டை பிடித்தோம் என்பார்கள். அன்பின்மேல் வருகின்ற அடி அது. ஆராய்ச்சியாக இருந்தாலும் பாவியமாக இருந்தாலும் மொழியின் மேல்-இனத்தின்மேல் ஒரு பற்று வேண்டும். எதற்காக இதை மிகுதியாக வற்புறுத்துகிறேன் எனில், ஆராய்ச்சிக்கு அன்பு வேண்டாம் என்று ஒரு தவருன கொள்கையிருக்கிறது. அன்பற்ற ஆராய்ச்சி நல்முடிவைத்தாராது.

இனி, இன்றைக்குத் தமிழில் இருக்கின்ற முதல் பாட்டு பனம்பாரனுர் எழுதிய பாட்டு. அந்தப் பாட்டின் முதல்வரி எது? இன்று உயிரோடு இருக்கின்ற தமிழ் இலக்கியத்தில் உள்ள முதல் வரி எது வென்ருல், ஒரு தமிழனுக்குச் சொல்லத் தெரியவேண்டுமன்ருே?

வடவேங்கடம் தென்குமரி

–இந்த வரிதான். இதைச் சொன்னவுடன் இந்தவரியிலுள்ள முதல் உடைமை நம்மைவிட்டுப் போயிற்று என்பார்கள். நான் சொல்

கின்றேன் அவர் சொன்ன இரண்டு உடைமைகளும் போயின என்று. தொல்காப்பியப் பாயிரத்துச் சொல்லப்பெற்ற இவ்வரியில் உள்ள இரண்டும் போயிற்றே! முதல் தொடர் என்ன சொல்கிறுர் பாருங்கள். 'வடவேங்கடம் தென்குமரி' இதை எதற்காகச் சொல்கின்றேன். சொல்லும்பொழுது ஒரு பற்று வேண்டும். 'வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்றன்ரே சொல்லு கின்ருர். தமிழ் கூறும் உலகம் என்று சொன்ஞல் போதாதா. இவ் வுலகத்தை! பனம்பாரனுர் எழுதிய பதினைந்து வரிக்குள்ளே அவருடைய அன்பு தெரிகின்றது. 'தமிழ் கூறும் உலகம்' என்று சொல்லாமல் தமிழ் கூறும் நல்லுலகம் என்று கூறினுர். தமிழ் இயற்கை சிவணிய நிலம் என்று சொன்ஞல் பற்ருதா? செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்.

இந்த நான்கு வரிகள்—சிலப்பதிகாரவரிகள் இருக்கின்றனவே, இவற்றிலிருந்து அழிந்துபோன பாண்டியநாடு எவ்வளவு பெரிது என்று நமக்குத் தெரிய வருகிறது. சிறிய நாடு இல்லை; இப்பொழுது இருக்கிறதைப் போலக் குறுகிய நாடில்லை. மிகப்பெரிய நாடு அது. அந்த இழந்த பகுதி என்ன என்பதை அந்த வரிகள் சொல்லுகின்றன. இவ்வரிகளை ஆங்கிலேயர் யாரும் எடுத்து மேற்கொண்டதில்லை. எடுத்து மேற்கொண்ட நம்மவர்களும், அது, என்ன? கட்டுக்கதை யாயிற்றே அது? என்கிருர்கள். இழந்ததும் கட்டுக்கதை! இமையங் கொண்டதும் கட்டுக்கதை என்ருர்கள். சிலபேர் சொல்லுகிருர்கள், தமிழன் இமையத்தைப் பார்த்ததே இல்லை என்று. அதையும் கேள்விப் பட்டிருக்கிறேன். அவன் இமையத்தைப் பார்க்காமலேயே பாடி விட்டாஞம். அவனுக்கு வடதிசையைப் பற்றியே தெரியாதாம். 'கழக நூல்களில் வடதிசையைப் பற்றிச் சொல்லியிருக்கின்ற அவ்வளவும் புளுகு; தவறு' என்று இப்படிச் சொல்கிருர்கள்.

பாவாணர் சொல்வது பொய்யில்லை. அப்படி ஒரு கடிப்பு மிகுதியாக வருகின்றது இப்பொழுது. கழக இலக்கியங்களில் சொல்லப் பெறுகின்ற பொய்யா நா, சிறுசெந் நா என்றும், இடைக் காலத்துக் கம்பரால் 'சான்ரேர் கவியெனக் கிடந்த கோதாவரி என்றும், கழகப் புலவர் பாரட்டப் பெற்றவர்கள். அவர்கள் சொல்லிய பல கருத்துகள் கட்டுக் கதைகள், இமையத் திசை திரும்பியதில்லை; வடநாடு சென்றதில்லை; இவர்கள்(தமிழர்கள்)எதுவுமே வென்றதில்லை, என்று சொல்லக் கூடிய கட்டுரைகள், இக்கால் யார் யாருக்கோ சிலர் எழுதித் தெரிவிப்பதனுல் மிகுதியாக வந்து கொண்டிருக்கின்றன. இவற்றையும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மீண்டும் சொல்கின்றேன் இளங்கோவடிகள் நாம் நினைக்கின்ற இந்தக் கருத்தரங்கிற்குத் தக்கபடி ஏற்கனவே எடுத்துச் சொல்லி யிருக்கிருர். பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் என்று பெயர்களுடன் சொல்கிருர். சும்மா, கட்டுக் கதை யில்லை. ஏதோ ஓர் ஆறு; ஏதோ ஒரு மலை; எவனுக்கோ உரியது; என்று அப்படிச் சொல்லவில்லை. பெயர்களையும் அளவுகளையும் குறிப்

பிடுகிறார்: இஃதொரு முகாமையான கருத்து. தமிழனுக்குத் தமிழ் இலக்கியத்திலேதானே சான்று பார்க்க முடியும். வேறு எங்குச்சான்று பார்க்க முடியும்? இன்றைக்குச் சிலேற்றர் என்ன கூறுகிறார்; விசிலி என்ன கூறுகிறார்; மக்டனால் என்ன கூறுகிறார் என்று நாம் ஏன் மிகுதியும் பார்த்துக் கொண்டு கிடக்க வேண்டும்? நமக்குப் பண்டை யிலக்கியங்கள் மிகுதியும் இருக்கின்றன. அவை இவற்றைப் பற்றிப் பல கருத்துகள் சொல்லுகின்றன. அவற்றிற்கு முதற்கண் மதிப்புக் கொடுக்க வேண்டும். நேற்றுத் தோன்றிய கல்வெட்டுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். அண்மையில் தோன்றிய சில பொருள்களுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். அப்படியே அழியாமல் இருக்கின்ற இலக்கியத்திற்கு மதிப்பே கொடுப்பதில்லை. இளங்கோ என்றால் எளியவரா? நம்மைப்போல ஆளா அவர்? அவர் எழுதிய இலக் கியத்துக்கு மதிப்பளிக்காத ஒரு சிறிய நாடாகவன்றோ இது போய் விடுகின்றது. க ழ க இலக்கியங்களெல்லாம் வரலாற்றுக் குறிப்புகள். வரலாற்றுக் குறிப்பு இல்லாத ஒரு பாடலே கழக இலக்கியத்தில் இருக்க முடியாது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

கல்வெட்டு, (பிராமி கல்வெட்டு) என்றால் மிகுந்த சிறப்பு. ஒரு மட்பாண்டம் என்றால் சிறப்புக் கொடுக்கிறார்கள். ஒருவனின் தலை மண்டையோடு என்றால் சிறப்புக் கொடுக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் சிறப்புக் கொடுத்துக் கொண்டிருப்பவர்கள், அப்படியே பூசணிக்காய் போல் (பெரிய சான்றாகக்)கண்ணுக்குத் தெரிந்து கொண்டிருக்கின்ற இலக்கியத் துக்குப் போதுமான மதிப்புக் கொள்ளவில்லை யென்றால்— அஃது அன்பின் குற்றமா? அல்லது அறிவின் குற்றமா? முன்னமே முடிவு பண்ணிக்கொண்டு இப்படித்தான் சொல்ல வேண்டும் என்று நினைக்கின்ற—ஒருவகை நினைவின் குற்றமா? எதையும் கட்டுக்கதை என்றுஎளிதாகச் சொல்லிவிடலாம். அப்படித்தான் சொல்லுவார்கள். யாராவது இந்தத் தொடரைக் காட்டினால் அதைக் கட்டுக்கதை என்பார்களானால் நாமும் ஏற்றுக் கொள்ள முடியாது. இனி, இதற்கு மேலும் ஒரு தொடர் இருக்கிறது. இந்தக் கருத்தையெல்லாம் நமக்கு முன் இருந்த இடைக்கால மக்கள் ஆராயாமல் இல்லை, என்பதற்கு இன்னொன்று கூறி நான் முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொல்காப்பியர் காலம் சிலர் சொல்லுவார்கள் கி. பி. 4-ஆம் நூற்றாண்டு என்று; அஃதாவது இன்றைக்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே என்று. அதற்குக் குறைந்து எவரும் மதிப் பிடுவதில்லை. அவர்கள் விருப்பப்படியே ஆயிரத்து ஐந்நூறு ஆண்டு களுக்கு முன்னே என்று வைத்துக் கொண்டாலும், அந்தக் காலத்தில் கூட இப்பொழுதுள்ள எந்த மொழியும் — ஆங்கிலம் போன்ற பல மொழிகளும் தோன்றியிருக்கவில்லையே. எனவே அந்தக் காலமே அவர்காலம் என்று சொன்னால் கூட அப்படி யொன்றும் குறைந்த காலம் இல்லை. இருந்தாலும் "தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு சூழ்கலைவாணர்களும்—பாரதியார் அன்புடையவர்; அறிவுடையவர்; அவர் என்ன சொல்கிறார்,

"தோன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்
என்று பிறந்தவள் என்றுணராத"

அவ்வளவு பெரியவள்-முதியவள்-எங்கள் தாய்" என்று சொல்கிறார். அவர் சொல்வதை எடுத்துக் கொள்வதா? நீங்கள் சொல்வதை எடுத்துக் கொள்வதா? பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல், இனிதாவ தெங்கும் காணோம்" —என்று சொல்லக் கூடிய அளவிலே நல்ல புலவர்; பல மொழிகளை அறிந்திருந்தவர்; பல நூல்களைக் கற்றறிந்திருந்தவர். தமிழ்மேல் அன்புடையவர். இந்திய நாட்டின் மேல் மிகுந்த பற்றுடையவர். அவர் தமிழைப் பற்றிச் சொல்லுங்கால் என்ன சொல்கிறார் என்று அறிந்து கொள்வது நம் வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது. தமிழ்ப் பற்று வரவேண்டும் என்றால், அந்தப் பாரதியார் போல் தமிழ்ப் பற்று வரவேண்டும் என்பது என்னுடைய கருத்து. பாரியைப் போலக் கொடுக்க வேண்டும் என்று சொல்வதைப் போல, பாரதியாரைப்போன்ற தமிழ்ப்பற்று வேண்டும். இதைத்தான் நான் சுருக்கமாகச் சொல்லுவேன். அவர் தமிழ்மேல் கொண்டிருந்த பற்று மாசற்ற பற்று. அவருடைய மாசற்ற பற்றுத்தான் இவ்வளவில் தமிழ் பரவியதற்குக் காரணியம் என்று கூடச் சொல்லலாம். அவரைப் பிராமணர் என்று எல்லாரும் நினைக்கிறார்கள். அவர் தமிழ்ப் பற்று நிறைந்தவர். ஆனாலும் அவர் பிராமணர் என்று ஒருவர் சொன்னால் அது கரிசு (பாவம்) என்று சொல்லலாம்.

எனவே, தொல்காப்பியத்தைச் சரியாகச் சொன்னால் —சிலபேர் சொல்லுவார்கள், கிட்டத்தட்ட ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்று. எனக்கென்னவோ இன்னும் கொஞ்சம் கூடுதலாக இருக்கும் என்றுதான் தெரிகிறது. ஏழாயிரம், எண்ணாயிரம், பதினாயிரம் ஆண்டு கூட இருக்கும்போல் தெரிகிறது. இறையனாரகப் பொருள் முறைப்படி நம்முடைய தமிழ் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. முற்பட்ட தென்றால் வளர்ந்திருந்தது; கனிபறிக்கக் கூடிய முறையில் இருந்தது. நூல் எழுதக்கூடிய இலக்கணம் நிறைந்திருந்தது. அப்பொழுது அது தோன்றி முப்பதினாயிரம் நாற்பதினாயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம். நான் இதை ஒன்றும் கற்பனையாகச் சொல்வதாக, நினைக்கவில்லை. இஃது உங்களுக்குக் கற்பனையாகத்தோன்றினாலும் எனக்குக் கற்பனை யாகப் படவில்லை. மேலும் இப்பொழுதிருப்பதைப் போன்று விரைந்த வளர்ச்சி அப்பொழுது இருந்திருக்க முடியாது.இக்கால் நாள் தோறும் இலக்கக் கணக்கான செய்தித்தாள்கள், இதழ்கள் வெளியாகின்றன. நினைத்தால் ஆயிரக்கணக்கான சொற்களை நாள்தோறும் உருவாக்கிக் கொள்ள முடியும். அக்காலத்து மக்களோ நம்மைப்போல் மிகுதியாகப் பேசியிருக்க முடியாது. அவர்கள் இயற்கையொடு பழகியவர்கள். ஒரு நாளைக்கு ஒருவனைக் கூடப் பார்த்துப் பேசியிருக்க மாட்டார்கள். அக்காலத்தில் ஒருவனுக்குப் பக்கத்திலே இன்னொருவன் கூட தென் பட்டிருக்க மாட்டான். மரங்கள், செடி கொடிகள், மாடு ஆடுகள் இப் படித்தான் தென்பட்டிருக்க முடியும். ஆகவே அந்தக் காலத்தில் தமிழ்

இக்காலத்துள்ளது போல அவ்வளவு விரைந்து வளர்ந்திருக்க முடியாது. எனவே தமிழ்மொழியின் தொன்மை முப்பதினாயிரம் நாற்பதினாயிரம் ஆண்டுகள் என்று சொன்னாலும், எனக்கு அது கற்பனையாகத் தெரியவில்லை. ஆனாலும் அதனுடைய வளர்ச்சி இருபதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே ஏற்பட்டு விட்டது; முதற்கழகக் காலத்திலேயே பெரிய இலக்கண நூல்கள் ஏற்பட்டிருந்தன. ஆதலால் இரண்டாம் கழகத்தில் தோன்றிய தொல்காப்பியம், அது கி. மு. ஆறாயிரம் ஏழாயிரம் ஆண்டுகள் கூட இருக்கலாம் என்பது போகப்போகத் தெரியவரும். ஆனால் அந்தக் கால வரையரையெல்லாம் இப்பொழுது சொல்லிக்கொண்டிருப்பதற்கு நேரமில்லை. என்னுடைய முடிவை மட்டும் சொல்லுகிறேன். அது கி. மு. ஆறாயிரம் அல்லது ஏழாயிரம் ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது ஆகும்.

அப்பொழுது, இந்தத் தமிழ்நாடு இப்பொழுது இருக்கிறதுபோல் இருந்ததில்லை. சிலப்பதிகாரம் சொன்னது போல் இல்லை; சிலப்பதிகாரத்தில் குமரிக் கோட்டையும் ப∴றுளி யாற்றையும் சொன்னார் பாருங்கள், அவை யெல்லாம் தொல்காப்பியர் காலத்தில் இருந்தன. தொல்காப்பியர் காலத்தில் நாடு விரிந்திருந்தது;குமரியாறு இருந்தது; குமரிக்கோடு இருந்தது; ப∴றுளியாறெல்லாம் இருந்தது. தொல்காப்பியர் காலத்தில் அவை அழியவில்லை. அதற்கு முன்னே ஒரு கடல்கோள் சொல்லுகிறார்கள் என்றாலும், அவர்காலத்தில் தென்பகுதி மிகவும் விரிந்திருந்தது என்பதனை இளங்கோ கண்ட உரையாசிரியர் முதற்கண் எழுதுகிறார். இதையும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது நாம் நாட்டுக்கு எல்லை சொல்வதாக இருந்தால், நம் தமிழ் நாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள், – முப்புறமும் கடல்; இடையில் நாம் இருக்கிறோம் – என்று சொல்லுவோம் இன்றொருவர் இலக்கணம் பாடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். வடவேங்கடம் என்று சொன்னதுபோல், திருத்தணியை வடதணிகை என்று சொல்லுவார். எனவே வடதணிகை நமக்கு எல்லை. ஆனால் தொல்காப்பியர் காலத்தில் நமக்கு என்ன எல்லை? நிரம்ப, முகாமையான சான்று இது: நம்முடைய நிலத்தை உறுதிப்படுத்துவதற்கு இ∴தெல்லாம் அசைக்க முடியாத சான்று. வரி இரண்டுதான்; அல்லது ஒன்றுதான். ஒரே வரியில் 'இலக்க உருபாய்' என்று எழுதக் கூடாதா? ஒரே வரியில் 'கோடி' என்று எழுதக்கூடாதா? தமிழில் கூட ஆயிரத்திற்கு ஒன்று போட்டு மூன்று சுழிகளைப் போடத்தேவையில்லை; ஒரே எழுத்து தமிழில் உண்டு. முன்பு ஆயிரத்துக்கு ஒரே தாள்காசு இருந்தது போல் — இனிமேல் பத்து உருபாவுக்குக் கூட ஒரே தாளாக இருக்குமா என்பது கூட ஐயந்தான் — ஒரே எழுத்து ஆயிரத்துக்கு உண்டு. எனவே ஒருவரி, ஒருசொல் என்று நினைக்கக் கூடாது. "வடவேங்கடம் தென்குமரி" —என்பது ஒருவரிதான். இப்பொழுது நாம் ஆற்றோரத்தில் உள்ள ஒரு தோட்டத்திற்கு எல்லைக்கல் நடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். மூன்றுபுறமும் நடுவோம்; இன்னொருபுறம் எங்கே நடுவது? ஆற்றிலேயா நடுவோம்? அப்படியே, 'வடவேங்கடம்

தென்குமரி' என்றுஏன் கூறினர் என்று பார்க்கவேண்டும். மூன்று பக்கமும் கடலாக விருந்தால், வடவேங்கடம் என்று சொன்னால் போதுமே! இரண்டு எல்லைகள்தாம் சொல்லப் பெற்றன. கிழக்கும் மேற்கும் ஏன் சொல்லப் பெறவில்லை? கிழக்கும் மேற்கும் கடல் என்பதனால் விட்டு விட்டார். வடக்கே வேங்கடம் என்றார்; தெரிகிறது தெற்கே குமரி என்றார். அப்படி தெற்கே குமரி என்றால், என்ன கருத்து. அதற்கப்புறம் வேறு நாடு இருந்தது என்று தெரிகிறது. இல்லாவிட்டால் தெற்கு எல்லை கூறுவதற்கு என்ன தேவை வந்தது? இப்பொழுது இருப்பதுபோல் தெற்கே கடலாக இருந்தால், எல்லை கூறத் தேவையில்லை. தென்குமரி என்று சொன்னவுடனே, இளம்பூரணர் எழுதுகிறார். கி. பி. பதினோராம் நூற்றாண்டில் இருந்தவர். ('அவர்களெல்லாரும் பெரிய அறிஞர்கள் இல்லை, அவர்கள் எல்லாரும் ஆராய்ச்சியில் அவ்வளவு வல்லவர்கள் இல்லை, என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் நமக்கிருக்கும் எண்ணத்தைச் சொல்ல முடியாது. பிற்காலத்தில் நம்மைப் பற்றி என்னென்ன எழுதப் போகிறானோ? நமக்கு அது தெரியாது. நாம் நினைக்கிறோம்; நாமெல்லாம் Modern; நாம் மிகவும் உயர்ந்தவர்கள்; இந்தக் காலத்தில் உள்ளவர்கள் பகுத்தறிவுள்ளவர்கள் என்று நினைக்கிறோம். ஆனால் ஒருவன் சொன்னதை நம்மில் ஒருவன் கேட்க மாட்டான். அதுதான் சொன்னேன். எதிர்காலத்தில் என்ன எழுதப் போகிறானோ? நாமெல்லாம் 'ஆணவம்' பிடித்தவர்கள் என்று எழுதப் போகிறான். ஒன்றும் அறியாதவர்கள், அழிவுக்குப் பிறந்தவர்கள், அவ்வளவு பேரும் அரக்கர்கள் என்று நம்மை எழுதப் போகிறான். அஃதிருக்கட்டும்.)அந்த வகையில் அந்த கி.பி.பதினோராம் நூற்றாண்டில் அவர் (இளம் பூரணர்) என்ன எழுதினார்? "தென்குமரி என்றார், பிற நாடும் இருந்தமையின்" என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதுகிறார் பாருங்கள். வடக்கும் வேறு நாடு இருந்தது; தெற்கும் வேறு நாடு இருந்தது; ஆதலால் பிற நாடும் உண்மையின் தென்குமரி என்றார்" என்று இளம்பூரணர் எழுதுகிறார். அவர் அதோடு மட்டும் விடவில்லை. குமரியாறு என்று எழுதினார். அதைச் சிறப்பாக நினைத்துப் பாருங்கள் வடவேங்கடம் என்றால் வேங்கடமலை; தென்குமரி என்றால் குமரியாறு என்று எழுதினார். சிலபேர் குமரிக்கடல் என்று எழுதினார்கள்; அவர் குமரியாறு என்று எழுதினார். இனி, அது கூடப் பிழை என்பது என்னுடைய கருத்து. எப்பொழுது வடக்கே ஓர் எல்லையாக மலையைக் கூறினாரோ, தென்குமரி என்பதும் மலையாகத்தான் இருக்க வேண்டும், என்பது என்னுடைய கருத்து. ஆறு போய் ஒரு நாட்டுக்கு எல்லையாக இருக்க முடியாது. வடவேங்கடம் தென்குமரி என்ற அந்த இனவொப்புமையினால், குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள என்று சொன்னதற்கொப்ப, வடவேங்கடம் ஒரு மலையாக இருந்தது போல, குமரி என்று சொல்லப்பெற்றதும் குமரிக்கோடு என்று நான் கருதுகின்றேன். இப்படிப் பதினோராம் நூற்றாண்டுக் கருத்து. இதற்குமேல் எவ்வளவு வளர்ச்சி- உரையாசிரியர்கள் வளர்ச்சி— ஏற்பட்டுள்ளது என்று கருதுகின்றீர்கள். இவருக்குப் பின் இரண்டு நூற்றாண்டுகள்

(பக்கம் 52ஐப் பார்க்க)

இக்காலத் தமிழ் மாந்தர்!

—பெருஞ்சித்திரன்.

(வ.ஆ. வேலூர், ஊரீசுக் கல்லூரித் திரு.வி.க, தமிழ் மன்றம் '73 பிப்ரவரி 14-இல் நடத்திய முத்தமிழ்க் கலைவிழாப் பாட்டரங்கத்தில் தலைமையேற்றுப் பாடியது.)

முன்னுரை:

ஓங்கு புகழ்கொண்ட ஊரீசுக் கல்லூரி
தாங்கு முதல்வரீர்! தண்டமிழ்நாட் டுக்கல்வி
பேணிவரும் பேராசிரியப் பெருமாண்பீர்!
தூணிகர்த்த வாருகத் தோளோடும் நெஞ்சோடும்
செந்தமிழ்க்குக் காப்பாய்ச் சிறப்புக்குக் கொள்கலனாய்,
எந்தமிழ் நாட்டின் எதிர்கால நற்குடியாய்,
ஆளும் அமைச்சராய் ஆன்ற அதிகாரிகளாய்
நாளும் வளர்ந்துவரும் நல்விளைவின் மாணவரீர்!
எல்லார்க்கும் என்றன் இனிய தமிழ் வணக்கம்!

சொல்லார்க்கும், பாட்டில் சுவையார்க்கும், அச்சுவையைக்
கள்ளாரும் வண்டாய்க் களிப்பாரும் உள்ளமுடன்
வெள்ளமென இங்குவந்து வீற்றிருப்பீர்; போற்றுகின்றேன்!

இக்காலை பாட்டரங்கம் என்றாலே மக்களிடை
தக்க விறுவிறுப்பு! தாவிவரும் சொற்களிலே,
சொல்லின் பொருள்களிலே, சொல்லும் வகையினிலே,
சொல்லுக்குச் சொல்லிடையில் சூழும் நகைச்சுவையில்
உள்ளம் பறிகொடுத்தே, உள்ளுணர்வு தாம்பெருகக்
கள்ளமின்றி, வாழ்க்கைக் கனமின்றிச், சின்னேரம்
இன்பத்தில் தோய்ந்திடவே எண்ணி வருகின்றார்!
துன்பத்தை நீக்கும் துடிப்பிருக்கும் எல்லார்க்கும்!

அந்தத் துடிப்பறிந்தே ஆர்வமொடு பாவலரும்
எந்தச்சொல் போட்டால் எதிரிலுள்ள மக்களெல்லாம்
பல்லெல்லாம் நன்றாய்ப் பளிச்சென்று காட்டி, யுடன்
'கொல்'லென்று தாம்சிரிப்பார்; கூடிக்கை தட்டிடுவார்–
என்றே பகலிரவாய் எண்ணியெண்ணி, ஆய்ந்தாய்ந்து
நன்றாகச் சொல்லை நகைச்சுவையில் தோய்த்தெடுத்து
வந்திங்குப் பாடும் வழக்கத்தை நானறிவேன்!
இந்தவழக் கத்தை எவரும் எதிர்க்கவில்லை!

நன்றாய்ச் சிரிப்பதற்கே நாம் பிறந்தோம்; நல்லபடி
என்றும் சிரித்தே இருப்போம்; மகிழ்ந்திருப்போம்!

ஆனாலும் சொல்லுகின்றேன்; அன்புடைய மாணவரீர்!
தேனும் தினையும் தெவிட்டுகின்ற செந்தமிழை—
செந்தமிழ நாட்டைச்—சிறிதே நினையுங்கள்!
எந்தமிழ மாந்தர் இருக்கும் நிலையறிந்தால்
இக்கால் நகைத்திருக்க ஏது இடம்? கல்வியினால்
முக்காலும் நல்லபயன் மூண்டிருக்க வேண்டாவா?

கொஞ்சம் உமைமறந்து,என் கூடவரு வீர்களெனின்,
பஞ்சம், பசித்துயரம், பாடுபட்டும் உண்ணாமல்
உள்ளொடுங்கிப் போன உலர்வயிறு, கூன்முதுகு,
முள்ளெழுந்து நின்றதுபோல் மொய்த்த தலைமயிர்கள்
சப்பைத்தோள், வெள்ளெலும்பு, சாறுபிழிந் திட்டவுடல்,
குப்பைமேல் வாழ்க்கை, குழந்தையெனும் கொத்தவரைப்
பிஞ்சுகளைத் தாம்சுமந்த பீற்றைச் சடலங்கள்,
குஞ்சு குளுவான்கள், குந்தவழி யில்லாமல்,
சாலையோ ரத்தும், சகதியிலும், பொட்டலிலும்,
ஆலையிலே நுண்பஞ் சலைவதுபோல் தாம்அலைந்து,
வாழாமல் வாழ்ந்திருக்கும் வாழ்க்கையினைக் காட்டிடுவேன்!
சூழாமல் சூழ்ந்திருக்கும் கொல்வறுமை என்சொல்வேன்?

உண்ணுவதோ கூழ்தான்! உடுத்துவதோ கந்தைதான்!
எண்ணுவதே இல்லை; எதிர்ப்படுவ தெண்ணுவது!
தின்னுவதில் ஆவலில்லை; தென்படுவ தின்பதுதான்!
என்னயிது புன்வாழ்க்கை என்னும் சலிப்பில்லை!

வாழ்ந்திருக்க ஆசையில்லை; வாய்த்திருக்கப் பாசமில்லை!
சூழ்ந்திருக்கும் இவ்வுலகம் சுற்றுவதா? நிற்பதுவா?
தட்டையா? இல்லை, தனியுருண்டை யா வென்னும்
நெட்டை நினைவில்லை; ஏதோ நிலத்திடையில்
வந்து பிறந்து விட்டார்; வாழ்கின்றார்! தீம்பசிக்கு
வெந்ததுவோ? வேகா ததுவோ? விழுங்கி விட்டால்
நல்ல நிழலோ? நடுத்தெருவோ? தூக்கந்தான்!
கல்லொன்றோ, கையோ, தலைக்கு; கருத்திருந்தால்!
இன்னவர்கள் எங்கோ இருப்பாரென் றெண்ணாதீர்!
அன்னவரும் நம்மிடைதான் அன்றாடம் வாழ்கின்றார்!

இத்தகைய காட்சிகண்டே, இப்புறமாய் நாம் நகர்ந்தால்
மெத்தைகள், மாடிகள், மேன்மாட மாளிகைகள்,
வண்ணங்கள் தோய்ந்த வழவழப்பு வன்சுவர்கள்,
கண்ணாடிச் சாளரங்கள், காற்றுலவும் மாடங்கள்,
மின்னோடுங் கூடம், மினுமினுப்பு மென்தரைகள்,
முன்னே இருக்கைகள், முசைப்பொன் பூச்சுகள்,
கட்டிலிலே மெத்தை, கதவு பலகணிக்குப்
பட்டாலே தொங்குதிரை, பல்வண்ணப் பேழைகள்,
பற்பலவாய் உள்ளறைகள், பாங்கான காப்பறைகள்,
கற்பதித்த தட்டுகள், காட்சிக் கவின் பொருள்கள்,
உள்ளே குளியலறை, ஒன்றிரண்டு நீந்துகுளம்!
கள்ளின் இளமயக்கம், காற்றோ கதகதப்பு,
முல்லைக் கொடிபோன்ற மின்னிழையார் முசுகின்ற
மல்லிகைக் காடு, மணக்கின்ற மென்தென்றல்,
சொற்புனைந்து வாழுகின்ற சோர்வில்லாப் பாவலர்கள்
கற்பனையில் காட்டும் கனவுலகக் காட்சியெல்லாம்
மெய்யாய் விரிந்திருக்கும் மேம்பட்ட கோலங்கள்!
பொய்யன்றே இங்குப் புகன்றிருத்தல் கொஞ்சந்தான்!

அப்படிப் பட்டதோர் அண்ணாந்த வாழ்க்கையிலே
எப்படிப் பட்டோர் இருப்பாரென் றெண்ணுங்கள்!
அன்னவர்கள் வாழ்முறைகள்! அன்றாட உண்டிகள்!
மின்னிழைகள் ஓடுகின்ற மேலுடைகள்! கண்கவரும்
பொன்னிழைகள் என்ன! பொலிவுநிலை என்னென்ன!
இன்னிசைகள்! ஆடல்கள்! என்றும் ஒளிமழைக்குள்
வாழ்ந்திருக்கும் வாழ்க்கையினை வண்ணிக்க நாமறியோம்!
சூழ்ந்திருக்கும் வெற்றுநிலைச் சூழலிலே வாழ்கின்றோம்!
இப்படியோர் வாழ்க்கை!
இதைவிட்டு நாம்நகர்ந்தால்,
முப்படியாய்த் தம்முடலை முப்பொழுதும் வாட்டுகின்ற
அன்புத் தொழிலாளர் அன்றாட வாழ்க்கையினைத்
துன்பமுறக் காண்போம்! துயரத்திற் கென்னகுறை?

என்பை முறுக்கி, எழிலுடலைத் தாம்உருக்கி,
மன்பதை தன்னலத்தில் முற்றும் மனந்தோய்ந்து,
தம்பெண்டு பிள்ளைத் தனிநலத்தைக் காணாமல்,
கம்புண்டும், மொத்தைக் களியுண்டும், ஆண்டுக்கோர்
நல்லுடையைக் கண்டும், நலமின்றி வாழ்பவர்கள்!

கல்லுடைப்போர், மண்ணெடுப்போர், காட்டு மரமறுப்போர்,
பாதை அமைப்போர், பயிர்த்தொழில்கள் செய்திடுவோர்,
காதை அடைக்கும் கடும்இரைச்சல் போடுகின்ற
ஆலையிலே பஞ்செடுப்போர், நெய்வோர், அழலிரும்புச்
சாலையிலே தம்முடலைச் சாறாய்ப் பிழிந்திடுவோர்,
ஊர்திகளை ஓட்டிடுவோர், ஓடாக வெய்யிலிலே
சேர்துகளும் தூசிதும்பும் சேர்ந்திடவே கைவண்டி
தள்ளல், இழுத்தல், தலை-முதுகில் தூக்கிவரல்,
அள்ளல், அடைத்தலெனும் ஆன்றபணி அத்தனைக்கும்
பொன்னுடலை ஆட்படுத்தும் புண்பட்ட நெஞ்சாளர்,
என்னபடி யாயுழைத்தும் ஏறாத வாழ்க்கையிலே,
சீறும் கடல்விளைவைச் சென்று கொணர்ந்துவந்தே
ஊறும் குருதிக்கே ஊட்டமென விற்றுவிடும்
மீன்பிடிக்கும் தோழர், மிகப்படிப்பார் கல்விக்குத்
தான்படிக்கா வாழ்க்கையினைத் தந்துதவும் அச்சாளர்,

—என்று பலவாறாய் இவ்வுலகம் வாழ்வதற்கே
அன்றாடம் தாம்சாகும் அருமைத் தொழிலாளர்!
அன்னவர்வாழ் கின்றநிலை! அங்கே எழுகின்ற
சின்ன தெருச்சண்டை! சிற்சிலகால் குத்துவெட்டு!
கம்புகத்தி மோதும்; கணக்கு மருத்துவர்க்கே!
வம்புவழக் காகும்; வழக்குரைஞர் பைநிறையும்!
இப்படியோர் வாழ்க்கை!

இதைவிட்டு நாம்நகர்ந்தால்
எப்படிப்பும் வாய்க்க இருக்கின்ற கல்வியகம்!
அங்கிருக்கும் ஒருலகம்! ஆசிரியர் மாணவர்க்குப்
பங்கிருக்கும் அவ்வுலகில்! பண்பும் மிளிர்ந்திருக்கும்!
என்றாலும் சிற்சிலகால் தொல்லை எழுந்துவிடும்!
நின்றாலும் தப்பாய், அமர்ந்தால் நெடுந்தப்பாய்
நேர்ந்துவிடும்! அக்கால் நிகழ்ந்துவிடும் போராட்டம்!
ஆர்ந்துவிடும் காவலர்க்கோ ஆக்கம் பலவிருக்கும்!
குண்டாந் தடிகள் குலைநடுங்கச் சூழ்ந்தாடும்!
மண்டைக்குள் மாணவர்கள் வைத்திருப்ப தென்னென்று
காவலர்கள் சிற்சிலபேர் காண உடைப்பார்கள்!
ஆவலாய் உள்ளிருந்து மூளைவெளி யானவுடன்
'ஓகோகோ' வென்றே உரக்கச் சிரிப்பார்கள்!
சாகாக் கணக்குவரும்! ஆட்சியினர் சான்றுவரும்!
மன்றம் நிறுவுவார்! மாணவரும் ஒப்பிடுவார்!

ஒன்றிரண்டு மூன்றென்றே ஓடிவிடும் நாட்களெல்லாம்!
எல்லாம் மறந்துவிடும்! என்றேனும் மீண்டொருவர்
கல்லால் அடிப்பார்; கலகம் எழுந்துவிடும்!
அப்போதும் அப்படியே ஆட்டத்தின் காட்சிவரும்!
எப்போதும் போல்,பின் இறுதித் திரையிறங்கும்!

இப்படியோர் நல்லுலகம்! இங்கிருக்கும் மாணவரை
அப்படிநான் சொல்லவில்லை! ஆனாலும் சொல்லுகின்றேன்!
சொல்லுக்குச் சொல்லவில்லை; உண்மைக்குச் சொல்லுகின்றேன்!
மல்லுக்கா இங்குவந்தோம்? மற்றெதற்கு வந்தோம்,நாம்?
வாழ்க்கைக்கிங் கேதான் வழியமைக்கப் பட்டிருக்கும்!
பாழ்க்கை விளைவிற்கும் இங்கேதான் போக்கமையும்!
நன்றாக எண்ணுங்கள்; நானுரைப்ப துங்களுக்கே!
ஒன்றும் கருத்தென்றால் – உண்மையென்றால் ஒப்புங்கள்!
கொள்ளத் தகுந்ததெனில் கொள்ளுங்கள்; குப்பையிலே
தள்ளத் தகுந்ததெனில் தள்ளுங்கள்; தாழ்வில்லை!
தோற்றம் முதலாத் தொடர்ந்திருக்கும் நல்லொழுக்கம்;
ஆற்றலுடல், அன்புமனம், அன்றாடம் கல்விநலம்,
போற்றற் குரிய–புகழ்தற்குத் தானுரிய–
ஏற்றஞ்சேர் வாழ்க்கைக்(கு) எழுதுமொரு முன்னுரையாய்-
மாணாக்கர் வாழ்க்கையொரு மாண்புலக வாழ்க்கையென்பேன்.
வீணாக்க வேண்டாவென் றன்னவரை வேண்டுகின்றேன்!

இக்கால மாணாக்கர் தோற்றத்தை என்னுரைப்பேன்?
முக்கால் முகத்தைவந்து மூடுகின்ற தொங்குமயிர்!
அந்த மயிர்ச்சுமைக்குக் கால்கள் அமைந்தன போல்
வந்திறங்கித் தாடைவரை வாய்ந்திருக்கும் கன்னமயிர்!
பல்வண்ணச் சட்டை! பருத்த தொடையிரண்டை
நல்வண்ண மாயெடுத்து நன்றாய்ப் புறங்காட்டும்
காற்சட்டை! போட்டுக் கழற்றஅரை நாளாகும்!
மேற்சட்டை பெண்களுடை போல மினுமினுக்கும்!
உள்ளக் கவர்ச்சிபோய் ஊனின் தசைக்கவர்ச்சி
எள்ளும் வகையாய் இருப்பதனைக் காண்கின்றோம்!

கற்கின்ற பொத்தகங்கள் தம்மிடையில் காசடிக்கச்
சொற்குன்று மாறுபல சோம்பல் எழுத்தாளர்
பாலியலைத் தூண்டிப் பணம்பறிக்கத் தாமெழுதும்

'காலிப்பயல்'–என்னும்*'கௌபாய்' வெளியீடு!
அம்மணத்துக் காட்சியிலே ஆர்வமிகக் காட்டிவரின்
செம்மனத்தில் நஞ்சு சிறிது சிறிதாகச்
சேர்ந்தே உடல்கெடுத்தும் உள்ளச் சிறப்பழித்தும்
ஆர்ந்தபே ராண்மை அடியோடு வீழ்த்தியும்
வாழ்வைக் கெடுக்கும் வகையறிய மாட்டாமல்
தாழ்வெய்தும் நல்லிளைஞர் தம்மை எவர்தடுப்பார்?

மாணவியர் போக்கினிலும் மாண்பவியப் பார்க்கின்றோம்.
தூணவர்தாம்! வாழ்க்கைத் துணையவர்தாம்! தாயவர்தாம்!
ஆனாலும் இக்கால் அவர்தோற்றம், போக்கு–எல்லாம்
ஏனோ தெரியவில்லை; ஏற்றமின்றிக் காண்கின்றோம்!
கற்கின்ற பெண்டிர் கவனமெல்லாம் இற்றைக்கு
விற்கின்ற மேலாடை, நாகரிக வீண்பொருள்கள்,
பூச்சுகள், சாயங்கள், பூணும் உடற்கவர்ச்சிப்
பேச்சு திரைப்படங்கள், தீமைதரும் பொத்தகங்கள்;
என்பவற்றில் தோய்ந்தே இருப்பதை நாம் பார்க்கின்றோம்!
தின்பவற்றைக் கூட அவர், தீர நினைப்பதில்லை!

நாகரிகம் என்பெயரால் நாமெல்லாம் தாழ்ந்துவிட்டோம்.
வாகாய் அதைப்பெறவும் உள்ளநலம் விற்றுவிட்டோம்.
கண்களை விற்றுக் கலைப்பொருளை வாங்குதல்போல்
பெண்மையை விற்றுவிட்டுப் பேய்மையினை வாங்கிவிட்டோம்.
ஆண்மையை விற்றே அடிமைநலம் வாங்கிவிட்டோம்.
மாண்புதனை விற்று மலத்தைவிலை பேசிவிட்டோம்!

கல்வி உயர்வில்லை; காசுவரும் எவ்வழியும்
நல்வழிதான் என்கின்ற நப்பாசை நம்மவர்க்கு!
இப்படியே போனால் நாம் எவ்விடத்தில் போய்ச்சேர்வோம்?
ஒப்புக்கே வாழ்கின்றோம்! ஓங்குமன வாழ்க்கையில்லை!
காசுபணம், நாகரிகம், காட்சிக் கலைகளின்மேல்
மூசுகின்ற ஈக்களென மொய்ப்பதுவே வாழ்வென்று
பேசுகின்றோம்; செய்கின்றோம்! உள்ளத்தைப் பேணவில்லை!
கூசுகின்றோ மில்லை; ஒன்றாய்க் கூடிப் புலைவிளைப்போம்!
இத்தகைய வாழ்வை–இதில்வாழும் மாந்தரினைப்

---

* Cow Boy: Cow–காலி (ஆ) Boy–பையல் (பையன்) மேனாடுகளில் மாடு குதிரை மேய்ப்பவர்கள் அணியும் உடை, பழகும் முறை இவற்றை அடிப்படையாகக் கொண்ட அரையம்மண வெளியீடுகள் !

புத்துருவில் காட்டிப் புணைந்துரைக்கப் போகின்றார்
இங்கிருக்கும் பாவலர்கள்! இன்னவரின் பாட்டினிலே
பொங்கிவரும் நல்லுணர்வைப் பொக்கென்றே எண்ணுதீர்!
ஆசிரியர், மாணுக்கர், பெண்டிர், தொழிலாளர்,
காசற்ற ஏழையர், காசுநிறை செல்வர்-என
ஆறுவகை மாந்தரின் மாறுவகை ஆக்கமெல்லாம்
ஏறுவகை நல்லுணர்வோ டிங்கே உரைப்பதுடன்,
பெற்ற அழிவெல்லாம் பேச விருக்கின்றார்!
கற்றவர்கள் நீங்கள்! கருத்துநலம் கொண்டவர்கள்!
ஆகவே பாட்டை அமைந்திருந்து கேளுங்கள்!
போகவே கூடாது! புன்மைத் திரையரங்கில்
மூன்றுமணி நேரமும் மூச்சடைக்கும் வாருக
ஆன்றமர்ந்து கேட்கிலையா? ஆங்கதுபோல் தீங்கின்றிப்
பாவலர்கள் கூறுகின்ற பாட்டரங்கைக் கேளுங்கள்!
தாவிவரும் இன்பம்! தழைத்துவரும் நல்லுள்ளம்!
மேவிவரும் வாழ்க்கை! மிளிர்ந்துவரும் நல்லாக்கம்!
தூவுகின்ற செந்தமிழால் தீங்குவரத் தோதில்லை.
ஆகவே பாவலரை அன்பால் அழைக்கின்றேன்.
ஓகத் தமிழுரைக்க ஒவ்வொருவ ராய்வருவர்!

முடிவுரை.

அன்புநிறை மாணவர்காள்! ஆன்றமைந்த சான்றோர்காள்!
இன்பமெழப் பாடி எழிற்றமிழின் நற்றிறத்தை
ஒவ்வொரு பாவலரும் இங்கே உரைத்திருந்தார்!
வெவ்வேறு பாச்சுவையால் உள்ளம் விரிந்திருந்தீர்!
சொல்லின் சுவைகண்டீர்! சொன்ன பொருள்கண்டீர்!
வெல்லத் தமிழின் விரிவான நற்கருத்தால்
இக்காலம் வாழ்கின்ற எந்தமிழின் மாந்தரையே
தக்கபடி காட்டிவிட்டார்; தங்கொள்கை சாற்றிவிட்டார்.
பாவலர்கள் மக்களையும் பாடிடுதல் நன்றென்னும்
ஆவலால் நாமும் அதைச்சுவைத்துக் கொண்டிருந்தோம்!
என்னசுவை! என்னசுவை! என்றே இடையிடையே
தின்னுந் தமிழ்ப்பாத் திறத்தினிலே மெய்மறந்தோம்!
அத்துடனே நம்கடமை ஆகி முடிந்ததென்றால்
மெத்தத் திருடர்நாம்! ஆமிதுவே மெய்யுரையாம்!

பல்வேறு மக்களையே பாவலர்கள் காட்டிவிட்டார்!
சொல்வேறு நம்மின் செயல்வேறு? சொல்லுங்கள்!

ஆசிரியர் கண்டோம்! அவர்வழியே கற்கின்ற
மாசற்ற உள்ளத்தின் மாணாக் கரைக்கண்டோம்!
இக்கால் இருவருக்கும் ஏற்றத்தாழ் வெல்லாமும்
தக்கபடி ஆய்ந்து, தகாதவற்றை நீக்கிவிட்டு,
மேலான கொள்கையினை மேற்கொண்டு வாழ்வதுவே
சால்பாகும்! அந்நிலையைச் சாற்றிடவும் தேவையில்லை!
மாணாக்கர் தம்நிலையின் மாண்புணர வேண்டுகின்றேன்!
வீணாக்க வேண்டா விளைபயிரை என்றே நம்
பேரா சிரியப் பெருமக்கள் எண்ணட்டும்!
வாராத வந்தெய்தும்! வந்தவிடர் மாண்டொழியும்!
நேராக யார்மேலும் குற்றம் நினைக்கவில்லை!
தேராமல் கூறுவது தேர்ந்தபின்னை மாறுவது
தீரா இடர்ப்படுக்கும் என்று தெளிந்திருப்பீர்!
ஓராமல் யாருக்கும் ஓர்குறையும் சாற்றற்க!
அஞ்சுதற்கே அஞ்சுக! அஞ்சாமைக் கஞ்சற்க!
எஞ்சுகின்ற நாளெல்லாம் எந்தமிழ்க்கும் நாட்டுக்கும்
மக்களுக்கும் நற்றொண்டு மாண்புறவே செய்மின்கள்!
தக்கபடி வாழ்மின்கள்! தாழ்வகலக் காண்பீர்கள்!

பெண்டிர் நலம்பற்றிப் பேசுகின்றோம்! பெண்களுக்குப்
பண்டைப் பெருமை பரக்கவுண்டாம்! ஆனாலும்
அன்னவர்க்குத் தக்க அறிவமைப்பு, செய்கடமை,
பன்னலமும் வாய்க்கும் பரந்த நறுங்கல்வி,
ஆகிய வற்றில் அறிவாய்ந்த சான்றோர்கள்
ஏக வுளத்தோடே எண்ணி வகுத்தளிக்க
வேண்டும்! அவர்க்குரிமை வேண்டும்!அவர்க் காடவர்போல்
யாண்டும் துணிந்துரைக்க-யாண்டும் துணிந்துசெய
வாய்ப்பளிக்க வேண்டும்! வளமாய் உடல்வேண்டும்!
தாய்ப்பெண்டிர் யாவர்க்கும் தன்னந் தனிச்சலுகை
நல்குவதே நல்லறமாம்! நஞ்சுமன ஆடவர்கள்
பல்குழந்தைப் பேறளித்துப் பாவையரைக் கொத்தவரைப்
பிஞ்சுபோ லாக்கிப், பிணந்தின்னுந் தீங்கழுகுக்
குஞ்சுகள்போல் ஏழெட்டைக் கொத்திப் பிடுங்குதற்கே
ஆளாக்கி விட்டே அவரைக்கை விட்டிடுவார்!
தூளாக்க வேண்டுமவர் தோளெலும்பை; மார்பெலும்பை!

கன்னி ஒருத்தியை,ஓர் காமுகனும் கற்பழித்தால்
அன்னவனின் பெற்றோர்க்(கு) அகலாச் சிறையென்று

சட்டமிடல் வேண்டும்! சரிக்குநிகர் வாழ்க்கையிணைக்
கட்டியவன் தன்மணைக்குக் காட்டிவிடல் வேண்டுமென
வல்லார் வகுத்தளிக்கும் வாய்ப்புவரும் நாள்வரட்டும்!
நல்லார் பிழைபடவும் நாமிசையக் கூடாது!
பெண்டிர்க்குக் கற்பு பெரிதானால் ஆடவர்க்கும்
உண்டு அதுபோல் என்னும் உயர்நெறியும் வேண்டுமிங்கே!

கன்னியரை விற்றிங்குக் காசடிக்கும் பெற்றோர்க்கும்,
அன்னவரைத் தாம்கொள்ள ஆயிரம்பத் தாயிரமென்
றெண்ணிவை என்னும் இளைஞருடை பெற்றோர்க்கும்,
நண்ணும் சிறையென்றால் நாடு திருந்தாதா?
மங்கையர் கூட்டம் மகிழ்ந்திருக்க மாட்டாதா?
இங்கிருக்கும் நல்லிளைஞர் எண்ணிச் செயற்கெழுக!

மற்றுத் தொழிலாளர் மாய்ந்துபோ கின்றநிலை
எற்றுக் கிருந்திடுதல் வேண்டுமிங்கே? எண்ணிடுவீர்!
வெற்றுக்கே கட்சி வெறியாட்டம், கொள்கை-எல்லாம்!
தொற்றுநோய் போலத் தொழிலாளர் போராட்டம்!
தன்னுடலால் மக்கள் தனிநலத்தைக் கூட்டுகின்ற
பொன்னேர் தொழிலாளர் உள்ளம் புகையாமல்
கண்ணெனவே காத்தல் அரசின் கடமையென்க!
உண்ணும் உணவும் உடையும் உறையுளுமென்
றெல்லாம் அவர்க்கிருத்தல் எல்லார்க்கும் நல்லதுவாம்!
கல்லா அவருடலம்? காய்ச்சிவைத்த வல்லிரும்பா?
உண்டது தான்செரியா தோர்கூட்டம் வாழ்கையிலே
உண்பதற்குக் கூழின்றி ஓர்கூட்டம் வாழுவதா?
பேச்சுப்பேச் சென்று நாம் பேசுகின்றோம்! செய்தோமா?
காச்சுமுச் சென்றே கதறுகின்றோம் கூட்டத்தில்!
வல்ல தொழிலாளர் வாழ்ந்திருந்தால் வாழ்வோம், நாம்!
அல்லதவர் வீழ்ந்தால் அனைவோரும் வீழ்ந்திடுவோம்!

ஏழையரின் தம்நிலையோ ஈண்டுரைக்க வொண்ணாது!
கோழையரைப் போலவும்நாம் கூனிவிடல் ஆகாதே!
இல்லையெனும் கூட்டத்தை இல்லாமல் ஆக்குவதில்
தொல்லையென்ன வந்ததுவாம்? தோது தெரியாதா?
ஏழையெனும் ஓர்கூட்டம் என்றும் இருந்திடவே
மோழை மனத்தினர்,நாம் முக்காலும் எண்ணுகின்றோம்!
அல்லாக்கால் ஏனவர்க்கே ஆக்கம் ஒதுக்கவில்லை!

எல்லார்க்கும் எல்லாமும் என்னும் சமவுடைமைச்
சட்டமிட அஞ்சுகின்றோம்! உள்ளம் தயங்குகின்றோம்!
திட்டமிட ஏன்தயக்கம்! செல்வரிடம் ஏன்அச்சம்?
ஆள்கின்ற நாமும் அவர்போல வாழுதற்கே
முள்கின்ற ஆசைவந்து மொய்த்துக் கிடக்கின்றோம்!
செல்வர்போல் வாழச் சிறியமனங் கொண்டுவிட்டோம்!
வெல்வர்போல் பேசி விளையாட்டுக் காட்டுகின்றோம்!
மெய்யாய் விளைபடவே உள்ளம் தயங்குவது
பொய்யன்றோ! ஆகப் புரட்டுபல பேசுகின்றோம்!
நாட்டுடைமைச் சட்டமிங்கு நாளைக்கே வந்தாலும்
வாட்டுகின்ற கொல்வறுமை வாட்டம் தவிராதா?

குந்தக் குடிசையின்றிக் கொல்பசிக்குக் கூழின்றி
நொந்திருக்கும் ஓர்கூட்டம்! நோகாமல் மற்றொன்று
தொப்புளுக்கும் கீழாகத் தோள்வரைக்கும் தானுண்டு
கொப்புளிக்கப் பன்னீரைக் கேட்பதென்றால் யார் குற்றம்?
ஆள்வோர்கள் சட்டம் அரைநொடியில் அந்நிலையைத்
தூள்தூளாய்ச் செய்யாதா? தோல்விவந்து நேர்ந்திடுமோ?
விண்வெளியும் விண்ணின்று வீழும் மழைத்துளியும்
நுண்ஒளியும் காற்றும்-எனும்பூத நுகர்ச்சியைப்போல்
மண்வெளியும் இங்கெல்லா மக்களுக்கும் சொந்தமென்றும்,
உண்வழியை எல்லாம் உழைத்தடைய வேண்டுமென்றும்,
ஏனிங்கோர் சட்டம் இயற்றிவிடக் கூடாதாம்?
ஏனிங்கோர் கூட்டம் எதிர்த்துரைக்க வேண்டுமிதை?

மண்ணுடைமை ஒன்றன்றோ மற்றுடைமை யாவைக்கும்
நண்ணுடைமை யாகநின்று நம்முயர்வை வீழ்த்தியது?
மண்ணைப் பொதுவென்றால் மண்விளைவுந் தான்பொதுவாம்!
பண்ணை முறையில் பயிர்விளைவும் கண்டிடலாம்!
அக்காலை ஏழையென்றும் ஆங்கொருவன் செல்வனென்றும்
செக்காலை மாடுகள்போல் சென்றுவரல் ஏலாது!
செல்வன் இருப்பானேல் ஏழ்மையும் சேர்ந்திருக்கும்!
செல்வம் எவரிடத்தும் சேர்ந்திருத்தல் கூடாது!
எல்லார்க்கும் ஊண்உடைகள், எல்லார்க்கும் வாழ்மனைகள்;
எல்லார்க்கும் வாழ்க்கை எனில்,உழைப்பும் எல்லார்க்கும்;
என்றிங்கே ஆகுமட்டும் என்னெழுதி, என்பேசி,
வென்றுவிடப் போகின்றோம்? வீணவைதாம் என்றிடுக!
கற்றோர்கள் இந்தக் கணக்குவிடை கண்டிலரேல்

மற்ரேர்கள் ஓர்நாள் மளமளெனத் தாமெழுந்து
கற்ரேரின் முன்பே கணக்கெழுதித் தீர்ப்பார்கள்!
வெற்றுரை அன்று விளைவுரையே என்றுணர்க!

அந்தநாள் மட்டும் அடிபிடிகள் சண்டைகள்தாம்!
எந்தநாள் ஆனுலும் எத்தனைநாள் போனுலும்
அந்த ஒருநாள் அனைவருக்கும் நல்லநாள்
வந்துதான் தீரும் வரவேற்க நாமெல்லாம்
காத்திருப்போம்; உள்ளம் கனிந்திருப்போம்; அந்நாளில்
பூத்திருக்கும் இன்பம் பொலிந்து!

‘தென்மொழி’ தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956.
19 ஈ (ஆ) வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்: கடலூர்-1.
2. காலமுறை: திங்கள் ஒருமுறை.
3. அச்சிடுவோர் பெயர்: மா. தாமரை.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம், கடலூர்-1.
4. வெளியிடுவோர் பெயர்: திரு. பெருஞ்சித்திரன்.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம், கடலூர்-1.
5. ஆசிரியர் பெயர், முகவரி: திரு. பெருஞ்சித்திரன், கடலூர்–1.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும். } திரு. பெருஞ்சித்திரன், கடலூர்-1.

பெருஞ்சித்திரனுகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

1—3—73 }
கடலூர்-1. }

–பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

(40 ஆம்-பக்கத் தொடர்ச்சி)

சென்று வந்த அடியார்க்கு நல்லார் நாற்பது வரிகள் எழுதியிருக்கிறார்கள் இதைப்பற்றி. என்னென்ன நாடுகள் அழிந்தன என்று பெயர்களையும் எழுதியிருக்கிறார். ஏழ்தெங்க நாடு ஏழ்பனைநாடு, ஏழ்குண பாலை நாடு—என்றவாறு நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன என்று இவ்வளவும் எழுதியும் கூட, அவர் என்ன சொல்கிறார்? மேனாட்டவர் என்ன சொல்கிறார்? நம் கால்டுவெல் என்ன சொல்கிறார் என்று நாம் கேட்கிறோம். என்ன சொன்னால் என்ன? தொல்காப்பியம் தெரியாத கால்டுவெல் என்ன சொல்லுவார் என்று நினைக்கிறீர்கள்? நன்னூல்தான் அவருக்குத் தெரியும. சிந்தாமணி கொஞ்சம் தெரியும். அவருக்கு வேறு பல தெரியும். (நாம் சொல்லும்) இந்தப் பொருள் தெரியுமா? தெரியாது. ஏதோ, அகரமுதலியில் இருக்கிற பல சொற்களை வைத்துக் கொண்டு, அது இது என்று சில முடிவுகள் பண்ணினார். அவரால் சில நன்மைகள் ஏற்பட்டன என்பதை நான் மறுக்க வில்லை. இந்தக் கருத்துக்கு (குமரிக்கண்டக் கருத்துக்கு) அவர் செய்தது சரியா? தொல்காப்பியம் என்ற ஒரு நூல் தெரியாமல் திரணதுமாக்கினி என்று எழுதிக்கொண்டிருந்த காலத்தில், (—பழைய காலத்தில் பார்த்தால் தொல்காப்பியர் என்று எழுதியிருக்க மாட்டார்கள். அவர் ஓர் 'அக்கினி பகவான்' என்று நினைத்துக் கொண்டு, திரணதுமாக்கினி என்று எழுதினார்கள். அதிலிருந்துதான் தொல்காப்பியர் என்ற சொல் வந்தது என்பது வேறு சிலருடைய கருத்து! திரணதுமாக்கினி என்பது — திரண, துரண, தொரண என்று போய், கடைசியிலே தொல் என்று வந்தது என்பது அவர்கள் கற்பனை? இப்படி வந்தால் இன்னும் என்னென்ன வகையாக வருமோ, தெரியவில்லை.) அப்படிப்பட்ட தொல்காப்பியம் என்று பெயர் தெரியாத காலத்தில் இருந்த கால்டுவெல் இந்தக் கருத்தை எப்படி உணர்ந்திருக்க முடியும்?

பொதுவாக, இந்த இரண்டு கருத்துகளைத்தான் நான் கூறி, எனது முடிவைச் சொல்ல விரும்புகின்றேன். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப் பெற்றதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் இளங்கோ, நமக்குரிய நாட்டைச் சொல்லியிருக்கிறார். அடுத்து, பதினோராம் நூற்றாண்டில் வந்த தொல்காப்பிய உரையாசிரியர் (அவர் காலத்தில் இப்பொழுதுள்ள குமரிமுனைதான் இருந்தாலும் கூட) ஆராய்ந்து பார்த்துப் 'பிறநாடும் இருந்தமையின்' என்று எழுதினார். அதற்கப்புறம் வந்த அடியார்க்கு நல்லார். இஃது என்ன மூன்று பக்கமும் கடல் என்று சொல்லிவிட்டுப் போக வேண்டியிருக்க — எவ்வளவு ஆராய்ச்சி பாருங்கள் — அப்படிச் சொல்லாமல் வடக்கே

வேங்கடம், தெற்கே கடல், அப்புறம் கிழக்கும் மேற்கும் கடல்—என்று ஏன் இப்படிச் சொல்லியிருக்க வேண்டும்; 'வடக்கே வேங்கடம் மூன்று பக்கமும் கடல்' — என்று இப்படிச் சொல்லியிருக்கலாமே என்று ஒரு கருத்தை, கேள்வியை எழுப்பிக் கொண்டு, (நல்லகேள்வி இது. இப்பொழுது கூட ஆசிரியர்கள் சிலர் நல்ல கேள்வியாகக் கேட்டு விடுவார்கள். அவர்களுக்கே விடை தெரியாது. அஃதாவது மாணவர்கள் நம்மைப்பற்றி உயர்வாகக் கருதட்டும் என்று கேள்வியைப் பெரிதாகக் கேட்டு விடுவது. மாணவர்கள் எவராகிலும் வந்து விடைகேட்டால், "நீ உனக்குத் தெரிந்ததை எழுதப்பா! நான்தானே திருத்தப் போகிறேன். அப்புறம் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லித் தப்பித்துக் கொள்வது. அப்புறம் ஓர் இருபது மாணவர்கள் ஏதாவது எழுதியிருக்க மாட்டார்களா, நம்மைவிடக் கூர்மையானவர்கள்? அவர்கள் விடைகளைப் படித்து இவர்கள் தெரிந்து கொள்வது!) அப்படி (பெருஞ்சிரிப்பு) (ஏனென்றால் இந்தக் காலத்தில் அப்படி மாணவர்களையெல்லாம் போற்ற விட்டால் சிறப்பில்லை பாருங்கள்! அதற்காகச் சொல்லுகிறேன்) [மேலும் பெருஞ்சிரிப்பு] நம் அடியார்க்கு நல்லாரும் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டார். மூன்று பக்கமும் கடல் என்று சொல்லாமல், தெற்கேயும் கடல், மேற்கேயும் கடல், கிழக்கேயும் கடல் என்று ஏன் சொல்ல வேண்டும்? மூன்று பக்கமும் கடல் என்று மொத்தமாகச் சொல்லியிருக்கலாமே, என்று கேள்வியை எழுப்பினார். விடை சொல்லத்தவறி விட்டார். இதற்கு என்ன விடையென்றால், இரண்டு பக்கமும் எப்பொழுதும் கடல் என்பதுதான்! இந்த மூன்றாவது பக்கம் எப்பொழுதும் கடலாக இருந்ததில்லை. இப்பொழுது கடலாகி விட்டது என்பதைத் தெளிவித்திருக்க வேண்டும். அதற்காகத்தான்

> நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாடு — என்று

ஏற்கனவே தெற்கே நிலமாக இருந்த கரணியத்தால், தெற்கிலும் கடலாயிற்று என்று சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டது, என்னும் ஓர் ஆராய்ச்சிக் கருத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன், நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும், தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாடு —அடடா! இந்தச் சொல்லைப் பாருங்கள். தமிழ் வரம்பு அறுத்த நாடு என்று சொல்லவில்லை; தண்புனல் நன்னாடு என்கிறார். இதற்குமேல் என்ன நாட்டுப்பற்று வேண்டும்? எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும்

இந்நாடே, எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே, என்று இப்படிக் குத்திக்கொள்கிறான்; தன்னைக் குத்திக் கொள்கிறான் என்கிறேன். இதில் என்ன நாட்டுப்பற்று இருக்கிறது? ஏதோ இருக்கிறது! இருந்தாலும் அந்தச் சொற்களைப் பாருங்கள். தமிழ் வரம்பு அறுத்த தண்புனல் நன்னாடு! எவ்வளவு நல்லபற்று! நல் உலகம், தமிழ் கூறு நல் உலகம், தமிழ் கூறு என்று சொன்னாலே, அவன் தமிழனா நல்லவன் தமிழ் கூறுகிற இடமா, நல்ல இடம்! தமிழ் நாடா, தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு!

தொல்காப்பியர் இந்த நாட்டுக்கு என்ன சொல்லியிருக்கிறார் என்றால்,

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு

–நாட்டுக்குச் சொல்கிறார். பெரிய புகழ்வாய்ந்த மூன்று வேந்தர்கள் ஆண்டிருந்த பொழில் நிறைந்த நாடு. அவர் காலத்தில் எங்குப் பார்த்தாலும் செடியும் கொடியும் (மாந்தனைத் தவிர) நிறைந் திருந்திருக்கின்றன. எங்குப் பார்த்தாலும் செடி. மரம், இப்பொழுதோ எங்கே பார்த்தாலும் ஆள்தான்! வீதியில் பார்க்கிறோம். நூறு மரம் இருக்க வேண்டிய இடத்தில் நூறுபேர் நிற்கிறார்கள். (சிரிப்பு) ஆயிரம்பேர் இருக்க வேண்டிய இடத்தில் ஆயிரம் பேர் வரிசையாக நிற்கிறார்கள். முன்பெல்லாம் வீதியிலே சென்றவர்களுக்கு மரங்கள் வழிவிட்டன. இப்பொழுது ....மக்கள் வழி மறித்து நிற்கிறார்கள். (சிரிப்பு) 'நீட்டோலை வாசியா நின்றான்! குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்' என்று சொன்னார் பாருங்கள், அப்படி ஆகிவிட்டது. ஆனால் தொல்காப்பியர் காலத்தில் அவ்வளவும் பொழில்! இந்த நாட்டுக்கே பொழில் என்று பெயர். தண்பொழில் வரைப்பு என்பதற்கேற்ப அவ்வளவு காடும், மரமும், மலையும் நிறைந்த நாடு இது!

இன்னும், பழைய தமிழ் நூல்களில் இருக்கின்ற குறிப்புகளை யெல்லாம் பார்த்தால் நாம் தென்பகுதியில் இருந்த குமரிக்கண்டம் முழுவதும் நிறைந்து விளங்கியவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அதனால்தான் நம் திருவள்ளுவர் முதற்கொண்டு,

'தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்' என்று கூறுகிறார். அந்த முதலில் உள்ள ஒருசொல் மிக இன்றி

யமையாத சொல். நம் முன்னோர்கள் எங்கிருந்தார்கள்? இப்பொழுது கூட போருக்குப்போனவர்களை நாம் இங்கு நினைத்துக் கொள்வதில்லையா? அதுபோல நாம் நம் முன்னோர்களை-தெற்குப் புறத்தில் வாழ்ந்திருந்து கடலில் மூழ்கிப் போனவர்களை நினைத்து விருந்திட வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லுகிறார். திருக்குறள் பொது மறைதான். இருந்தாலும் தமிழ்மறை யில்லையா? எனவேதான் உலகப் பொதுமறையான திருக்குறளில், யார் யார்க்கு விருந்திட வேண்டும் என்று சொல்லப்பெறும் பகுதியில், யாரை முன்பு வைத்தார்? தென்புலத்தாரை. தென்புலத்தார் என்றால் யார்? நம் முன்னோர்கள். ஏராளமானவர்களாகக் கடலால் விழுங்கப் பெற்றவர்கள். நாம் அவர்களுக்கு வழிவந்தவர்கள் என்பதற்காகத் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்று விருந் தோம்ப வேண்டிய ஐந்து பகுதி யினருள் அவர்களை முன் வைத்துச் சொல்லுகிறார். இப்படி நம் பழைய நிலையை நினைவூட்டுகிறார்.

தமிழ் இலக்கியங்களைப் பொறுத்த அளவில், யாராலும் அசைக்க முடியாத சான்றுகள் இருக்கின்றன. புறநானூற்றில், இளங்கோவில்-நான்கு வரிகளாக இருந்தாலும், கழுத்தைக் கவ்விப் பிடித்ததுபோல்-யாரும் மறுக்க முடியாதபடி இருக்கின்றன. இடைக் காலத்தில் அடியார்க்கு நல்லாரோ நான் முன்பு சொன்னது போல் நாற்பதுவரிகள் எழுதியிருக்கிறார் இதைப்பற்றி. நான் கேட்கிறேன், எங்கே இருந்து கிடைத்தது அவருக்கு இந்தக் கருத்து? ஏழ் தெங்க நாடு, ஏழ்பனை நாடு, ஏழ் குணபாலை நாடு, ஏழ் குடபாலை நாடு, ஏழ் முன்பாலை நாடு, ஏழ்பின்பாலைநாடு-என்று இப்படி எழுதப் பெறுகின்ற கருத்து என்ன கட்டுக்கதையா? அந்தக் காலத்தில் வரலாற்றுக்கு என்று ஒரு கூட்டம் இருந்தது. அவர் இசை யெங்கெங்கே பிறந்தது என்பதை எல்லாம் தேடிப் பிடித்து எழுதி யிருக்கிறார். அதுபோலவே வரலாறுகள் எங்கெங்கே ஒளிந்து கிடந்தனவோ அவற்றையெல்லாம் தேடிப்பிடித்து அடியார்க்கு நல்லார் எழுதினார். ஆதலின் இடைக்காலத்தும் இதுபற்றி ஆராய்ந்து, **நம்முடைய இடம் இந்தத் தமிழ்நாடுதான், நாம் இன்றும் பிறந்த இடம் தமிழ் நாடுதான். நான் இன்னும் உறுதிப் படுத்த நினைக்கின்றேன்-நாம் இப்பொழுதும் பிறந்த இடம் இந்தத் தமிழ் நாடுதான்- நம் முன்னோர்கள் பிறந்த இடமும் - நம்முடைய தமிழ் இலக்கியச் சான்றின்படி இந்தத் தமிழ்நாடுதான்.**

மேனுட்டில் உள்ளவர்களுக்கு இந்தக் குறிப்புகள், 1904-இல் எழுதினவர்களுக்கும், 1920-இல் எழுதினவர்களுக்கும், போகவில்லை. அப்படிப் பிற்காலத்தில் போன குறிப்புகள் கூட, அது முடிவாக எடுத்துப் போகும் பொழுது இப்படியெல்லாம் புலவர்கள் சொல்லுவார்கள், இஃது ஒரு பாவியமுறை-இது POETIC TRUTH-என்று எழுதிவிடுவார்கள். அப்படி என்ருல் என்ன "இது முழுவதும் பொய்" என்று பொருள்; கீழே அப்படியே நான்கு வரிகள் கட்டாயம் எழுதிவிடுவார்கள். இளங்கோ சொன்ஞர்; எப்படிச் சொன்ஞர்; எந்த இடத்தில் சொன்ஞர்; ஏன் சொன்ஞர்' -என்றெல்லாம் கருதமாட்டார்கள். இது பாவிய முறை என்று எழுதிவிடுவார்கள். அப்படி என்னென்னவோ எழுதியிருக்கிருர்கள். அப்புறம் அவர்களுக்குள்ளேயே அவர்களை ஒருவருக் கொருவர் மறுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

மொத்தத்தில் நாம் என்ன முடிவு பண்ணிக்கொள்ளலாம். தமிழர்கள் எங்கெங்கேயோ இருந்து இங்கே வந்திருக்கிருர்கள் என்று அவர்கள் சொன்னுல், நாம் என்ன முடிவு பண்ணிக்கொள்ள லாம். அதற்கு முன்பு அவர்கள் இங்கிருந்து எங்கெங்கேயோ போயிருக்கிருர்கள் என்பதாக முடிவு பண்ணிக்கொள்ளலாம். மற்றபடி இந்தக் கருத்தரங்கினுலே நாம் நினைக்கின்ற முடிவு தொல்காப்பியப் பாயிரம், இளங்கோவடிகளுடைய ஏழெட்டுப் பத்துவரிகள், அடியார்க்கு நல்லாருடைய உரைப் பகுதிகள், உரையாசிரியருடைய உரைப்பகுதிகள் மொழிநூற் குறிப்புகள்-(இன்னும் விரித்துச் சொல்வதற்கு எனக்கு நேரமில்லை) இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, தமிழ் இனம், தமிழ் பிறந்த இடம், மறைந்த குமரிக்கண்டம் (இலெமூரியா என்று ஒரு பெயர் இருக்கிறது. என்ன பெயரோ, யார் கொடுத்த பெயரோ அது. இலெமூர் என்ற ஒரு குரங்கிலிருந்து வந்தவர்கள் என்று எழுதியிருக்கின்ருர்கள். நமக்கு என்னவோ எப்படி மறைந்தாலும் குமரியென்றுதான் பெயர்) அந்தக் குமரிக் கண்டமே தமிழனின் பிறந்தகம் என்று சொல்லி முடித்துக் கொள்கின்றேன் வணக்கம். O

நீங்கள் ஓர். உ., த, க, உறுப்பினரா ?
இல்லெனில் இன்றே உறுப்பினராகுங்கள்.

தொடர்புக்கு:
பொதுச் செயலர். உ .த. க., வலம்புரி இல்லம், மதுரை-10

'தென்மொழி' விலை உயர்த்த அறிக்கை

தென்மொழி ஓராண்டு உறுப்பினர் கட்டணம் உரு: 9-00 ஆக உறுதிப்படுத்தியபின், தாள்விலை முன்னிருந்த விலைக்கு 80 விழுக்காடும், மை விலை 75 விழுக்காடும், தொழிலாளர் ஊதியம் 50 விழுக்காடும், அஞ்சல் கட்டணம் 21 விழுக்காடும், மின் கட்டணம் 50 விழுக்காடும் உயர்ந்ததோடன்றி, பிற நிலைகளிலும் தென்மொழி அச்சிடும் வகைச் செலவினங்களும் மிகுந்து விட்டன. ஆனால் அவற்றிற்கேற்பத் தென்மொழி விற்பனை வரவு அன்றிருந்த நிலைக்குக் கூடாததுடன், நம் தமிழக அரசின் கரணியமாக ஓரளவு குறைந்தும் உள்ளது. படிகளின் எண்ணிக்கை மிகுந்தால் உருவாக்கச் செலவுயர்வை ஒருவாறு ஈடுகட்டலாம். அந்நிலையும் தென்மொழிக் கில்லை. வேறுசில வெளியீட்டு முறைகளைப் பின்பற்றினால் தென் மொழி விற்பனையை இன்றுள்ளதைவிட ஐந்து மடங்கு பெருக்க நம்மால் முடியும். விற்பனையைப் பெருக்குவ தென்பது ஒரு தனிப்பட்ட இனத்துக்கோ, தொழிலுக்கோ உரிய திறன் என்பதில்லை. ஆனால் அதற்குப் போதுமான முதலீடு தேவை. கிட்டத்தட்ட தென் மொழிக்கு இன்றுள்ள முதலீட்டைப்போல் பத்து மடங்கு உயர்ந்தால், தென்மொழியை இன்றுள்ள நிலையைப் போல் எட்டு மடங்கு உயர்த்த முடியும். முதலீட்டை ஐந்து மடங்கு உயர்த்தினாலுமே தென்மொழியை ஐந்து மடங்கு உயர்த்தலாம். ஆனால் அம் முதலீட்டுக்கு எங்கே போவது?

பச்சைப் பார்ப்பன இதழ்கள் சில இந்த நாட்டில் ஓரிலக்கம், ஈரிலக்கம் படிகள் விற்கின்றன என்றால், அதற்கு ஆரியத்தின் இனம் பேணிக்கொள்ளும் தனித்தன்மையும், காட்டிக் கொடுப் பின்மையும், தன்னவன் முன்னேற்றத்தில் தன்னவனே கொள்ளும் பொறுமையின்மையுமே கரணியமாகும். நம்மினத்தில்தான் இம் மூன்று தன்மைகளும் நீக்கமற நிறைந்துள்ளனவே. எனவே, உருவாக்கச் செலவு மிகுந்து போனதை வரவைக்கொண்டு சரிகட்ட முடியவில்லை. விளம்பர வருவாயும் தென்மொழிக்கு அறவே இல்லை. எப்பொழுதுமே தென்மொழி விற்பனை வரவில் 10 விழுக்காடு நன்கொடை வழியாகவே வருகின்றது. இந்தப் பத்து விழுக்காடும் நன்கொடை வழியாக வரவில்லையாயின் தென்மொழி நின்றே போயிருக்கும். 1962-இலிருந்து 1972 முடிய உள்ள பத்தாண்டுகளில் தென்மொழிக்கு இழப்பு உரு: 12294.42 உருபாவாகும். ஆண்டு ஒன்றுக்கு 1229 உருபாவும், மாதம் ஒன்றுக்கு 102 உருபாவும்

இழப்பு ஆகின்றது. இந்த இழப்பு ஆசிரியரின் சொற்பொழிவு வரவு, நூல் விற்பனை வரவால் சரிகட்டப்பெறுகின்றதே தவிர, ஈடுகட்டப் பெறுவதில்லை. தமிழ்ச்சிட்டிலும் மாதம் 30 உருபா போல் இழப்பே. தென்மொழிப் புரக்குநர் சிலர்-குறிப்பாக மலையக அன்பர்கள் அவ்வப் போது பேரளவில் நன்கொடைகளை அனுப்பி உதவ வில்லையானால் தென்மொழி என்றோ நின் றிருக்கும். அத்தகைய உதவிகள் இருப்பதால் -தான் இதழ் நின்று நின்றேனும் தத்துநடை பயில்கின்றது. இப்பொழுதுள்ள நிலையில் தென்மொழி இக்கால் வெளிவந்து கொண்டுள்ள அமைப்பு முறைகளில் ஒரு மாற்றமும் செய்வதற்கு வழியில்லை; (காலத்தாழ்த்தங்களில் கூடத்தான்)-என்பதுடன் இப்படியே போய்க் கொண்டிருப்பதற்கும் பேரிடர்ப்பாடாக இருக்கும் என்பதை அன்பர்களுக்கும் உணர்த்தியே ஆக வேண்டியுள்ளது.

எனவே, உறுப்பினர் தென்மொழிக் கட்டணங்களை மட்டும் கீழ்க்காணுமாறு உயர்த்த வேண்டியதாயிற்று என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இவ்வுயர்வு தென்மொழி சுவடி 11 ஓலை 1முதல் நடைமுறைக்கு வரும். அன்பர்கள் தென்மொழிக் கேற்பட்ட இச்சுமையைத் தாங்களும் பகிர்ந்து கொண்டு தொடர்ந்து துணை நிற்பார்கள் என்று நம்புகின்றோம். தமிழ்ச்சிட்டின் விலையுயர்வு இன்னும் ஓராண்டின்பின் நிகழலாம் (தேவையானால் அதற்குள்ளும் வரலாம்.)

தென்மொழியின் விலையுயர்த்த விளக்கம் (சுவடி 11 முதல்)

		உள்நாடு	கொழும்பு *	வெளிநாடு (கப்பல் வழி)
1.	ஆண்டுக் கட்டணம்	12-00	14-00	18 உருபா
2.	அரையாண்டுக்கட்டணம்	6-00	7-00	9 உருபா.
3.	தனியிதழ்	1-00	1-20	1-50

* (வானஞ்சல் கட்டணம் தனி) அமைச்சர், தென்மொழி

"வலம்புரி"

ஆசிரியர்: **புலவர் இறைக்குருவனார்**

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்கும் செந்தமிழ்த் திங்களிரிதழ். தனியிதழ் 0-25 காசு

ஆண்டுக்கட்டணம் 6 உருபா. அரையாண்டுக் கட்டணம் 3 உருபா.

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

வலம்புரி மதுரை-10.

'தென்மொழித்' திட்டத்

தேவநேயன் செந்தமிழ்ச்

சொற்பிறப்பியல் அகரமுதலி

அமைப்பு முறை

முதன்மடலம்: முதற்பகுதி—அ, ஆ
உ—ஆம் ,,—இ, ஈ
ங—ஆம் ,,—உ, ஊ
ச—ஆம் ,,—எ, ஏ, ஐ
ரு—ஆம் ,,—ஒ, ஓ, ஔ

உ—ஆம் மடலம்: முதற்பகுதி—க, கா
உ—ஆம் ,,—கி, கீ
ங—ஆம் ,,—கு, கூ
ச—ஆம் ,,—கெ, கே, கை
ரு—ஆம் ,,—கொ, கோ, கௌ

ங—ஆம் மடலம்: முதற்பகுதி—ச, சா
உ—ஆம் ,,—சி, சீ
ங—ஆம் ,,—சு, சூ
ச—ஆம் ,,—செ, சே, சை
ரு—ஆம் ,,—சொ, சோ, சௌ
சு—ஆம் ,,—ஞ, ஞா, ஞி, ஞெ, ஞே, ஞை, ஞொ

ச—ஆம் மடலம்: முதற்பகுதி—த, தா
உ—ஆம் ,,—தி, தீ
ங—ஆம் ,,—து, தூ
ச—ஆம் ,,—தெ, தே, தை
ரு—ஆம் ,,—தொ, தோ, தௌ

ரு—ஆம் மடலம்: முதற்பகுதி—ந, நா
உ—ஆம் ,,—நி, நீ
ங—ஆம் ,,—நு, நூ
ச—ஆம் ,,—நெ, நே, நை
ரு—ஆம் ,,—நொ, நோ, நௌ

சு—ஆம் மடலம்: முதற்பகுதி—ப, பா
உ—ஆம் ,,—பி, பீ
ங—ஆம் ,,—பு, பூ
ச—ஆம் ,,—பெ, பே, பை
ரு—ஆம் ,,—பொ, போ, பௌ

எ—ஆம் மடலம்: முதற்பகுதி—ம, மா
உ—ஆம் ,,—மி, மீ
ங—ஆம் ,,—மு, மூ
ச—ஆம் ,,—மெ, மே, மை
ரு—ஆம் ,,—மொ, மோ, மௌ

அ—ஆம் மடலம்: முதற்பகுதி—ய, யா
உ—ஆம் ,,—வ, வா
ங—ஆம் ,,—வி, வீ
ச—ஆம் ,,—வெ, வே
ரு—ஆம் ,,—வை, வௌ

கூ—ஆம் மடலம்: பிற்சேர்ப்பு (SUPPLEMENT)

க0—ஆம் மடலம்: செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறி முறைகள் (PRINCIPLES OF TAMIL ETYMOLOGY)

கக—ஆம் மடலம்: தமிழ் அகரமுதலி வரலாறு (HISTORY OF TAMIL LEXICOGRAPHY)

கஉ—ஆம் மடலம்: முகவுரை, முன்னுரை, செ. சொ. அகர முதலி யமைப்பு விளக்கம், மேற்கோள் விளக்கம், செ. சொ. அகரமுதலித் திட்டம், செ. சொ. அ. உறுப்பினர் விளக்கம் முதலியன.

குறிப்பு:— முதல் எண்மடலங்களிலும் விடுபட்டுப் போன இருவகை வழக்குச் சொற்களும் சிறப்பாகத் தமிழகத்திலும் மலையாள நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் வழங்கிவரும் உலக வழக்குத் தமிழ்ச்சொற்கள், பிற்சேர்ப்பு மடலமாக வெளிவரும். முதன்மடலம் முதற்பகுதி இவ்வைந்திர (பஞ்சாங்க) ஆண்டிற்குள் அச்சிடப்படும். அதன்பின் ஏனைப் பகுதிகளும் தொடரும்,

செய்திகள்

1. காஞ்சிபுரம்-பச்சையப்பன் ஆடவர் கல்லூரி:

6—2—73 தொடங்கி காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்மன்றச் சார்பில் முத்தமிழ் விழா கொண்டாடப் பெற்றது. 9—2—73 அன்று நடந்த இசைத் தமிழ் விழாவையொட்டிப் பாட்டரங்க நிகழ்ச்சி இருந்தது. அதில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கலந்து கொண்டு 'பாவேந்தர் பாரதிதாசன்' என்னும் தலைப்பில் பாடினார்கள். மற்றும் பலரும் பல்வேறு தலைப்புகளில் பாடல்களை அரங்கேற்றினர். இவ் விழாவிற்கு ஓய்வு பெற்ற பேராசிரியர் திரு. கோ. பாலசுந்தர நாயகர் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

2. காஞ்சிபுரம்-தென்மொழி அன்பர் திருமண விழா

கடந்த சுறவத் திங்கள் 29-ஆம் பக்கல் (11—2—73) தென்மொழி அன்பரும் புரப்பாளருமாகிய திரு. க. சுடர்மாலிறையன் (நாராயணன்) அவர்களுக்கும் செல்வி எழில் முதல்வி (சௌந்திரம்) அவர்களுக்கும் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா கலையரங்கில் தந்தை பெரியார் அவர்கள் தலைமையிலும் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு ச. இராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையிலும் திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது. 'தென்மொழி' ஆசிரியர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். 'விடுதலை' ஆசிரியர் திரு. கி. வீரமணி அவர்களும், தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளன்மார் இராசகோபால், அண்ணாமலை, ஆறுமுகம் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர். 'தென்மொழி'யும் உளமுவந்து வாழ்த்துகின்றது.

3. வேலூர் (வ. ஆ.) ஊரீசுக் கல்லூரி முத்தமிழ்க் கலை விழா.

கடந்த 14—2—73 அன்று வேலூர் (வ. ஆ.) ஊரீசுக்கல்லூரித் திரு வி. க. தமிழ்மன்றம் நடத்திய முத்தமிழ்க் கலைவிழாவையொட்டிப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் 'இக்காலத் தமிழ்மாந்தர்' என்னும் தலைப்பில் பாட்டரங்கம் நிகழ்ந்தது. இவ்விழாவிற்குப் பேரா. திரு. செயகரன் ஐசக் தலைமை தாங்க, திரு. ம. வி. சுதாகர் வரவேற்புரையாற்றினார். மாணவர் திரு. குப்புசாமி, ஆசிரியன்மார் சொ. பழனி, தி. மு. அப்துல்காதர், பொன். செல்வகணபதி, வழக்குரைஞர் திரு. இரா. செந்தாமரை, ஆலந்தூர் திரு. கோ. மோகனரங்கன் ஆகியோர் முறையே ஆசிரியர், மாணக்கர், பெண்டிர், ஏழையர், தொழிலாளர், செல்வர் என்னும் தலைப்புகளில் பாடினர். திரு. இரிச்சர்டு யோசேப்பு நன்றி கூறினார். விழாவுக்கான ஏற்பாடுகளை மன்றத்தலைவர் திரு. சி. தேவராசன் க.மு. அவர்கள் செய்திருந்தார்கள்.

4. வாழைப்பாடி-தமிழர் திருமண விழா.

கடந்த கும்பம் 4-ஆம் நாள் (15—2—73) நெய்வேலித் தென்மொழி அன்பர் திரு. மு. அறவாழி அவர்களின் இளவல் திரு. மு. கண்ணன் அவர்களுக்கும், செல்வி செ. பைந்தமிழரசி அவர்களுக்கும் சேலம், வாழைப்பாடி—பொன்னாரம்பட்டி உலகமதி இல்லத்தில் 'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. பழைமையும் ஆரிய மூடப்பழக்க வழக்கங்களும் நிரம்பிய அந்த வட்டாரத்திலேயே இதுபோன்ற திருமணம் நடப்பது இதுவே முதல் முறை. எனவே கூட்டம் நிறைந்திருந்தது. இத்திருமணத்தால் சுற்றுப்புற மக்களிடம், ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டதெனச் சொல்லலாம். மணமக்கள் நீடுவாழ மனமார வாழ்த்துகின்றோம்.

5. அம்மையன்பட்டி-பாவாணர் பிறந்த நாள் விழா

கடந்த சுறவம் 28-ஆம் பக்கல் (10—2—73) உரத்தநாடு-அம்மையன் பட்டி உ.த.க. கிளை தொடக்க விழாவும் மொழி ஞாயிறு பாவாணர் அவர்களின் 72-ஆவது பிறந்த நாள் விழாவும் கருக்காடிப் பட்டியில் நடைபெற்றன. திரு. அன்பு ந. வை. இளஞ்செழியன் ஏற்பாடு செய்த இவ்விழாவில் தஞ்சை மாவட்டத் தென்மொழி அன்பர்கள் திருவாளர்கள். புலவர் த. ச. தமிழன், புலவர் சா. அடல் எழிலன், புலவர். மா.கயற்கண்ணன், திரு.சி.இராசாங்கம்,முதலியோர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர்.

6. வளன் அருண்மொழி இளங்கோ நீடூழி வாழி!

நெடுநாளையத் 'தென்மொழி'க் காவலர் திரு. த. வளங்கோ அவர்களின் அண்ணார் திரு. த. வளனரசு (சோசப்பு) அவர்களுக்கும் அண்ணியார் திருமகள் (பாத்திமா) அவர்களுக்கும் கடந்த 12—1—73 அன்று ஆண்குழந்தை பிறந்து அம்மகவுக்கு வளன் அருள்மொழி இளங்கோ என்று பெயர் சூட்டப்பெற்றுள்ளது. இம்மகப் பேற்றின் நினைவாகப் பெற்றோர் உரு: 50.00 'தென்மொழியின் வளர்ச்சிக்கு நன்கொடையாக அளித்துள்ளனர். அன்னார் தம் தமிழ் நெஞ்சிற்கு நன்றி கூறிச் செல்வன் வளன் அருள்மொழி இளங்கோ நீடுழி வாழ நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

7. அருண்மொழியரசு நீடூழி வாழி!

தஞ்சைத் தென்மொழி அன்பர் திரு. இறைமகிழ்நன் (பரமானந்தம்) திருவாட்டி கயல்கண்ணி (மீனாட்சி) ஆகியோருக்குக் 8—2—73-இல் ஆண்குழந்தை பிறந்து, அதற்கு அருண்மொழியரசு என்று பெயர் சூட்டி, அதன் நினைவாக நன்கொடையாகத் தென்மொழிக்கு உரு: 5—00 அனுப்பியுள்ளனர். அவர் தம் தமிழ் உள்ளத்திற்கு நன்றி! அருண்மொழியரசு நீடுழிவாழ்க!

குடும்பத்துடன் புறப்பட அணியமாகி விட்டீர்களா?

தென்மொழிக் கொள்கை

(தமிழக விடுதலை)

இரண்டாவது மாநாடு!

மதுரையில் மிகச்சிறப்புடன் நடைபெற இருக்கின்றது!

விடை 27 (9, சூன் 73)-காரி: குமுகாயமாநாடு
விடை 28 (10, சூன் 73)-ஞாயிறு: அரசியல் மாநாடு

அரசியல் தலைவர்களும் மற்றும் பல அறிஞர்களும் கலந்து கொள்கின்றனர்!

பிறவிளக்கங்களுக்கு: 44, அளவுக்காரத் தெரு, மதுரை-625001

இனித் தமிழாவது தனித்தமிழேயென, எங்கும் எவர்க்கும் இனிது விளக்கிடத், திங்கள் தோறும் உங்கள் கையுறும் தென்மொழி யணியில் இன்னும் ஓரிதழ்!

தீச்சுடர்

சிறப்பாசிரியர்: பாவலர் பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்: க. வெ. நெடுஞ்சேரலாதன்

தனியிதழ் 00-25 ஆண்டுக் கட்டணம் 3-00

O தி. பி. 2004. சுறவத் திங்கள் முதல் வெளிவருகிறது.

O இதழுக்கு 50 காசு மேனி முன்பணங்கட்டும் முகவர்கள் எழுதுக!

தீச்சுடர், மதுரை-10

'தமிழம்'

(திங்களிதழ்)

ஆசிரியர்: உலக முதல்வி

0 தென்மொழி யணியில் சிறப்புடன் வெளிவந்து கொண்டுள்ளது!

தனியிதழ் 50 காசு ஆண்டுக்கட்டணம் 6 உருபா

இன்றே உறுப்பினர் ஆகுங்கள்

'தமிழம்', 17, நாகப்ப முதலி தெரு, சென்னை-2.

திரு. வி. க. மலர்-தேர்ச்சி

தமிழ் நெஞ்சங்களே, இயற்றமிழ்ப் பயிற்றகத்தின் சார்பில் திருவாரூரில் நிகழவிருக்கும் திரு. வி. க. உருவமைப்பு விழா நினைவை நாண் மலரில் அமைவது குறித்துக் கீழ்க்காணும் பொருண்மை எழுத்தோவியங்கள் தேர்ச்சிக்கு வேண்டப்படுகின்றன.

பாடல்:—

தலைப்பு:—	1) 'இயற்கை இன்பம்' 2) 'உளங் குமுறுகின்றேன்'
கட்டுரைகள்:—	
வக்கணைக் கட்டுரை:—	'நீயிர் விரும்பிப் பயின்று தோய்ந்த திரு. வி. க. நூலொன்று'
திரு.வி.க. உரை நடை யொத்த சாயற் கட்டுரை	'எதிர்கால ஞாலத்தின் முதிர்கோலம்'
ஓரியல் நாடகம்:—	'திரு. வி. க. வாழ்வில் ஒரு நிகழ்ச்சி'
கதை:—	திரு. வி. க.வின் நோக்கமைந்த பாலுணர்ச்சி கருவல்லாத நடைமுறை வாழ்க்கையின் உண்மைப் படப்பிடிப்பு.
மொழி நடை:—	தூய, இனிய தமிழில் இருத்தல் வேண்டும். தக்க தமிழறிஞர்களால் தேர்ந்தெடுக்கப் பெறும். எழுத்தோவியங்கள் பரிசு வரிசைக்குரியனவாய் திரு.வி.க. உருவமைப்பு நாண் மலரில் இடம்பெறும். பாடல்கள் 50 அடிக்கு மிகாமலும் உரை நடை 300 வரிக்கு (பத்துப் பக்கம்) உட்படவும் அமைதல் வேண்டும்.
இறுதி நாள்:—	தி. பி. 2004 மேழம் (சித்திரை) 18, 1973 ஏப்பிரல் 30 (திங்கட்கிழமை)
தொடர்பு முகவரி:—	செயலாசான், 'திரு.வி.க. உருவைப்புத் திட்டம்' இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.

கொண்ட முடிவு கண்டு சினமும் மனக்கிளர்ச்சியும் கொண்டு தங்கள் மேல் குற்றம் சாற்றிட முயலும் குறுமதியாளர்க்குத் தங்களின் "என் மொழியை என் இனத்தை என் நிலத்தை மாற்றானிடம் இட்டுவிட்டுச் சோம்பிவிட உள்ளம் இசையேன்!–" என்ற வீரவரிகள் அறிவு புகட்டு மாக!

—புலவர். ஆ. ப. தொல்காப்பியன்.
–ஆலமரத்துப்பட்டி–திருச்சி.

0: 363: கனிந்த வணக்கங்கள். தமிழ்த்தாளிகை வரலாற்றில் தென்மொழியைப் போன்ற செப்பமும் செறிவும் வாய்ந்த இதழ் இதுவரை எதுவும் நடைபெற்றிருக்க முடியாது என்பதே எம் போன்றோரின் தாழ்மையான கருத்து. ஆனால் அந்நினைவைப் பொய் யாக்கும் வகையில் தென்மொழியின் அண்மைக்கால இதழ்கள் ஏனோ எமக்கு முழு நிறைவளிப்பனவாக இல்லை. இல்லாத இறைவனை இழுத்துவைத்தழுத, உங்களுக்கு ஏற்புரையும் மறுப்புரையுமாக நிறைந்து நின்ற தென்மொழி இதழ்களைத் தொடர்ந்து, இப்பொழுது அருட்செல்வர் ஆட்சிக்குக் கனிவுரையும் கடிந்துரையுமான முடங்கற் குவியல்களே தென்மொழியை ஒட்டுமொத்தக் குத்தகைக்கு எடுத்துள்ளன. உளத்தையும் உணர்வையும் ஒருங்கே உசுப்பி யெழுப்பும், தங்களின் வீறுநிரம்பிய பாடல்களையும், ஆசிரியவுரை களையும் இற்றைத் தென்மொழி யிதழ்களில் காண முடிவதில்லை! பொங்குணர்வுப் பாத்திறன் பூத்துக் குலுங்க, முழுத்தமிழ்ப் பாவுலகின் முதன்மை இலக்கியமாய்த் திகழும் 'நூறாசிரிய'மும் இக்கால் இடம்பெறுவதில்லை. இந்நிலைமைகளால் தென்மொழி நாளுக்குநாள் மங்கி வருவதாகவே எமக்குப் படுகிறது. எவருக்கும் வாய்க்கப்பெறாத அளப்பறிய பாடல்திறன் சான்ற தாங்கள் பிறவினைப்பாடுகளில் ஈடுபட்டு வெதும்புவதை எம்மனோர் விரும்ப வில்லை. தங்களின் முழு ஆற்றலையும் இலக்கியத் துறையில் ஈடுபடுத்தித் தாங்கள் தென்மொழியை வெளிக்கொணரும் நன்னாளே தமிழுக்கும் தாளிகைக்கும் ஏற்றம் தரும் பொன்னாளாகும். அந்நாள் விரைவில் வர அருள்செய்வீராக!

செந்தலை. ந. கௌதமன்–அரசர் கல்லூரி, திருவையாறு.

0: 364: தங்கள் தென்மொழியைத் தவறாது வாங்கிப் படித்துவரும் ஒரு தனித்தமிழன்பன் எழுதுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசியற் சுழற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல் பேச்சிலும் எழுத்திலுமே தம் பெருவாழ்வை அமைத்துக் கொண்டு இருந்திருப்பின், திரவிட நாட்டுக்கு ஒரு சேக்சுபியர் கிடைத்திருப்பார். அண்ணா செய்த இப்பிழையைத் தாங்களும் செய்ய வேண்டுமா? இன்றைய அரசியலமைப்பில், உங்களைப் போன்ற பல்லாயிரவர் வருந்தி முயன்றாலும் தூர்வார இயலவே இயலாத அளவில், சேறுடைப் பெற்றியது நம் அரசியல். தூர் வாரத்தான் வேண்டும் என்று முனைந்தால் அண்ணா அவர்களை அமிழ்த்திய சேற்றின் பெருக்கம் உங்களையும் விட்டு வைக்காது. உங்களைப் பற்றி நீங்கள் கவலுறாதிருக்கலாம். ஆனால் என்னைப் போன்ற தனித் தமிழன்பர்கள் உங்களிடம் எதிர்பார்ப்பது அரசியல் அன்று.

இன்றைய அரசியலமைப்பு மாறுதவரை தங்களைப் போன்ற தமிழ்க் காவலர்கள் தமிழ்க்காப்புப் பணி ஒன்றிலேயே முழுமூச்சாகச் செயல்படுவதால் தமிழர்க்குக் கிடைக்கும் பெரும்பயன் உறுதிப் படுத்தப்படுவதாகும். தனித்தமிழார்வலர்களின் இவ்வேட்கையைத் தாங்கள் புறக்கணிக்க வேண்டாம் என்று தங்கள் தாள் பணிந்து

வேண்டுகிறேன். பாவலரவர்களே, வேண்டாம் உங்கட்கு இப்பாழு அரசியற் குட்டை! ஒரு தனித்தமிழன்பன்—திண்டுக்கல்

0: 365: 'கலைஞரின் கைகளை வலுப்படுத்துக' என்ற ஆசிரிய வுரையையும், ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் என்ற ஆசிரியவுரையையும் படித்தோம். தாங்கள் மனத்தில் எண்ணுவதைத் துணிந்து எழுதிவருவது குறித்து மிகமிகப் பாராட்டுகிறோம் போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும் என் கடன், தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும், தனித்தமிழர் ஆட்சிக்குப் தொண்டு செய்வதே என்று துணிந்த தங்கள் ஒப்பற்ற கருத்தை வாழ்த்தி வரவேற்கிறோம். தொடர்ந்து எழுதும்படியும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம். —பொன். மதிவாணன்
ச. தமிழரசன், இரா. சித்தார்த்தன், ந. தனபால்
ம. மதியரசன், எசு.பானுமதி-உரத்தநாடு

0: 366: நாங்கள் இருவரும் தங்களின் ஆசிரியவுரையை (கலைஞரின் கைகளை வலுப்படுத்துக) தென்மொழி இதழில் கண்ணுற்று, அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் மடல்களை முன் வரைந்தது (மக்களவை 169, 170) தங்களுக்கு நினைவிருக்கும். அதன் பிறகு எங்கள் (காஞ்சி, பச்சையப்பன்) கல்லூரியில் நடத்தப்பெற்ற முத்தமிழ் விழாவின் பாட்டரங்கில் தாங்கள் பாவேந்தரைப்பற்றிப் பறை சாற்றிய புகழுரைகளைக் கேட்டு இன்புற்றோம். அவ்வரங்கில் பங்கு கொண்ட திருச்சித் தியாகராசன், நா. பார்த்தசாரதி, தஞ்சை வாணன் போன்றோர் சூழ்நிலைக்கு ஏற்ப அருட்செல்வனாரைக் குறைகூறிக் கையொலி வாங்கினார்கள். ஆனால் தாங்கள் பாட்டரங்கில் செம்மாந்த தோற்றத்துடன் பாட்டிசைத்த போது அதுவரை வீண்ஒலி யெழுப்பிய மாணவர்கள், அவற்றை விடுத்துத் தங்கள் பாட்டில் மனம் பறிகொடுத்து இன்புற்றார்கள். மேல் பூச்சுக்கு என்றும் மதிப்பில்லை என்று இக்கூற்றால் மெய்ப்பிக்கப்பெற்றது. தங்கள் 'ஒருவருக்குத்தாம்'பொருள் புரிந்து, சுவைத்து, இன்புற்றுக் கையொலி யெழுப்பினார்கள் மாணவர்கள். இன்று நினைப்பினும் எங்களுக்கு மயிர்கூச் செறிகின்றதையா.

அடுத்த நாள் தங்களைக் காஞ்சி, பல்லவ மாளிகையில் கண்டோம். அந்நாள் எங்கள் வாழ்க்கையில் என்றென்றும் மறக்க இயலாத நாள். இனியும் வாய்க்கப் போகாத நாள், ஐயா! அன்று எங்களுக்கு அறிவுக் கண்களைத் திறந்து வைத்தீர்கள். எத்தனைப் பிறப்பெடுப்பினும் தமிழர்கள் தங்களுக்கு நன்றிக் கடன் முழுமையாக ஆற்ற இயலாதையா. தாங்கள் அன்று எங்களிடம் மனம்விட்டுக் கூறினீர்களே—அந்தச் சொற்கள் எந்நாளும் எங்கள் வாழ்க்கையில் மறக்காவே! நாங்கள் எவ்வளவு பெரிய அறிஞரைத் தலைவனாகக் கொண்டுள்ளோம் என்று எண்ணும் போது எங்கள் உள்ளங்கள் இறும்பூதெய்துகின்றன. நாங்கள் வேண்டுவதெல்லாம் தாங்கள் இன்னும் பல கோடி ஆண்டுகள் தமிழுக்கெனவும், தமிழருக்கெனவும், தமிழ்நாட்டிற்கெனவும் வாழ வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றோம். —இல. இராமதாசு (அரிமா அறைவோன்)
சா. சு. மணியம்-காஞ்சிபுரம்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.